# விதைகள்...

பாகம்-14

# விதைகள்...

## பகுதி 14

## முதன் முதல் சில நிமிடங்கள்... :

உங்களோடு மனசுவிட்டு சில நிமிடங்கள்... :கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உங்களெல்லோரையும் வாழ்த்தி; இந்த விதைகள் 14—ஆவது பகுதிக்குள் அழைத்துச் செல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். சாத்தானின் தந்திர, சதி ஆலோசனைகளை தகர்த்து; தடைகளை நீக்கி, இந்தத் தரிசனத்தின் தொடர் ஓட்டத்தை வெற்றியாக்கிக் கொடுத்த தேவாதி தேவனுக்கு கோடி கோடி நன்றிகளை செலுத்துகிறேன்.

ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதுக்குள்ளும் இயற்கையாகவே பல காரியங்கள் புதைந்து கிடக்கின்றன. கால ஓட்டத்தில் அவை புகைய ஆரம்பிக்கின்றன; அந்தப் புகை கேள்விக்குறிகளின் ரூபத்தில் வெளியேறி வருகின்றன! நான் யார்? நான் எங்கேயிருந்து வந்தேன்? என்னை இந்தப் பூமிக்கு அனுப்பியது யார்? ஏன் அனுப்பினார்? அனுப்பினதில் ஏதாவது நோக்கம் உண்டா? உண்டென்றால் அந்த நோக்கம் நிறைவேறியிருக்கிறதா? நிறைவேறாவிட்டால் அதை நிறைவேற்ற நான் என்ன செய்ய வேண்டும்? அதை நிறைவேற்றுவதற்கு தேவன் என்னென்ன செய்து வைத்திருக்கிறார்? இப்படிப்பட்ட கேள்விகள் அடுக்கடுக்காய் வெளியே வந்து கொண்டே இருக்கின்றன.

வாழ்ந்து வாழ்ந்து சோர்ந்து போன இதயங்கள், வாழ முடியாமல் தோற்றுப் போன இதயங்கள், வாழப் பிடிக்காமல் விரக்தியின் எல்லைக்கே ஓடிவிட்ட இதயங்கள்! இப்படிப்பட்ட உள்ளங்களிலிருந்து எழும்பும் ஓலங்கள் தான் இப்படி கேள்விகளாக வெளியே வருகின்றன. என்ன வாழ்க்கை இது? இவ்வளவு கஷ்டப்பட்டு எதற்காக வாழ வேண்டும்? எதுவுமே என் விருப்பப்படி இல்லையே? ஏன் இப்படி என்று புரியலையே? இப்படியே பல வார்த்தைகளை மாற்றிப் போட்டுப் போட்டு கேள்விகள் ஒவ்வொன்றாக வந்து கொண்டே இருக்கின்றன.

மனிதர்களின் இந்தப் பரிதாப நிலைகளைப் பார்த்து நான் வருத்தப்பட்டாலும்; இப்படிப்பட்ட கேள்விகள் எழும்புவதை வரவேற்கிறேன்! கேள்விகள் இல்லாமல் பதில் வருவதில்லை. பதில் தேடும் இதயங்களே, முதலில் கேள்விகளை மனதிற்குள் உருவாக்குங்கள்! கேள்வி என்ற சாவி இல்லாவிட்டால் பதில் என்ற பூட்டைத் திறக்க முடியாது! ஒன்றையொன்று இயக்காத பூட்டும் சாவியும் வெறும் இரும்புத் துண்டுகள் தான்! மீண்டும் சொல்கிறேன் "எந்தப் பூட்டுமே சாவிகள் இல்லாமல் உருவாக்கப்படுவதில்லை"

இயேசுவின் முதலாம் வருகைக்கு பல காரணங்கள் உண்டு; அவற்றில் இதுவும் ஒன்று! உங்கள் கேள்விகளுக்கு கர்த்தருடைய ஆவியானவர் கொடுக்கும் பதில் அந்த கேள்விக்குறியின் கூனலையே நிமிர்த்திவிடும்! (அதாவது "?" ன் கூன் நிமிரும்போது அது "!" ஆக மாறிவிடும்!)

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.**


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91 - 461 - 320 97 37
அலைபேசி: +0-94424 66250 & +0-90034 56506

Email : **sovereignjesus@gmail.com**
Web : **www.tamilchristian.com/ebook**

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91 - 461 - 320 97 37**
**Mobile: +0-94424 66250 & +0-90034 56506**

Email : sovereignjesus@gmail.com
Web : www.tamilchristian.com/ebook


## இருட்டில் தொலைத்ததை வெளிச்சத்தில் தேடும் மனிதன்! ... :

மனிதன் அப்படி எதைத் தொலைத்து விட்டான்? வேறென்ன, தன்னுடைய வாழ்க்கையைத் தான்! மனிதன் இந்தப் பூமியில் வந்து பிறந்த பிறகு எதிர்பாராமல், அல்லது புத்திகெட்டதனத்தால் தன்னுடைய வாழ்க்கையை தொலைத்து விட்டிருந்தானானால் பரவாயில்லை, சகித்துக் கொள்ளலாம்! ஆனால் இந்தப் பூலோகத்தில் வந்து பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையைத் தொலைத்து விட்டுத்தான் பிறக்கிறான் என்ற உண்மை தான் சகித்துக் கொள்ள முடியாத ஒன்று!

ஒட்டுமொத்த மனுக்குலத்தின் பிரதிநிதியான நம்முடைய முப்பாட்டன் ஆதாம் ஆதியாகமம் 3–ஆம் அதிகாரத்தில் மனுக்குலத்தின் வாழ்க்கையை தொலைத்துப் போட்டது நம் எல்லோருக்கும் தெரியும். அன்று முதல் பூமியின் மீது பிறக்கும் குழந்தைகளின் அழுகுரல் இன்னும் ஓயவில்லை! பிறந்தவுடன்

குழந்தை ஏன் அழுகிறது? என்று கேள்வி உள்ளத்தில் என்றைக்கேனும் எழும்பினதுண்டா? எழும்பியிருக்காவிட்டால் இன்று கேள்வி எழுப்புங்கள்! கேள்விக்குறியின் கூன் நிமிர்த்தப்படும்!

***"ஒரு ஓய்வுநாளில் அவர் (இயேசு) ஜெபஆலயத்தில் போதகம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது பதினெட்டு வருஷமாக பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள். அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள் (... bowed ... and could in no wise lift up herself). இயேசு அவளைக் கண்டு, தம்மிடத்தில் அழைத்து: ஸ்திரீயே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய் என்று சொல்லி, அவள்மேல் தமது கைகளை வைத்தார்; உடனே அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள் (... she was made straight, and glorified God). (லூக். 13: 10 –13)"***

நிமிரக்கூடாதிருந்த அந்த கூனியின் நிலைமையில் தான் உலக மனிதர்களின் இன்றைய நிலை இருக்கிறது. வாழ்க்கையின் சாராம்சம் புரியாமல், வாழ்வதற்குத் தேவையான பிரமாணம் தெரியாமல் மனிதர்கள் கடும் தொல்லையில் அடிபட்டு கூனித் திரிகிறார்கள் (பிர. 1:13). வாழ்க்கையின் நிதர்சனம் அவர்களுக்கு புரியாத புதிராக இருக்கிறது. மனிதனின் வாழ்க்கை நிலையை பார்க்கும் போது; அது மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாயிருக்கிறது ***(useless)*** என்று பிரசங்கி அடிக்கடி புலம்புவதைப் பார்க்க முடிகிறது. வாழ்க்கை முழுவதும் வலி நிறைந்த அனுபவங்களை சுமந்து சுமந்து; எந்தவொரு நோக்கமுமில்லாமல் தரிசனமுமில்லாமல் செத்து மடியும் பரிதாப மனிதன்! அவனோடு அவனுடைய கணக்கிலடங்காத கேள்விகளும் கல்லறைக்குள் வைத்து மூடப்படுகிறது, இல்லாவிட்டால் சுட்டெரிக்கப்படுகிறது.

தன்னுடைய பிறப்பின் இரகசியம் அடங்கிய ***file***-த் தொலைத்து விட்டான்! அந்த ***file***-க்குள் அவனுடைய ஆரம்பம் முதல் முடிவு வரையிலுமான காரியங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ***File***-க்குள் அவ்வப்போது நடக்கும் காரியங்களைக் குறித்த ***reports*** அடுக்கப்படுகிறது. அவைகள் வருங்காலத் திட்டங்களுக்கான ***reference*** எடுக்க, பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமான கோப்புகள் தொலைந்து விடும் போது அலுவலகங்களில் வேலையே ஸ்தம்பித்துவிடும். மேற்கொண்டு காரியங்களைச் செய்ய முடியாமல் கையை பிசைந்து கொண்டு நிற்க வேண்டிய நிலை வரும்; இப்படிப்பட்ட காரியங்களை நாம் பார்த்து வருகிறோம். மனிதனின் வாழ்க்கையும் ***Life***-ம் இப்படித்தான் ஸ்தம்பித்து விட்டது!

இந்தப் பிரச்சனைக்கு என்ன நிவாரணம்? தேவனுடைய வார்த்தைகளை எடுத்துப் போதிப்பது ஒன்று தான் அதற்கான நிவாரணம். இயேசுவின் போதகம் கூனியின் முதுகை நிமிரச் செய்ததைப் பார்க்கிறோம். கூனலை நிமிரச் செய்யும் பிரசங்கங்கள் இன்று தேவை! அதாவது கேள்விக்குறிகளை நேராக்கும் பிரசங்கங்கள் சபைக்குள் மட்டுமல்ல வெளியேயும் தேவை. அதற்காகத்தான் தேவன் சபையில் ***... எபே. 4:13 அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.*** எல்லா தரப்பினருக்குமே சுவிசேஷம் தேவை; தேவனற்ற புறமதஸ்தர்களுக்கும், பாரம்பரிய பெயர்க்கிறிஸ்தவர்களுக்கும் தேவை. தேவனை ஏற்றுக் கொண்ட பிறகும் கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிற நியாயப்பிரமாணம் சார்ந்த தேவ பிள்ளைகளுக்கும் சுவிசேஷம் தேவை. இருதயம் மறுரூபமாக்கப்பட்ட, பிரகாசமுள்ள மனக்கண்களை உடைய, வெளிப்பாடுகளைப் பெற்ற நமக்கும் சுவிசேஷம் தேவை! ஏனென்றால் ***"ஒருவன், தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை. 1 கொரி. 8:2"***

நாம் தொடர்ச்சியாக தேவனைப் பற்றிய அறிவில் வளர்ந்து கொண்டேயிருப்பது அவசியம். ஏனென்றால் நாம் அவரைப் போலிருக்கிறோம்; அதனால் அவரைப் பற்றி அதிகமதிகமாக தெரிந்து கொள்வதன் மூலம் நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்கிறோம். தேவனைப் பற்றி சரிவர எதுவும் தெரியாதவனுக்கு தன்னைப் பற்றியும் சரிவர எதுவும் தெரியாது என்றாகிறது.

தன்னையே சரியாக தெரியாத ஒருவன் அடுத்தவனுக்கு சரியானதை எப்படிச் சொல்ல முடியும்? அப்படிச் சொன்னால் பதிலுக்கு அவன் உன் வேலையைப் பார் ***(keep it to yourself!)*** என்பானே! இது தேவையா நமக்கு?

தேவனை அறிந்து கொள்வோம்; அவரைப் போலவே அவரால், அவர் மூலமாக, அவருக்கென்று உருவாக்கப்பட்டிருக்கும் நம்மையும் அறிந்து கொள்வோம். பிறகு சுவிசேஷம் சொல்லுவோம்; என்ன நடக்கிறது என்று பாருங்கள்! அவர்கள் சுவிசேஷம் சொன்ன போது துண்டைக் காணோம், துணியைக் காணோமென்று ஓடிப்போனவர்கள் தானாகத் திரும்பி வருவார்கள்! விஷயத்தை சரியாகப் புரிந்து கொண்டு சரியான ரீதியில் அறிவிக்கப்படும் சுவிசேஷத்திற்கு இன்றளவும் நல்ல வரவேற்பு இருக்கிறது.

## கேளுங்கள் ... தட்டுங்கள் ... தேடுங்கள் :

***"... நான் (இயேசு) உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். லூக். 11:9"***

தேடுங்கள்... ***(seek - search for something)*** அப்பொழுது கண்டடைவீர்கள் என்றார் நம் தேவன் இயேசு. ஏதாவது ஒன்றை நாம் தேடுகிறோம் என்றால் அதற்கு முன்னதாக ஒரு காரியம் நடந்திருக்கிறது; அது என்ன? அதாவது நாம் தேடுகிற ஒன்றை ஏற்கெனவே தொலைத்து விட்டோம் என்று அர்த்தம். தொலைத்ததினால் தான் தேடிச் செல்லுகிறோம். அப்படி நாம் எதை தொலைத்து விட்டோம்? எங்கே தொலைத்தோம்? தொலைத்ததைத் தேட முடியுமா? தேடினால் கண்டிப்பாகக் கிடைக்குமா?

இந்த கேள்விகளுக்கும் இயேசுவே பதில் சொல்கிறார்; அடுத்த வசனத்திலேயே சொல்கிறார் ***தேடுகிறவன் கண்டடைகிறான்*** என்று! லூக். 11:10 தேடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேடாவிட்டால் கண்டுபிடிக்கவும் முடியாது; அதுவாக தானாக வந்து உங்கள் முன்னே நிற்காது? ஏன் இப்படியாயிற்று? இந்த உலகத்தில் நாம் தான் செயல்பட்டாக வேண்டும், இந்த உலகத்தை நாம் தான் இயக்கியாக வேண்டும். அப்படிப்பட்ட ரீதியில் தான் தேவன் நம்மை வடிவமைத்திருக்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனால் சகலத்தையும் செய்து முடிக்க முடியும் என்றாலும்; நம்மைக் கொண்டு தான் அவர் இயங்கியாக வேண்டும். ஏனென்றால் தேவன் அவரைப் போலவே நம்மை சிருஷ்டித்திருந்தாலும்; அவருக்கில்லாத சரீரத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நம்மைக் கொண்டு தான் தேவன் இந்த பூமியின் மீது எதையும் நடப்பிக்க முடியும் என்ற உண்மையை அநேகர் ஒத்துக் கொள்வதில்லை. நாம் இல்லாவிட்டால் தேவன் இந்த பூமியின் மீது எதையுமே நடப்பிக்க முடியாது என்பது அதிர்ச்சியாக இருந்தாலும்; அது தாங்க சரியான உண்மை!

அதனால் தான் நம்மை ஜெபிக்க சொல்கிறார், வேதத்தைத் தியானம் செய்து ஆராயச் சொல்கிறார். விசுவாசிக்கக் கற்றுக் கொள்ளச் சொல்கிறார், விசுவாசத்திற்கேற்ற கிரியைகளை நடப்பிக்கச் சொல்கிறார். விசுவாசித்ததை அறிக்கையிடச் சொல்கிறார், நன்மையானதை தெரிந்து கொள்ளும்படி சொல்கிறார். விசுவாசத்தைவிட அன்பே பெரியது என்ற இரகசியத்தையும் புரிந்து கொள்ளச் சொல்கிறார்! இப்படியே வேதம் முழுவதிலுமாக நாம் செய்ய வேண்டிய காரியங்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

***"... உன்னோடே கூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும். யாத். 34:10."*** அவர் தனித்து இயங்காமல் நம்மோடு கூட இருந்து இயங்குகிறார் என்று பார்க்கிறோம். வேதத்தில் தேவனுடைய இத்தகைய செயல்பாடுகளை பல இடங்களில் பார்க்க முடியும். உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து சென்ற ஆசாரியர்களுடைய கால்கள் யோர்தானில் பட்டவுடன் யோர்தான் நதியின் தண்ணீர் குவியலாக நின்ற சம்பவம் (யோசுவா. 3: 15, 16).

ஆகையால், நான் (பிதாவாகிய தேவன்) என் கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நான் செய்யும் சகல வித அற்புதங்களாலும் அதை வாதிப்பேன்; ... யாத். 3:20. தேவன் தன் கையை நீட்டுவதாக சொல்கிறார்; ஆனால் சம்பவ இடங்களிலெல்லாம் கையை நீட்டுவது மோசே தான் என்று பார்க்கிறோம்! (வாசித்துப் பாருங்கள்). சரி, திரும்பவுமாக விட்ட இடத்திற்கு வருவோம். நமக்கான காரியங்கள் எல்லாம் தயாராக இருக்கிறது; ஆனால் நாம் தான் தேடிப் போக வேண்டும் என்று பார்க்கிறோம்.

மாசிடோனியா நாட்டின் அரசன் பிலிப்பிடம் ஒரு அரேபிய வியாபாரி தன்னுடைய முரட்டுக் குதிரையை விற்பதற்காக கொண்டு வந்தான். அரசன் அதை வாங்கி தன்னுடைய தளபதிகளிடம் கொடுத்து அதை அடக்கும்படி சொன்னான். எல்லோரும் அடக்க முயன்று தோற்றுப் போனார்கள். இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்து பிலிப்பின் 13 வயது மகன் அலெக்சாண்டர் தன் தந்தையிடம் தனக்கும் ஒரு வாய்ப்பு கொடுக்கும்படி கேட்டான். அரசன் ஒப்புக் கொள்ளவில்லை, என்றாலும் இளவரசன் பிடிவாதம் பிடிக்கவே, வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டான். உடனே அலெக்சாண்டர் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து எதிர்திசையில் அதை திருப்பி; அதன் மீது ஏறி அமர்ந்து அரண்மனையை சுற்றி வந்தான்.

ஆச்சரியப்பட்ட அனைவரும் அவனுடைய சாதனையின் இரகசியத்தை கேட்டனர். அதாவது முதலில் குதிரை நின்றிருந்த திசையில் அதனுடைய நிழல் கீழே தெரிந்ததால் நிழலைப் பார்த்த குதிரை அடங்க மறுத்தது. அதைத் திருப்பி எதிர்திசையில் நிறுத்திய போது; எளிதாக கையாள முடிந்தது. இப்படியாக அடங்காபிடாரியாக இருந்த குதிரையை அடங்கிய பிடாரியாக மாற்றிக் காட்டினான் நம்முடைய சிறுவயது சரித்திர பாடப்புத்தகத்தின் ஒரு கதாநாயகனான இளவரசன் அலெக்சாண்டர்! ஒரு காரியம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் சரி; நிச்சயமாக அதை செய்து முடிக்கக்கூடிய சுலபமான ஒரு வழி இருக்கத்தான் செய்யும். அந்த வழியை தேடி கண்டுபிடிப்பது தான் கெட்டிக்காரத்தனம்.

எப்படித் தேடுவது? லூக். 15:8ம் வசனத்தில் வருகிற பெண்ணைப் போலத் தேட வேண்டும். காணாமல் போன வெள்ளிக் காசைக் கண்டுபிடிக்க அவள் விளக்கை கொளுத்தி, வீட்டைப் பெருக்குகிறாள், தேடுகிறாள் ... தேடுகிறாள் ... தேடுகிறாள். அவள் தொலைத்த வெள்ளிக் காசு மாயமாக எங்கும் போய்விடவில்லை, அது அவள் வீட்டுக்குள் தான் இருந்தது. அதைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் தேடுகிறாள். அவள் அதை கண்டுபிடிக்கும் காலத்துக்கும்; அவள் தேட ஆரம்பித்த நேரத்திற்கும் இடைப்பட்ட காலகட்டம் எவ்வளவு? அது அவளுடைய பிரயாசத்தை பொறுத்தும், ஆர்வத்தைப் பொறுத்தும், ஞானத்தைப் பொறுத்தும் அமைகிறது.

***"... ஒரு ஸ்திரீ பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதை கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து: காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடு கூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா? (லூக். 15: 8,9)"***

கண்டுபிடிக்கும் போது சந்தோஷம் உண்டாகிறது; அதுமட்டுமல்லாமல் அடுத்தவர்களுடனும் அந்த சந்தோஷத்தை பகிர்ந்து ***(share)*** கொள்ள முடிகிறது, பங்கிட்டுக் ***(Divide)*** கொடுக்க முடிகிறது, விநியோகம் ***(Distribute)*** பண்ணவும் முடிகிறது. நம் பரலோக தகப்பன் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே நமக்காக ஏற்படுத்தின சகல ஆசீர்வாதங்களையும், ஐசுவரியங்களையும், செழிப்பையும் ஆதாம் தொலைத்து விட்டதால் நாம் தேடித் திரிய வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாகிப் போனோம். தொலைத்தது ஆதாம் தான் என்றாலும்; அவன் ஒட்டு மொத்த மனித குலத்தின் பிரதிநிதி என்பதால்; நாமெல்லோரும் சேர்ந்து தொலைத்ததாகத்தான் அர்த்தம்! அதனால் தான் நாம் ஒவ்வொருவருமே தொலைந்து போன நம்முடைய சுதந்திரத்தைத் தேட வேண்டியது அவசியம். உலக ரீதியில், மூளை அறிவின்படி, தன்னம்பிக்கையோடு அவற்றைத் தேட முடியாது. அப்படி நாம் தேட முயற்சித்ததினால்

தான் தோற்றுப் போய்க்கொண்டே இருக்கிறோம். அப்படியானால்... ? வேத வசனங்களின் வெளிச்சத்தில் தான் அவைகளைத் தேடிச் செல்ல வேண்டும்.

இளவரசன் அலெக்சாண்டரைப் போல பிரச்சனை என்ன? என்பதைக் கவனிக்க வேண்டும். பூட்டைத் திறக்க எளிதான வழி அதன் சாவித்துவாரத்தின் வழியாக அதன் சாவியை விடுவது தான். அதைவிட்டுவிட்டு பூட்டை உடைத்து வேலையை கஷ்டமாக்கிக் கொள்கிறோம். சபை, காணாமல் போனதை தேடுவதற்கு இந்தக் கடினமான வழியைத்தான் தெரிவு செய்திருக்கிறது. சபையில் அதைத்தான் போதனையாகவும் கொண்டு வருகிறார்கள். பூட்டைத் திறக்க சாவியை கொடுப்பதை விட்டுவிட்டு; ஆளுக்கொரு சுத்தியலைக் கொடுக்கிறார்கள். சுத்தியடியினால் எழும்பும் ஓசைகள் காதைக் கிழிக்கிறது; சிலருக்கு கையில் காயம், இரத்த ஒழுக்கு ! சிலருக்கு சுத்தியலைத் தூக்கவே திராணியில்லை, சிலருக்கு உடைக்கத் தெரியவில்லை, சிலர் எவ்வளவுதான் அடித்தாலும் பூட்டு உடையவில்லை, ஊகூம் அசைய மாட்டேன் என்கிறது !

எதையாவது தொலைத்து விட்டு; பிறகு அதைத் தேடித்தேடியே வாழ்க்கையின் பெரும்பகுதியை தொலைத்தவர்களில் என்னைப் போல பேர் போனவர்கள் யாரும் இருக்க முடியாது என்று நான் என்னையே கிண்டலடித்துக் கொள்வதுண்டு. வீட்டில் ஒரு பொருளை எடுத்து, உபயோகித்து விட்டு, அதை எடுத்த இடத்தில் வைக்காமல், வேறு இடத்தில் வைத்துவிடுவதால்; இப்படிப்பட்ட என்னுடைய தேடல்கள் ஒரு சலிப்பு நிறைந்த தொடர்கதையாக போய்க்கொண்டே இருந்தது ! உதாரணத்திற்கு ***screw driver, tape, pencil, hairpin, needle*** இப்படிப்பட்ட காரியங்களைச் (ஏறக்குறைய 50 – 100 வரையிலும் இருக்கும் !) சொல்லலாம். இடம் மாற்றி வைக்கப்பட்ட பொருட்களைத் தேட ஆரம்பிக்கும் சில நிமிடங்களிலேயே சலிப்புத் தட்டி விடுவதால்; அது இனிமேல் கிடைக்காது என்ற முடிவுக்கு வந்து விடுவேன். இதனால் கண்டுபிடிக்கப்படாமல், எங்கேயோ ஒளிந்திருக்கிற இப்படிப்பட்ட பொருட்களை திரும்பத் திரும்ப புதிதாக வாங்கிப் போட்டுக் கொண்டேயிருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. இதனால் நடந்தது என்ன?

தேவையில்லாத மன உளைச்சல், கோபம், எரிச்சல் ஏற்பட்டது. திரும்ப வாங்கும் போது அனாவசியமான பணவிரயம் வந்தது. புதியதாக ஒன்றை வாங்கிய பிறகு ஒளிந்திருந்த பொருள் வெளியே தலையை நீட்டும் ! (அப்போது நச்சென்று அதன் தலையில் ஓங்கி கொட்டலாம் போல இருக்கும் !) இப்படிப்பட்ட பழக்கம் தொடரும் போது சில துளி பெரும் வெள்ளம் என்ற பழமொழியின் அடிப்படையில் பொருளாதாரத்தையே சுரண்ட ஆரம்பித்தது. அதன் அளவு புறக்கணிக்கத்தக்க அளவில் சிறியதாக இருந்தாலும்; நாளடைவில் அதன் தாக்கம் நிச்சயமாக வெளியே தெரிய ஆரம்பிக்கும். சிறிய ஓட்டையினால் தான் பெரிய கப்பல்கள் கூட மூழ்கி சோக சரித்திரம் படைத்திருக்கின்றன ! பெரிய ஓட்டையினால் கப்பல் மூழ்கியது என்ற செய்தியை யாரும் கேள்வி பட்டிருக்கவே முடியாது. ஏனென்றால் பெரிய ஓட்டை இருப்பது முதலிலேயே அப்பட்டமாக தெரிந்துவிடும் என்பதால்; கப்பலையே கடலுக்குள் அனுப்ப மாட்டார்களே !

இந்த சோகம் ***tragedy (financial ruin)*** ஏன் நடந்தது? காணாமல் போனதை தேடத் தவறியதால், தேடப் பிடிக்காததினால், சோம்பேறித்தனத்தினால் ! மிக முக்கியமாக தேடுங்கள்... கண்டடைவீர்கள் என்ற வசனத்தை விசுவாசிக்க திராணியில்லாததினால் ! ஒட்டு மொத்த மனிதனின் இக்கால கேவலங்களுக்கு காரணமும் இதுவே தான் ! தேடுவதை விட்டுவிட்டு, தொலைந்து போனதற்கு பதிலாக ***(substitute)*** வேறு எதையாவது ஒன்றை ஏற்படுத்திக் கொண்டான் ! இந்த மாற்று முறை ***replacement*** அவனுக்குச் சரியாக வருகிறதா? பிரயோஜனமானது தானா? தொலைந்து போனதை இது ஈடுகட்டுமா? ஏதாவது புதிய பிரச்சனைகள், ஆபத்துகள் வருமா? இப்படி எதைப்பற்றியும் யோசிக்க நேரம் இருப்பதில்லை, எல்லாம் அவசரம், எதிலும் அவசரம் ! இப்படியாக மனிதனின் கண்டுபிடிப்புகள் தொடர்கதைகளாகி, அச்சுக் கோர்க்கப்பட்டு, புத்தகங்களாகி, புத்தகசாலையில் ***(Library)***ல் அடுக்கப்பட்டது. அடுத்த சந்ததி அதை வாசித்து; அதைத் தங்களுடைய புதிய நாவலுக்கு முன்னுரையாக்கிக் கொண்டனர்.

உலகத்தில் மாத்திரமல்ல, சபையிலும் இந்த விபரீதம் தொடர்ந்தது. சமய சடங்காச்சாரங்கள், உடையலங்காரத்தில் மாற்றங்கள், உருட்டல்கள், மிரட்டல்கள், உபதேச குழப்பங்கள் இப்படிப்பட்ட எல்லாமே மனிதன் தொலைந்து போனதைத் தேடாமல் விட்டதினால் தான்! வேதத்தின் எழுத்துக்கள் சரீரக் கண்களினால் பார்க்கக்கூடியவைகளாக இருந்தாலும் உண்மையில் அவைகள் ஆவிக்குரியவைகளே! அதனால் தான் வேதத்தை வாசிக்கும் போது பல நேரங்களில் எதுவும் புரிவதில்லை. சலிப்புத் தட்டிவிடுவதால் வாசிப்பதாக பெயர் பண்ணி விட்டு மூடி வைத்து விடுகிறோம், அல்லது வாசிப்பதே இல்லை! அதனால் தான் ஆவிக்குரிய வேத எழுத்துக்களை வாசித்து புரிந்து கொள்வதற்கேதுவான ஆவிக்குரிய கண்களை நாம் பெற்றுக் கொள்வதற்காக பவுல் ஜெபிக்கிறார்.

நியாயப்பிரமாணத்தின்படி தேடினாலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் அது தோல்வியடைந்த பிரமாணம், அதனால் அதைச் செயல்படுத்த முடியாது. ***(Fuse போன பல்பை கொண்டு போய் holder மாட்டினால் லைட் (மின்விளக்கு - light bulb) எரியாது. எத்தனை முறை திருகினாலும் எரியாது, எப்படி அழுத்தினாலும் எரியாது!)*** அதற்கு மாற்றாக இயேசுவின் மூலம் தேவன் சிலுவையில் ஏற்படுத்தின புதிய பிரமாணமாகிய சுயாதீனப் பிரமாணம் நம்முடைய தேடல்களுக்கு ஏற்றதாக அமைகிறது.

தேவன் சுயாதீனமுள்ளவர்; ***(Freedom - right to choose)*** அதனால் நம்மையும் அவருடைய ரீதியில் சுயாதீனமுள்ளவர்களாகத்தான் ஆரம்பத்தில் உருவாக்கினார். ஏதேனில் சுயாதீன பிரமாணம் தான் நடைமுறையில் இருந்தது. நியாயப்பிரமாணம் வரும் வரையில் சுயாதீனப் பிரமாணம் தான் செயல்பாட்டில் இருந்தது. அப்படியிருந்தும் அக்காலக் கட்டங்களில் யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. சிலுவைக்குப் பிறகு வாழ்கிற நாம் தான் இந்தப் புதிய பிரமாணத்தின் அடிப்படையில் செயல்பட்டு காணாமல் போனதைக் கண்டுபிடித்திருக்கிறோம். அப்படி கண்டுபிடிக்கப்பட்ட காரியங்கள் தான் விதைகள் புத்தகங்களில் எழுதப்பட்டு, உங்களிடம் வருகிறது. சிறுவன் அலெக்சாண்டர் பிரச்சனைக்கு ஒரு எளிதான வழியை கண்டுபிடித்தான். இதுபோன்ற காரியங்கள் தான் பிற்காலத்தில் அவனை மாவீரன் அலெக்சாண்டராக்கியது.

இரவு நேரம்... கம்பத்தின் மேல் தெருவிளக்கு எரிந்து கொண்டிருந்தது ... ஒரு மனிதன் அதன் வெளிச்சத்தில் குனிந்து எதையோ தேடிக் கொண்டே இருந்தான். அந்த வழியாக வந்த ஒரு பெரியவர் அவனைப் பார்த்து தம்பி, எதையாவது தொலைத்து விட்டாயா? என்று கேட்டார். ஒரு நூறு ரூபாய் நோட்டு சட்டைப் பையிலிருந்து விழுந்து விட்டதாகச் சொன்ன அந்த மனிதன் தன் தேடலைத் தொடர்ந்தான். அவனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவனுடன் சேர்ந்து தேடத் துவங்கிய பெரியவர் அவனைப் பார்த்து தம்பி, ரூபாய் இங்கே தான் விழுந்தது என்று நிச்சயமாகத் தெரியுமா? என்று கேட்டார். அதற்கு அந்த மனிதன் இங்கே விழவில்லை, அதோ அங்கே தூரத்தில் தெரிகிறதே ஒரு பெரிய மரம் அங்கே தான் பணத்தைத் தொலைத்தேன். அங்கே இருட்டாக இருந்ததால் கண்ணுக்கு எதுவும் தெரியவில்லை, அதனால் இங்கே வெளிச்சத்தில் வந்து தேடுகிறேன் என்றானே பார்க்கலாம்! பெரியவர் அதிர்ச்சி அடைந்தார், அவர் அதிர்ச்சி அடைந்தது ஒரு பக்கம் இருக்கட்டும், நான் அதிர்ச்சியின் மேல் அதிர்ச்சி அடைந்தேன். யாரையோ பார்த்து நான் அதிர்ச்சியடையவில்லை, என்னைப் பார்த்துத் தான்!

இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறாய் ஞானத்தங்கமே, அவர் ஏதும் அறியாரடி ஞானத்தங்கமே... ! பழம்பெரும் கவிஞனின் பாடல் திறந்திருந்த ஒரு ஜன்னலின் வழியாக உள்ளே வந்து கொண்டிருந்தது! எனக்கு திரும்பத் திரும்ப வேதனையளிக்கிற ஒரு காரியம் என்னவென்றால்; உலக மனிதர்களுக்கு நம்மை விட நிறைய விஷயங்கள் தெரிகிறதே என்பது தான். சபையில் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் எத்தனை நாளுக்குத்தான் இப்படியே ஏமாந்த சோணாங்கிரிகளாக இருக்கப் போகிறார்கள்?

தேவன் சிலுவையில் தான் காணாமல் போனதை கண்டுபிடிப்பதற்கான எளிதான வழியை

வைத்திருக்கிறார். சிலுவையில் என்ன நடந்தது என்பதை ஆராயும்போது அதைக் கண்டுபிடிக்க முடிகிறது. பழைய ஏற்பாட்டில் தேவன் ஏற்படுத்திக் கொடுத்த மோசேயின் நியாயப்பிரமாணம் மிகவும் கடினமான *(Tough & challenging)* ஒன்றாக இருந்தது. எவ்வளவு முயற்சித்தாலும் அவர்களால் முடியாமல் போனது. ஏனென்றால் தேவன் மோசேயிடம் கொடுத்ததற்கு காரணம்; அதன்படி நடக்க வேண்டும் என்பதற்காக அல்ல. அதன்படி நடக்க முயற்சித்தாலும் முடியாது என்பதை நிரூபிப்பதற்காகத் தான்!

***"எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். (wrongdoing) யாக். 2:10"*** நியாயப்பிரமாணத்திற்குட்பட்டிருந்த பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களும், இயேசுவின் சிலுவைப் பாடுகள் வரையிலுமான தேவஜனங்கள் தங்களுடைய முயற்சியில் தோல்வியடைந்து கொண்டே வந்ததைக் கவனியுங்கள். குதிரை அடங்க மறுத்தது, அடாவடித்தனம் செய்தது! தோல்வியை ஒத்துக்கொள்ள மனதில்லாமல் தலை குனிந்தபடி கீழே இறங்கினார்கள்! குதிரையை அடக்குவதற்கான எளிதான வழி இருக்கத்தான் செய்தது; ஆனால் யாரும் அதை கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடிக்க முடியவில்லை என்பதற்காக வழியே இல்லை என்ற முடிவுக்கு வந்து விடுவது சரியல்ல. தேடல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் சரியல்ல; சிலுவை கண்ணில் தெரியும் வரைக்கும் தேடிக்கொண்டே செல்ல வேண்டும். ஏனென்றால் தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரன் இயேசுவைக் கொண்டு; பிரச்சனைகளை சுலபமாக்கித் தந்த பிரமாணம் சிலுவைக்குள் தான் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது.

தன்னுடைய நிழலைப் பார்த்தே பயந்த குதிரையைப் போல, மோசேயின் பிரமாணம் மனிதனைப் பயத்திற்குள்ளாகத் தள்ளியது. எவ்வளவு தான் முயற்சித்த போதும்; இருதயத்திற்குள் இருந்து புறப்பட்டு வருகிற இரகசிய பாவமாகிய இச்சையை மேற்கொள்ள முடியாமல் போன போது; பயம் அவர்களை வாட்டி எடுத்தது! ஆனால் சிலுவையில் இயேசு எல்லாவற்றையும் தலைகீழாகத் திருப்பிப் போட்டுவிட்டார். எதிர்திசைக்கு திருப்பப்பட்ட குதிரை தன்னுடைய நிழல் தெரியாததினால் தைரியமடைந்ததைப் போல, இயேசுவின் பிரமாணம் மனிதனுக்குள் தைரியத்தையும், நம்பிக்கையையும் கொண்டு வந்தது. விசுவாசத்தை கட்டியெழுப்ப உதவி செய்தது, விசுவாசத்துடன் கிரியையையும் நடப்பிக்க ஊக்கப்படுத்தினது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசத்தை ஆரம்பிக்கச் ***actuate*** செய்தது.

## பரலோகத்தை வருத்தப்படுத்தாதிருப்போம்!:

***"...எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. (2 கொரி. 11:28)" நீங்கள் பாவஞ்செய்யாமல், நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன். 1 கொரி. 15:34***

என்று பவுல் புலம்பியதற்கு காரணமில்லாமலில்லை! தேவனைக் குறித்த அறிவில்லாதவர்களைப் பற்றி நமக்கென்ன? என்று கண்டும் காணாமல் போய்விட முடியாது. அவர்களுடைய அறியாமை என்னை மட்டுமல்ல, சபையையும், தலையாயிருக்கிற இயேசுவையும், அவரைக் கொண்டு தேவன் உருவாக்கிய பூமியையும், அதன் நிறைவையும் அது பாதிக்கிறது! அது மட்டுமா? தேவ பிள்ளைகளின் அறியாமை பரலோகத்தையும் பாதிக்கிறது!

அதெல்லாம் பாதிக்காது என்று நினைக்கத் தோன்றலாம்; கவனியுங்கள்: ***"... மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் ... லூக். 15:7"*** ஒரு மனிதன் மனந்திரும்பும்போது பரலோகத்தில் சந்தோஷம் உண்டாகிறது என்றால்; அதுவரையில் அவன் மனந்திரும்பாதிருப்பதைக் குறித்து பரலோகத்தில் ஒரு வருத்தம் உண்டாகியிருந்தது என்று தானே அர்த்தம்? (வேதத்தில் வருகிற மனந்திரும்புதல் என்ற

வார்த்தைக்கு, கண்கள் திறக்கப்பட்டு சத்தியத்தை அறிந்து கொள்ளுதல் என்று அர்த்தம். வெறுமனே பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படுகிற காரியத்தை குறிப்பிடவில்லை.

கண்களால் பார்க்க முடியாதிருக்கிற பரலோகம் தான் கண்களால் காணக்கூடிய பூலோகத்தை ஆளுகை செய்து வருகிறது. அப்படியிருக்க பரலோகத்தை வேதனைப்படுத்துகிற காரியத்தை பூலோகத்திலிருக்கிற தேவ சபை செய்யுமானால்; அதனால் பூலோகத்துக்குத் தானே பிரச்சனை? ஏற்கெனவே இருக்கிற பிரச்சனைகள் போதாதா? குறைவானதை எண்ணி முடியாது என்று ஞானி அங்கலாய்க்கிறானே! அப்படி எண்ண ஆரம்பித்தால் அது ஒரு அசுர எண்ணாகத்தான் இருக்கும் (?) – ஒரு எண்ணுக்குப் பிறகு நூறு ஜீரோக்களைப் போட்டால் வரும் எண்!)

தேவனைக் குறித்து அனுதினமும் அறிந்து கொண்டே இருப்பது நம் விசுவாசத்தை பெருகச் செய்கிறது. அந்த விசுவாசம் மலைகளைப் பெயர்க்கச் செய்கிறது. முன்னேறிச் செல்ல பாதைகள் கிடைக்கின்றன. தேவனைக் குறித்த அறிவு நம்மை செழிக்கச் செய்கிறது; பணத்தில் மட்டுமல்ல சகல ரீதியிலும். அந்தச் செழிப்பை நாம் தேவதிட்டத்திற்கு முதலீடாகப் போடும் போது பூமியே ஏதேனாக மாறும். அதனால் தேவனை அறிந்து கொள்ளும் விஷயத்தில் ஏனோதானோவென்றிருக்காமல் அதிக ஆர்வத்துடனிருப்போம்.

**“கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார். சந்தோஷமும் மகிழ்ச்சியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 51:3.”**

**“பாழாய்க் கிடந்த இத்தேசம், ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்றென்றும், அவாந்தரமும் பாழும் நிர்மூலமுமாயிருந்த பட்டணங்கள் அரணிப்பானவைகளும், குடியேற்றப்பட்டவைகளுமாய் இருக்கிறது என்றும் சொல்லுவார்கள். எசே. 36:35”**

சிலுவையில் வெறும் பாவத்திலிருந்து இரட்சிப்பு மாத்திரம் தான் என்று சொல்லி, சுவிசேஷத்தை குறுகிய கண்ணோட்டத்தில் பிரசங்கம் ***(minimize)*** செய்து விட்டார்கள். சுவிசேஷத்தைக் கொஞ்சம் பரந்த கண்ணோட்டத்தில் ***(maximize)*** பாருங்கள்; ஏதேனின் செழிப்பு அங்கே வெளிப்படுவதைப் பார்க்கலாம். தேவனை அதிகமதிகமாக அறிவதின் மூலம் அவர் நமக்காக என்னென்ன செய்திருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ளலாம். அது தெரிந்துவிட்டால் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் எடுப்போம், தொடர்ந்து முயற்சியும் எடுப்போம். விசுவாச முயற்சிகள் தோற்றதாக சரித்திரமே கிடையாது.

## தேவனுடைய முதலாம் திட்டம் *Vs* இரண்டாம் திட்டம்:

முதல் திட்டம் தோற்றுப் போனதைப் போல இந்த இரண்டாவது திட்டம் தோற்றுப் போகப் போவதில்லை. தேவனுடைய முதல் திட்டத்தை ஆதாம் நிறைவேற்ற ஆரம்பித்த போது அவனுக்கு இருந்த சூழ்நிலை இப்போது இல்லை. சிலுவைக்குப் பிறகு தேவனுடைய அதே திட்டம் மீட்கப்பட்ட மனிதர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறியதால் இந்தப் பூமிக்கு ஏற்பட்ட விபரீதங்கள் ... அது எண்ணிக்கைக்கு அடங்காதது! மனுக்குலம் இந்த பூமியின் மீது தோன்றிய பிறகு ஓடிய (சுமார் 6000 – 8000 வருஷங்களுக்குள்) இந்தப் பூமி சந்தித்து வரும் கர்ப்பவேதனைகளையும் ***(hard work)***, பாழ்க்கடிப்புகளையும் ***(joyless, without hope)***, துர்ச்சனப்பிரவாகங்களையும் ***(floods of ungodly men)*** நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். ஆனால் ஆதாமுக்கு இந்த விவகாரமெல்லாம் தெரியாது; ஏனென்றால் அவன் தான் உலகின் முதல் மனிதன். தன்னுடைய மீறுதலினால் இந்தப் பூமி இப்படியொரு மோசமான விளைவைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்று அவனுக்கு கொஞ்சமாவது தெரிந்திருக்குமேயானால் அவன் அந்தத் தவறைச் செய்திருப்பானா? நிச்சயமாக செய்திருக்க மாட்டான்!

அவனுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. அதுமட்டுமல்ல தேவனுடைய திட்டத்தைப் பூமியில் வெற்றியாக முடிக்க சிலுவையில் நமக்கு பல காரியங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இயேசு கிறிஸ்துவை உயிர்ப்பித்த அதே வல்லமை நமக்குள் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறது. இயேசு மகிமையின் நம்பிக்கையாக *(hope of extreme happiness)* நமக்குள் வசித்து வருகிறார். பரிசுத்தாவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறார்; நாம் அவருடைய ஆலயமாயிருக்கிறோம். அவர் நமக்கு வரங்களைத் தந்து கொண்டிருக்கிறார். நாம் மீட்கப்பட்டிருப்பதால் பாவத்தின் அகோரம் நமக்குத் தெரியும்; அதன் பலாபலன்கள் நமக்குப் புரியும். இப்படி இன்னும் பல காரியங்கள் ... ஆனால் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் இந்தக் காரியங்களெல்லாம் இல்லை. அப்போதைய காலக்கட்டத்தில் இந்தக் காரியங்களெல்லாம் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய அவசியமில்லாதிருந்தது, கொடுக்கவும் முடியாது. ஏனென்றால் **இந்த அனுகூலங்களெல்லாம் மீட்கப்பட்ட மனிதனுக்குத் தான்; ஆதாம் மீட்கப்பட்ட மனிதன் அல்ல !**

ஆதாமின் காலக்கட்டத்தில் பூமியின் மீது விழத்தள்ளப்பட்ட சாத்தான் ஏதேனில் உலாவிக் கொண்டிருந்தான். சாத்தான் தோற்கடிக்கப்படாததினால்; அவன் மனிதனை வஞ்சிக்கக்கூடிய சாத்தியக்கூறு நிறையவே இருந்தது. அதனால் தான் தேவன் ஆரம்பத்திலேயே ஆதாமை எச்சரிக்கை செய்கிறார். அப்போது ஆதாமுக்கு வெளியே இருந்து தான் தேவன் செயல்பட்டார்; இப்போதோ நமக்குள்ளாகவே இருந்து செயல்படுகிறார். திருமணத்தின் போது பெண்ணின் கையை பிடித்து மாப்பிள்ளையின் கையில் கொடுத்து; இனி நீ தான் பொறுப்பு என்று ஒப்படைப்பதைப் போல, நம் பிதாவாகிய தேவன் மீட்கப்பட்ட நம் ஒவ்வொருவருடைய கைகளையும் பிடித்து இயேசுவிடம் ஒப்படைத்து; இனி நீ தான் பொறுப்பு என்று விட்டு விட்டார்! *(யோவான் 17:6). யோவான் 17ம் அதிகாரம் முழுவதிலும் இதைப் பார்க்கலாம்.*

தேவன் ஆரம்பத்தில் ஏற்படுத்தின ஏதேன் பரலோகத்துடன் தொடர்புடைய ஒரு இடமாகவே இருந்தது. அந்தத் தோட்டத்தைப் போலவே மொத்த பூமியையும் மாற்ற வேண்டும் என்பது தான் தேவ திட்டம். அந்த வேலையைச் செய்வதற்காகத்தான் மனிதனை ஏற்படுத்தினார். ஆனால் ஆதாம், ஏவாள் என்ற இரண்டு பேரை மாத்திரம் உபயோகித்து அந்த மாபெரும் திட்டத்தை முடிக்க வேண்டும் என்று தேவன் யோசிக்கவில்லை. அப்படி நினைத்திருந்திருப்பாரானால்; அவர்களைப் பார்த்து பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கட்டளை கொடுத்திருக்க மாட்டார். பூமி முழுவதும் மனிதர்கள் பெருக வேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருந்தார். ஆதாம் மூலமாக அல்ல, அவன் மூலமாக பூமியெங்கும் பெருகப்போகிற மணலத்தனையான மனிதர்களின் மூலமாகத் தான், தன் திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டார். சிலுவையின் மூலமாக இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் தான் அவருடைய திட்டத்தைப் பரிபூரணமாக முடிப்பதற்கு சகல விதத்திலும் பொருத்தமானவர்கள். ஏனென்றால் அவருடைய திட்டத்தை முடிக்க தேவையான மூலாதாரங்கள் ***raw materials (something potentially useful)*** சிலுவையின் மூலமாகத்தான் நமக்குக் கொடுக்கப்பட்டன. ஏதேனில் அவை கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

அப்படியானால் ஆதாம் முதல் இயேசுவின் சிலுவை வரையிலுமாக வாழ்ந்த மனிதர்கள் யாருமே தேவனுடைய திட்டத்தை செய்து முடிக்கவில்லையா? என்பது உங்கள் கேள்வியானால் ஆம் என்பது தான் என்னுடைய பதில்! அவர்களெல்லோரும் தேவனுடைய திட்டத்தில் இருந்தார்கள், தங்களுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த வேலையைச் செய்தார்கள், சந்ததி சந்ததியாக வாழ்ந்திருந்து, தேவதிட்டத்தை முடிப்பதற்கேதுவாக நம்மை பெற்றெடுத்தார்கள்! கண்ணுக்குத் தெரியாத ஆவி ரீதியிலான மனிதர்களாகிய நாம் இந்த பூமியில் வாழ்வதற்கேதுவாக இந்தச் சரீரமாகிய கூடாரத்தைக் கொடுத்தது நம் ஆதி தகப்பனாகிய ஆதாமும் அவனுடைய வம்சாவழியினரும் தான்! அவர்களில்லாவிட்டால் நாம் பிறந்திருக்க மாட்டோமே!

***"அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே (... he might seek a godly seed) ... ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்கு துரோகம்***

***பண்ணாதபடிக்கு (treacherously), உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். (மல். 2:15).”*** நாம் கண்ணுக்குத் தெரியாத ஆவி மனிதர்கள் என்று பார்த்து வருகிறோம். தேவனிடம் ஆவி பரிபூரணமாக (நிறைய – எக்கச்சக்கமாக!) இருந்தது. அவர் நினைத்திருந்தால் ஆதாமை உருவாக்கும் போது கூடவே சேர்த்து நிறைய மனிதர்களைப் படைத்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படி செய்யாமல் ஒருவனை மாத்திரம் படைக்கிறார்; ஏவாளைக் கூட அவனிடமிருந்து தான் பிரித்து எடுக்கிறார். அதற்குப் பிறகு மனிதர்கள் அவர்களிடமிருந்தே பிறந்து வரும்படி ஏற்பாடுகளை செய்கிறார்.

ஏன் இப்படி செய்தார்? அப்படிச் செய்தால் தான் தேவபக்தியுள்ள சந்ததி உருவாகுமாம். அப்படியானால் தேவன் நிறைய மனிதர்களை படைத்திருந்தால் தேவபக்தியுள்ள சந்ததி உருவாகாது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. தேவபக்தி என்றால்... ? 24 மணி நேரமும் பைபிளும் கையுமாக தேவாலயத்தையே சுற்றி சுற்றி வந்து கொண்டிருப்பது (விசேஷித்த, எல்லா ஜெபக்கூடுகைகளிலும் கலந்து கொள்வது, எல்லா ஊழியங்களிலேயும் பங்கு கொள்வது) என்று தானே அர்த்தம்? அப்படித்தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்; ஆனால் அது அப்படியல்ல. தேவன் தான் படைத்த முதல் மனிதர்களின் மூலமாக தன்னைப் போலொத்த, தன்னுடைய ரீதியிலான, தன்னைப் போலவே சிந்தித்து, பேசி, செயல்படுகிற, தன்னுடைய தெய்வத்துவத்தை உள்ளடக்கிய, தன்னுடைய வித்தை ***(Godly seed)*** தன்னுள் பிறப்பிக்கிற மனிதர்களால் பூமி நிரம்ப வேண்டும் என்று விரும்பினார், ஆசைப்பட்டார், வாஞ்சித்தார்.

ஆனால் ... நடந்தது என்ன? இப்போது நாம் பார்ப்பது என்ன? தேவபக்தியுடைய தேவனைப் போலவே இருக்கிற ஒருவனைக் காட்டுங்க பார்க்கலாம்! பூமி முழுவதும் ஒரு போர்க்களமாக காட்சியளிக்கிறதே ஏன்? பூமியின் மீது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவது, தேவ இராஜ்ஜியத்தைக் கட்டுவது, சுவிசேஷம் சொல்லுவது... இதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதே பெரிய காரியமாக இருக்கிறதே! இந்தப் பூமிக்கு எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற திகிலில் மனிதர்கள்! விஞ்ஞானிகளின் திகிலுக்கு காரணமே அவர்களைப் போலொத்த மனிதர்கள் தான்! தேவன் ஒருவனை மாத்திரம் படைத்தும் தேவபக்தியுள்ள சந்ததியைப் பெற முடியாமல் போன அவல நிலை ஏன் வந்தது?

விதை மாறிப் போனது தான் காரணம்! தெய்வத்துவ வித்து (வார்த்தை தான் வேறெதுவும் இல்லை) விழ வேண்டிய இடத்தில் வேறொரு வித்து விழுந்து போனது தான் காரணம். அது சாத்தானுடைய வித்து என்று பார்க்கிறோம். ...உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; ... ஆதி. 3:15 ல் வருகிற விதை சாத்தானுடையது என்பதை அறியலாம். தேவனுடைய திட்டம் கெடுக்கப்படும் விதத்தில் அவருடைய வித்து விதைக்கப்படுவதற்குப் பதிலாக அந்த இடத்தில் சாத்தானுடைய வித்து (சாத்தானுடைய வார்த்தைகள்) விழுந்து முளைக்க ஆரம்பித்தது. அது வாழையடி வாழையாக, சந்ததி சந்ததியாக தொடர்ந்தது. இதனால் தேவன் எதிர்பார்த்த தேவபக்தியுள்ள சந்ததி தோன்றுவதற்குப் பதிலாக தேவபக்தியில்லாத, (அதாவது அவரைப் போல் இல்லாத) அவபக்தியுள்ள சந்ததி உருவானது. இப்போது நாம் பூமியின் மீது அப்படிப்பட்ட சந்ததியினரைத்தான் பார்த்து வருகிறோம்.

வசனத்தின் பிற்பகுதியில் விதை மாறிப் போவதற்கான காரணத்தைப் பார்க்கிறோம். மனைவிக்கு துரோகம் செய்கிற – கணவனுக்கு துரோகம் செய்கிற ***(unfaithfully)*** ஒழுக்கக்கேடான காரியங்கள் தேவபக்தியான சந்ததி உருவாவதற்கு தடையாக வருகிறது என்பதைப் பார்க்கிறோம். இது சரியல்ல என்பது போலத் தோன்றலாம். ஏனென்றால் இப்படிப்பட்ட பாவங்களெல்லாம் சரீரத்தில்தானே செய்யப்படுகிறது; அப்படியிருக்க தெய்வபக்தியான சந்ததி ***(Godly seed)*** எப்படி கெடுக்கப்படும் என்று தோன்றலாம். உள்ளான மனிதன் இதனால் பாதிப்படைவதில்லை என்று கூடத் தோன்றலாம். வசனத்தில் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடி உங்கள் சரீரத்தைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லப்படவில்லை; உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்லப்படுகிறது, கவனியுங்கள்!

மனைவிக்கு (கணவனுக்கு) துரோகம் செய்யும் காரியம் சரீரத்தில் தான் நடக்கிறது என்றாலும்; அதற்கு முன்னதாகவே அது ஆவியில் நடந்து விடுகிறது என்பதே உண்மை! நமக்குள்ளாக இருக்கிற ஆவிதான் உண்மையில் மனிதன்; வேதத்தில் சில இடங்களில் இது இருதயம் என்று குறிப்பிடப்படுகிறது. எதுவானாலும் இருதயத்திற்குள் தான் (ஆவிக்குள் – உண்மையான மனிதனுக்குள்) முதலில் விதைக்கப்படுகிறது. நாம் கண்களால் காண்கிற இந்த உலகம்; கண்களால் காணமுடியாத ஆவிக்குரிய உலகத்தால் இயக்கப்படுகிறது என்று பார்த்தோம். கண்களால் காணக்கூடிய நம் சரீரத்தை இயக்குவது கண்களால் காண முடியாத நம்முடைய ஆவி தான். நம்முடைய ஆவி எப்படியிருக்கிறதோ அதனடிப்படையில் தான் அது நம் சரீரத்தை இயக்குகிறது. நன்மையோ, தீமையோ நம் ஆவி எதை வெளிப்படுத்துகிறதோ; அதை வெளிக் கொண்டுவரும் நன்மையான தேவனுடைய வார்த்தையினால் அது நிரப்பப்பட்டிருந்தால்; அது சரீரத்தை நன்மைக்கேதுவாக இயக்குகிறது. சாத்தானுடைய கேடுகள் நிறைந்த வார்த்தைகள் நிரப்பப்பட்டிருந்தால்; அது சரீரத்தை பாவம் செய்வதற்கேதுவாக இயக்குகிறது. இப்போது புரிய ஆரம்பித்திருக்கும் ...

இந்த ரீதியில் தான் இந்தத் துரோகம் செய்யும் காரியமும் சரீரத்தை இயக்க ஆரம்பிக்கிறது. அதனால்தான் நம் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி; அதாவது அதற்குள் போகும் காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி வேதம் ஆலோசனை சொல்கிறது. ஆவிக்குள் கெட்ட காரியங்கள் போகாதபடிக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் உள்ளத்தின் நிறைவினால் வாய் பேசும்; பேசும் காரியங்கள் அப்படியே நடக்கவும் ஆரம்பிக்கும்.

அதனால் சிந்தனையில் சாத்தானுடைய விதை விதைக்கப்படாமல் தடுக்கப்பட வேண்டும். இதை வேறு யாரும் வந்து நமக்காக செய்ய மாட்டார்கள்; நாம் தான் செய்தாக வேண்டும். இது சாத்தியமானது தானா? என்றால்... நிச்சயமாக சாத்தியமானது தான். நாம் இயேசுவை ஏற்றுக் கொண்டு பாவத்திலிருந்து விடுதலையாகும் போது (இரட்சிக்கப்படும் போது) நமக்கு பல சாதகமான காரியங்களைத் தேவன் செய்கிறார். பாவம் என்ற பிரமாணத்திலிருந்து அப்போது நாம் விடுதலையாக்கப்படுகிறோம். அதனால் இனிமேல் பாவப்பிரமாணத்தால் நம் மேல் ஜெயமெடுக்க முடியாது. அதனால் பாவ சிந்தனைகள் சிந்தனைப் பகுதியில் கடந்து போகும் போது அதை உள்வாங்காமல் மறுப்புச் சொல்லி புறக்கணித்து விட நம்மால் முடியும். பறவை நம் தலைக்கு மேலாக பறப்பதை நம்மால் தடுக்க முடியாது; ஆனால் அது நம் தலை மேல் கூடு கட்டாதபடி கண்டிப்பாக தடுக்க முடியுமே.

இந்த சத்தியம் தெரியாததினால் மீட்கப்பட்ட தேவபிள்ளைகள் கூட தலை மேல் பறவைக் கூடுகளுடன் நடக்கிறார்கள்! தான் யார், தனக்கு என்ன நடந்திருக்கிறது, என்னவெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதை வைத்து என்னவெல்லாம் செய்யலாம்? இப்படி எதுவுமே தெரியாததினால் தான் தன் உடன்படிக்கையின் இளம் மனைவிக்கு துரோகம் செய்து (அல்லது உடன்படிக்கையின் கணவனுக்கு துரோகம் செய்து) தேவபக்தியில்லாத சந்ததியினரால் பூமி நிரம்ப காரணமாகி விடுகிறார்கள். பூமியின் ஆரம்பக்காலத்திலிருந்தே இப்படியாக தேவத்துவ வித்து ***Godly seed*** கெடுக்கப்பட்டுப் போனது. இதனால் தேவனைப் போலவே இருக்க வேண்டிய, அவரைப் போலவே செயல்படக்கூடிய மனித இனம் சாத்தானைப் போல் செயல்பட்டு வருகிறது!

தேவனைப் போல என்றால்... ? தேவன் நல்லவற்றையே பேசி பேசி, நன்மையான காரியங்களால் பூமியை நிறைத்தார் (ஆதியாகமம் 1 அதிகாரத்தை கவனியுங்கள்.) அவரைப் போலவே பேசிப் பேசி பூமியின் மீது நன்மையான காரியங்களை உருவாக்கும் விதத்தில் தான் மனிதனைப் படைத்தார். இதைத் தான் தேவசாயல் என்று வேதம் சொல்லுகிறது. ஆனால் பாவப்பிரமாணத்தின்படி இயக்கப்படும் மனிதர்களால் துரோகம் செய்யாமல் இருக்க முடியவில்லை. துரோகம் செய்யும் போது மனசாட்சி அவனை குற்றப்படுத்துவதால்; நிம்மதியாக இருக்க முடிவதில்லை. சபலம், சலனம், மயக்கம், குழப்பங்களால் சூழப்பட்ட மனதில் நன்மையான எதுவும் இருப்பதில்லை. அதனால் அவனால் நன்மையானதை பேசவும், விசுவாசிக்கவும் முடிவதில்லை, அதனால் நன்மைகள் நடப்பதுமில்லை. நன்மைகள் நடக்காத இடத்தில் தானாகவே பூமியில் இருக்கும் தீமைகள் வந்து சூழ்ந்து கொள்கின்றன.

பூமியின் மீது நடக்கும் அகோரமான காட்சிகளுக்கு அதுதான் காரணம்.

கொக்கு தலை மேல் வெண்ணெயை வைக்க வேண்டும். அது உருகும்போது, அதன் கண்ணை மறைத்து விடும்; உடனே எளிதாக அதைப் பிடித்து விடலாம் என்று சொல்லப்படும் வேடிக்கையான கதை அநேகமாக உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பாவப்பிரமாணத்தில் இருந்து கொண்டே பாவத்திலிருந்து விடுதலையாகும் முயற்சி ஏறக்குறைய இப்படித்தான் இருக்கிறது. கொக்கு ஏற்கெனவே பிடிக்கப்பட்டாயிற்று. அது நம் கைகளில் தான் இருக்கிறது. கையில் இருக்கிற கொக்கின் தலை மேல் வெண்ணெயை வைத்து; அதை மீண்டுமாக பறக்க விட்டு, அது உருகி அதன் கண்ணை மறைக்கும் வரைக்கும் பார்த்திருந்து; பிறகு அதைப் பிடிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? பாவத்திலிருந்து வெளியே வரத் துடிக்கும் தேவப்பிள்ளைகள் இப்படிப்பட்ட கொக்கு பிடிக்கும் வேலையைத்தான் செய்கிறார்கள். சபையிலும் இதைத்தான் சொல்லித் தருகிறார்கள். பாவம், அவர்களென்ன செய்வார்கள், அவர்களும் இப்படி கொக்கு பிடித்து அவஸ்தைப்பட்டவர்கள் தான், மற்றவர்களையும் அவஸ்தைப்பட வைக்கிறார்கள்! இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நாம் இனிமேல் பாவப்பிரமாணத்தின்படி இயங்க வேண்டிய அவசியமில்லை. நமக்காக ஒரு விடுதலைப் பிரமாணம் சிலுவையில் ஏற்படுத்தப்பட்டு; இப்போது அது செயல்பாட்டில் இருக்கிறது. (கொக்கு உங்கள் கையில் தான் இருக்கிறது, இனி மேல் போய் நீங்கள் அதைப் பிடிக்க வேண்டாம்!) பாவம் செய்யாமல் (இளவயதின் மனைவிக்கு துரோகம் செய்யாமல்) வாழக்கூடிய ஆற்றலை அது நமக்குள் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த சத்தியத்தை சரிவர விளங்கிக் கொண்டாலே போதும்; தேவபிள்ளைகள் ***Godly seeds*** ஐ விதைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

நாம் ஆதாமைப் போல் அல்லாமல்; தேவனால் மீட்கப்பட்டு, இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, பரிசுத்தாவியானவரால் வழிநடத்தப்பட்டு, தேவத் திட்டத்தை முடிக்கும் பொறுப்பை கையிலெடுத்திருக்கிறோம். மனிதன் விழுந்து போன நாள் துவங்கி தேவன் பல காரியங்களை திட்டமிட்டு, ஆண்டாண்டு காலங்களாக தொடர் யுத்தம் நடத்தி, இந்தக் கடைசி காலங்களில் சிலுவையின் மூலமாக மீண்டுமாக அவருடைய வித்தை நமக்குள் நாட்டி, நம்மை தேவபக்தியுள்ள சந்ததியாக மாற்றியிருக்கிறார். நம்மை தேவபக்தியுள்ள சந்ததியினராக மாற்றியிருப்பது அவருடைய வெற்றியின் மைல்கற்களில் ஒன்று. தொடர்ச்சியாக நாம் அவருடைய குமாரனைப் போலவே விசுவாசித்து, பேசி, விசுவாசத்திற்கேற்ற கிரியைகளை செய்து... இப்படியாக அவருடன் சேர்ந்து அவருடைய பூலோகத் திட்டத்தை அவருடைய விருப்பத்தின்படி வெற்றியாக முடிக்க வேண்டும்; நிச்சயமாக முடிப்போம், அதில் எந்த சந்தேகமும் இல்லை!

## ஜெயித்துப் பிறந்தோம்; ஜெயிக்கவே பிறந்தோம்:

நம்மால் நிச்சயமாக ஜெயிக்க முடியும் என்று தேவன் அறிந்திருக்கிறார்; அதனால் தான் நம்மை அழைத்திருக்கிறார். என்னால் இவ்வளவு நிச்சயமாக சொல்ல முடிவதற்கு காரணங்கள் உண்டு. நாம் தேவனால் மீட்கப்பட்ட சந்ததியினர். நமக்குப் பாவத்தின் பலாபலன்கள் என்னவென்று தெரியும். வினை விதைக்கிறவன் வினையறுப்பான், தினை விதைக்கிறவன் தினை அறுப்பான் என்பது நமக்குத் தெரியும்! ***"... சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் (sparingly ), பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் (bountifully). (2 கொரி. 9:6). குழியை வெட்டி, அதை ஆழமாக்கினான்; தான் வெட்டின குழியில் தானே விழுந்தான். சங். 7:15"*** என்பதை நாம் அனுபவித்திருப்பதினால் இனி கவனமாக செயல்படுவோம் இல்லையா?

தோற்கடிக்கப்படாத சாத்தான் ஏதேனுக்குள் இருந்தான்; ஆனால் இன்றோ தலை நசுக்கப்பட்டு, வல்லமையிழந்த சாத்தான் சிங்கம் போல கெர்ச்சிக்க முயற்சி செய்து செய்து முடியாமல் நொந்து நூலாகிப் போய் இருக்கிறான். **அவன் சிங்கம் அல்ல, சிங்கம் போல்... அவ்வளவு தான். எவனையாவது விழுங்கலாமென்று பார்க்கிறான், ஒருவனும் அகப்படவில்லை. வகைதேடி சுற்றித் திரிகிறான், அவனுக்கு சந்தர்ப்பமே வாய்க்கவில்லை!** அதனால் அன்று ஏவாளை ஏமாற்றியது போல இன்று நம்மிடத்தில் வாலாட்ட முடியாது. (ஒட்ட நறுக்கிடுவேன் நறுக்கி!) அதெப்படி

சொல்ல முடியும்? இன்னும் சாத்தானிடம் ஏமாந்து கொண்டே இருக்கிற ஏவாள்களும், ஆதாம்களும் தானே பூமியெங்கும் இருக்கிறார்கள் என்று கேட்டால்... பதில் இருக்கிறது.

***"எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண் பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். 2 தீமோத். 3:7"*** அவர்களுக்கு சத்தியம் தெரியாததினால் தான் இப்படி நடக்கிறது. ஏன்? அவர்கள் வேதம் வாசிப்பதில்லையா? ஜெபிப்பதில்லையா? யார் சொன்னது? அவர்கள் தினமும் வேதம் வாசிக்கிறார்கள் (ஐம்பது முறைகள் வேதத்தை முழுவதுமாக வாசித்து முடித்ததற்கான ***records*** வைத்திருக்கிறார்கள்). தினமும் மூன்று வேளைகள் ஜெபிக்கிறார்கள் (தானியேலை சுட்டிக் காட்டுகிறார்கள்). பிரசங்கங்கள் கேட்பதில்லையா? நிச்சயமாக ... இவர்கள் கேட்ட பிரசங்கத்தை கணக்கெடுத்தால் குறைந்த பட்சம் ஒன்றரை லட்சம் வரும்! பிறகு ஏன் இப்படி சாத்தானிடம் மாட்டிக் கொள்ளுகிறார்கள்; தங்களை அவனுக்குத் தாரை வார்த்து விடுகிறார்கள்?

அவர்கள் கேட்ட பிரசங்கங்களிலிருந்து சத்தியம் வெளிப்படாததினால் கதை இப்படியாகிப் போனது; சோகக்கதையாகிப் போனது! அறியப்படாத சத்தியத்தினால் இவர்களை விடுதலை பண்ண முடியவில்லை! சத்தியம் கை கட்டப்பட்ட நிலையில் வேதனையோடு, ஊமையழுகை அழுதபடி ஜனங்களை விடுவிக்க முடியாமல் கைகளைப் பிசைந்தபடி நின்று தவிக்கிறது! சத்தியத்தின் கைவிலங்குகள் நொறுங்கி விழ ஜெபியுங்கள்!

***"கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசி, (That is difficult to fully understand or explain) அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள் (கொலோ. 4: 3, 4)"*** என்று பவுல் வேண்டிக் கொண்ட காரணம் இதனால் தான். இப்போது நாங்கள் வேண்டிக் கொள்வதற்கான காரணமும் இதுவே தான்! சிலுவையில் என்ன நடந்தது என்பதை மறைத்து; வாசல் கதவைப் பூட்டி, சாவியை இடுப்பில் சொருகிக் கொண்டு போகிற பிரயோஜனமற்ற பிரசங்கங்களினால் தான் தேவபிள்ளைகள் செழிப்பில் பின்னடைந்து விட்டார்கள். தன்னுடைய பிள்ளைகளுக்காகத் தேவன் ரசித்து ரசித்து படைத்த இந்த அழகான உலகத்திலுள்ள ஐசுவரியங்களை தானும் அனுபவிக்காமல் அடுத்தவர்களையும் அனுபவிக்க விடாமல் தடுத்து நிறுத்துகிற இப்படிப்பட்ட லட்சக்கணக்கான பிரசங்கங்களினால், தேவனுடைய பூலோகத் திட்டமும் முடக்கப்பட்டு விட்டது.

இந்தப் பூலோகத்தை முழுவதுமாக பரலோகம் போலவே மாற்றி; அதை பரலோகத்துடன் இணைக்கும் தேவனுடைய பிரம்மாண்டமான திட்டம்; கல்லறைகளுக்குள் அடக்கம் பண்ணப்பட்ட தேவபிள்ளைகளுக்குள் உறங்கிக் கொண்டிருக்கிறது. அவைகளின் மீது தவழ்ந்து செல்லும் வைகறைக் காற்று; அந்த சோகக் கிசுகிசுப்புகளை ஏந்திச் சென்று; கண்ணுக்குத் தெரியாத காற்றின் பக்கங்களிலே அவைகளை கவிதைகளாக எழுதிச் செல்லுகிறது. கவிதை நன்றாகத்தான் இருக்கிறது; என்றாலும் அதனால் யாருக்குப் பிரயோஜனம்? அதை யாராலும் வாசிக்க முடியாதே! ஒன்றுக்கும் உதவாத காரியங்கள் கன்வென்ஷன் கூட்டங்களில், முகாம்களில், செமினார்களில், பட்டி மன்றங்களில், அற்புத பெருவிழாக்களில் சக்கைப்போடு போடுகின்றன! வேதத்தின் சத்தியங்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. அதனால் தான் பவுல் இப்படி ஜெபிக்க வேண்டியதாயிருந்தது. திருவசனம் செல்லும்படியான வாசலைத் ***(door of utterance)*** தேவன் திறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் தடைகள் விலக வேண்டும் என்பதல்ல. வேதத்தின் இரகசியங்களை தேவபிள்ளைகள் விளங்கிக் கொள்ளும் விதத்தில் சொல்ல வேண்டிய விதத்திலானத் தடையைக் குறிக்கிறது ***(a style or way of speaking).***

***"இதமான வார்த்தைகளைக் (acceptable words) கண்டு பிடிக்க பிரசங்கி வகை தேடினான்; எழுதின வாக்கியங்கள் செவ்வையும் சத்தியமுமானவைகள். பிர. 12:10."*** பிரசங்கியார்கள் படாத பாடுபட்டு பிரசங்க குறிப்புகள் எடுப்பதற்கு காரணம் இருக்கிறது.

பிரசங்கிக்கப்படும் வார்த்தைகள் விதைகளைப் போல செயலாக்கம் பெறுகிறது. அதனால் அவை விதை நேர்த்தி செய்யப்பட்டு, பக்குவமாக நல்ல நிலத்தில் ஊன்றப்பட வேண்டியது மிக அவசியமான ஒன்று. தேவன் எல்லாவற்றையும் தன் வார்த்தையினால் நிர்மாணித்திருக்கிறார். அதனால் கண்டதையும் விதைக்க முடியாது, விதைத்தால் அது சரியாக வராது. தேவபிள்ளைகளின் பாலைவன வாழ்க்கைக்குக் காரணமே இப்படிப்பட்ட களை விதைகளினால் தான்! இதனால் தேவசபைகளுக்குள் முள்ளும் குறுக்கும் விளைகின்றன. விளைந்ததை பறித்துச் சாப்பிடுகிறார்கள்; வேறென்ன செய்வதாம்? ஆலையில்லாத ஊரிலே இலுப்பைப்பூ சர்க்கரை என்ற கதையாகிப் போனது!

தான் இந்த பூமியில் ஏன் வந்து பிறந்தோம்? நம்முடைய வாழ்க்கை ஏன் இப்படியாகிப் போனது? இதன் முடிவுதான் என்ன? என்ற கேள்விகளோடு கரைகாணாத அலைகளாக கொந்தளிக்கும் மனதிற்குத் தேவை இதமான வார்த்தைகள் தானே தவிர ஈட்டிக் குத்து அல்ல! பேசப்படுகிற வார்த்தைகள் மனிதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு; அவர்களை திருப்தி செய்யும் விதத்திலும் இருக்க வேண்டும். நாம் பேசுகிற இந்த இதமான பதமான வார்த்தைகள் (அதுதாங்க சுவிசேஷம்!) மனிதர்கள் எத்தனை சிக்கலான பிரச்சனை சிக்கியிருந்தாலும்; அதிலிருந்து அவர்களை வெளியே பிடித்து இழுக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

## என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; (ஏசா. 40:1):

***“என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்; (ஏசா. 40:1)”*** என்று தான் தேவன் சொல்லுகிறார்; அரட்டி உருட்டுங்கள், மிரட்டுங்கள் என்று சொல்லவில்லை. தேவனை பயங்கரவாதியாக சித்தரித்து; பயத்தை உருவாக்குவதினால் மனிதர்களை எதிலிருந்தும் விடுதலையாக்க முடியாது. நரகம் எப்படி இருக்கும் என்று ***graphics*** செய்து காட்டுவதால் யார் மனதையும் மாற்ற முடியாது. பரலோகத்தின் காட்சிகளை ***video*** எடுத்துக் கொண்டு வந்து போட்டு காட்டுங்கள்; ஜனங்கள் மனந்திரும்புவார்கள்! தேவனுடைய அன்பை அவர்கள் விளங்கிக் கொள்ள வைப்பதன் மூலமாகவே விடுதலையைச்; கொண்டுவர முடியும். கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் எந்த அளவில் இருக்கிறது என்பதை தேவ பிள்ளைகள் கண்டிப்பாக அறிந்து கொள்வது மிக மிக அவசியம். ***(எபே. 3: 16–19).*** தேவனுடைய கோபம், எரிச்சல் ஆகியவற்றின் அகல, நீள, ஆழத்தை ஆராயச் சொல்லி நமக்கு வேதத்தில் ஆலோசனை தரப்படவில்லை. பழம் இருக்க ஏன் காயைப் பறிக்க வேண்டும்? கசக்கிறதே, புளிக்கிறதே, துவர்க்கிறதே என்று ஏன் முகத்தை சுளிக்க வேண்டும்?

நமக்குத் தேவையான எல்லாவற்றையும் உலகம் உருவாகும் முன்னதாகவே ஆயத்தம் செய்து வைத்து விட்டார். அதற்கு எந்த பிரச்சனையும் வந்துவிடக் கூடாது என்பதற்காக அவற்றையெல்லாம் இயேசுவுக்குள் வைத்து; உன்னதங்களில் பத்திரப்படுத்தினார். ஏதேன் தோட்டத்தில் பிரச்சனைகள் முளைத்து ஆசீர்வாதங்கள் பிரச்சனைக்குள்ளான போதும் தேவன் விடவில்லை. எல்லாவற்றையும் ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற பெயரில் மூட்டை கட்டினார். அந்தப் பொதியை ***parcel*** ஐ இயேசுவுக்குள் வைத்து சிலுவையின் வழியாக புதிய ஏற்பாட்டின் புதிய உடன்படிக்கைக்குட்பட்டவர்களாகிய நமக்கு வந்து கிடைக்கும்படி செய்தார். இவையெல்லாவற்றையும் தேவனுடைய அன்பு தான் நமக்காக செய்து முடித்தது. அன்பு அவருடைய தன்மைகளில் ஒன்று என்பதினால் இவைகளெல்லாம் செய்யப்படவில்லை. அவர் நம்மில் அன்பு கூர்ந்ததினால் இவைகள் நடக்கவில்லை. தன்னுடைய அன்பினால் போனால் போகட்டும் என்று இவற்றை செய்யவில்லை. மனிதாபிமானம் போன்ற ஒருவிதமான இரக்க உணர்வினாலும் இதையெல்லாம் செய்யவில்லை. தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8) ***(God is love).*** அதனால்தான் இதையெல்லாம் செய்தார். தேவன் சில இனிப்புகளைக் ***chocolate*** கொடுத்தார் என்பதை வைத்து அல்ல, அவரே அந்த இனிப்பாக ***chocolate*** ஆக இருக்கிறார் என்பதை வைத்து அவருடைய அன்பைக் கணக்கீடு செய்யுங்கள்!

அவர் அன்பாகவே இருக்கிறார்; வேறு எதுவாகவும் இல்லை, இருக்கவும் முடியாது! நான் ஆயிரக்கணக்கில் ***chocolate*** சாப்பிட்டிருக்கிறேன்; ஆனால் ஒரு முறைகூட அவைகள் கசப்பாக

இருப்பதாக நான் உணர்ந்தது கிடையாது. ***"நான் கர்த்தர், நான் மாறாதவர்; ... (மல். 3:6)"*** என்று சொல்லியிருக்கிறாரே! அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக். 1:17) என்பதை அறிந்து கொள்வோம். வானத்தையும், பூமியையும், அண்டசராசத்தையும் படைத்த கர்த்தர் சில நேரங்களில் நல்லவராகவும், சில நேரங்களில் பயங்கரவாதியாகவும் இருப்பாரானால் மனுக்குலம் வாழ்ந்திருப்பது எப்படி? சில நேரங்களில் நன்மை செய்பவராகவும், சில நேரங்களில் தீமை செய்பவருமாக இருப்பாரானால்; மனிதனால் எப்படி தாக்குப்பிடிக்க முடியும்? மனிதர்களை அடித்து, நொறுக்கி, சிதைத்து, உரலுக்குள் போட்டு இடித்து, கொப்பரைக்குள் போட்டு வறுத்தெடுத்து, காலை ஒடித்து, கையை உடைத்து, கண்ணைக் குத்தி ... இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் தேவனால் செய்ய முடியவே முடியாது. ஏனென்றால் தேவன் மனிதர்களை அவருடைய சாயலாக, அவரைப் போலவே, அவரிலிருந்தே உருவாக்கியிருக்கிறார். **"மனிதனை உருவாக்க தேவன் உபயோகித்த மூலப்பொருட்கள் raw meterials எல்லாவற்றையும் தேவன் அவரிலிருந்து தான் எடுத்திருக்கிறார் (வார்த்தை, விசுவாசம், கற்பனை, அன்பு). அப்படியிருக்க மனுக்குலத்தை அவர் வேதனைப் படுத்துகிறார் என்றால்; அது அவரையே அழித்துக் கொள்வதைப் போலாகி விடும்! அதனால் தேவன் மனிதனுக்கு கெட்டது எதையுமே செய்வதில்லை, செய்யவும் முடியாது என்று அறியலாம்."**

அப்படியானால் தேவனை பயங்கரமானவர் போலவும், இரக்கமில்லாதவர் போலவும் சித்தரிக்கும் வார்த்தைகளடங்கிய வசனங்களை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு நெடுக பார்க்கிறோமே? அது ஏன்? இதற்கான பதில்களை நான் முந்தின செய்திகளில் சொல்லியிருக்கிறேன். இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நாம் சாத்தான் தோற்கடிக்கப்பட்ட இந்தக் காலக்கட்டத்திலேயே பல விஷயங்களை தவறாகப் புரிந்து கொள்கிறோம். பரிசுத்தாவியானவர் நிரந்தரமாக நமக்குள் இருந்தபடி சகல சத்தியங்களுக்குள்ளே நம்மை நடத்திக்கொண்டிருக்கும் போது கூட பல விஷயங்களை கோட்டை விட்டு விடுகிறோம்! காரியம் இப்படியிருக்க சாத்தான் தோற்கடிக்கப்படாத பழைய ஏற்பாட்டின் காலங்களில் வாழ்ந்த தேவஜனங்கள் தேவனைப் புரிந்து கொள்வதென்பது மிகவும் கடினமான ஒன்றாகத்தான் இருந்திருக்கும். இயேசுவின் இரத்தத்திற்கு பதிலாக ஆடுமாடுகளின் இரத்தம் சிந்தப்பட்டாலும்; அவைகளால் விடுதலை உண்டாகவில்லை. தற்காலிகமாக கிரியைகள் நடப்பித்துக் கொண்டிருந்த பரிசுத்தாவியானவர் அவர்களுக்குள்ளே வாசம் செய்யாதபடியினால்; சகல சத்தியத்திற்குள்ளாக நடத்தவும் முடியவில்லை. தேவனை அவர்கள் அறிந்து கொண்ட அளவிற்கேற்றபடி காரியங்களை எழுதி வைத்தார்கள்; அவற்றை நாம் நம் அறிவிற்கேற்றபடி புரிந்து கொண்டோம். அதுமட்டுமல்லாமல் மொழிபெயர்ப்பாளர்கள் செய்யும் தவறுகள், 1238 வருஷங்களாக பலதரப்பட்ட மனிதர்களால்; அந்தந்த காலக் கட்டங்களின் சூழ்நிலைகள், கலாச்சாரம், பேச்சு நடை, எழுத்து நடை இவைகளின் தாக்கங்கள்... இன்னும் பலதரப்பட்ட காரியங்களால் வசனங்களின் அர்த்தம் புரிந்து கொள்ளமுடியாத ரீதியில் மாறிப்போனது.

என்றாலும் நமக்கு உணர்வையும் தெளிவையும் அளிக்கிற ஆவியானவர்; வேதத்தை ஆராய்ச்சி செய்து உண்மையைக் கண்டுபிடிக்க சகல ரீதியிலும் நமக்கு உதவி செய்வதினால் தான் இப்படிப்பட்ட காரியங்களை வெளிப்பாடாக பெற்றுக் கொள்ள முடிகிறது. வேதத்தில் சிதறிக்கிடக்கும் சத்தியங்களை நமக்குள் இருக்கும் தேவனுடைய ஆவியானவர் ஒன்று சேர்த்து ஒழுங்காக்கி நமக்கு தருகிறார். அதை அநேகருக்கு போதிக்கக்கூடிய போதக ஊழியத்தையும் தருகிறார். புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்யும் போது; எதுவுமே அவர்களுக்கு உருப்படியாக கிடைப்பதில்லை, கிடைக்கும் எந்த பொருளும் உருப்படியாக இருப்பதும் இல்லை. என்றாலும் அவர்கள் விடுவதாக இல்லை. கிடைத்த ஆதாரங்களை எடுத்து ஒன்றையொன்று ஒட்டவைத்து; அதன் மேல் தாங்கள் கற்றுக் கொண்ட கல்வியறிவை ஓட விடுகிறார்கள். சிந்தனையும், ஞானமும் அவற்றுக்கு உயிரோட்டம் கொடுக்கின்றன. என்ன நடந்தது? ஏன் நடந்தது? எப்போது நடந்தது? யாரெல்லாம் அந்த காரியத்தில் இருந்தார்கள்? அவர்கள் என்னென்ன செய்தார்கள்? போன்ற கேள்விகளுக்கு பதிலைக் கொண்டு வருகிறார்கள். ஏறக்குறைய இப்படிப்பட்ட காரியம் தான் வேத ஆராய்ச்சி நேரத்தில் நடக்கிறது. புதையுண்டு போன தேவ இரகசியங்கள் வெளிப்பாடாக மேலெழும்பி வந்து நமக்குக் கிடைக்கின்றன.

சுவிசேஷகர்களே, இப்படிப்பட்ட நல்ல செய்திகளை வேதத்திலிருந்து தேர்ந்தெடுத்து உங்கள் சுவிசேஷ பைக்குள் போட்டுக் கொண்டு போங்கள். ஜோல்னா பை ஊழியக்காரர் வருகிறார் என்று கிண்டலடிக்கும் கூட்டமும், பயந்து ஒடி வீட்டுக்குள் போய் கதவைப் பூட்டும் கூட்டமும் நாளடைவில் இல்லாமல் போகும்!

“பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம் ***(we are in him).*** இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது; அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் ***(we are by him)*** 1 கொரி. 8:6”

## செழிப்பு – பணம் – தவறா?:

ஜோல்னா பை ஊழியக்காரர்களைப் பார்த்து ஒடும் கூட்டத்தாரைப் போலவே செழிப்பின் உபதேசம் தவறு என்று ஒடும் ஒரு கூட்டத்தாரும் இருக்கிறார்கள். இவர்களிடம் இருக்கிற இந்த தேவையில்லாத பயத்தை ஒழித்துக் கட்டும் நேரம் வந்து விட்டது! செழிப்பின் உபதேசத்தின் எதிர்ப்பாளர்களின் சிந்தனை மண்டலத்தை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட காரியங்கள் ஆளுகை செய்து கொண்டிருப்பது தான் பிரச்சனையாகிப் போனது. செழிப்பு என்றவுடனேயே முதலில் இவர்களின் மனதில் தோன்றுவது பணம் தான்! செழிப்பு என்பது பணத்தை மட்டும் குறிப்பிடுகிற சொல் அல்ல என்பதை முன்னதாகவே பார்த்து விட்டோம். ஒரு மனிதன் நன்றாக வாழ்ந்திருப்பதற்கு தேவையான சகல காரியங்களையும் உள்ளடக்கிய ஒரு வார்த்தை இது; இதில் பணமும் ஒன்றாக இருக்கிறது. ***(to be succeed - be healthy or grow well)*** எல்லோருடைய மனதையும் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கும் பணத்தைப் பற்றி சில காரியங்களை அறிந்து கொண்டால் இவர்களின் சந்தேகங்களுக்கு பதில் கிடைக்கும்.

மனிதன் ஏதேனை விட்டு வெளியேறிய நாளிலேயே பணத்தின் ஆளுகை துவங்கிவிட்டது. மனிதனுக்கு இலவசமாக தேவன் அளித்திருந்த வாழ்க்கை; அதற்கு பிற்பாடு விலை கொடுத்தால் தான் வாழ முடியும் ***(cost of living - the amount of money spent on food, clothing, housing, and other basic necessities)*** என்ற நிலைமைக்கு தள்ளப்பட்டுப் போனது. சந்தேகத்திற்கு இடமில்லாதபடி அது தான் உண்மை என்பது எல்லோருக்கும் தெரியும். *பணம் எல்லாவற்றிற்கும் உதவும்* ***(money answered all things)*** *(பிர. 10:19)* என்ற உண்மையை வேதம் வெளிப்படையாகவே சொல்லியிருந்தும்; பணம் தவறானது என்ற எண்ணமே பெருமளவில் சபையை ஆக்கிரமிப்பு செய்து வருகிறது. பணம் சகல பிரச்சனைகளுக்கும் பதில் கொடுக்கிறது, கை கொடுக்கிறது. *[வேதம் சொல்லும் உண்மையை தேவபிள்ளைகளே, நம்ப மறுத்தால்; தேவனற்ற உலக ஜனங்கள் எப்படி நம்புவார்கள்?]* தத்துவ ரீதியாக பேசுகிற உலக மக்கள் கூட பணத்தால் பொருட்களை வாங்கலாம்; ஆனால் மகிழ்ச்சியை வாங்க முடியுமா? கட்டிலை வாங்கலாம், மெத்தையை வாங்கலாம், ஆனால் தூக்கத்தை வாங்க முடியுமா? என்று பேசி வருகின்றனர்.

ஆனால் இது விஷயமாக ஆராய்ச்சி செய்த நிபுணர் குழு நிச்சயமாக பணத்தால் சந்தோஷத்தை கொண்டு வர முடியும் என்று சொல்லி; இந்த விவாதத்திற்கு முடிவு கட்டியிருக்கிறார்கள். வாழ்க்கையில் ஒரு மனிதனுக்கு முழு திருப்தியை உணர வைப்பதில் பணம் மிக முக்கியமான காரணியாக இருப்பதாக இவர்கள் தெரிவிக்கிறார்கள். உலகம் முழுவதிலுமாக உள்ள 12 கல்வி வல்லுநர்கள் பணம் குறித்து ஆராய்ச்சி நடத்தினார்கள். 126 நாடுகளிலிருந்து திரட்டிய தகவல்களின் அடிப்படையில் மேற்கண்ட முடிவுக்கு வந்தனர். செல்வம் சேரச் சேர மகிழ்ச்சி ஓர் குறிப்பிட்ட நிலையுடன் நின்று போகிறது என்ற பொதுவான கருத்தை இவர்கள் மறுக்கிறார்கள். ஒருவர் எந்த அளவுக்கு செல்வம் சேர்த்திருக்கிறாரோ அந்த அளவுக்கு அவரது மகிழ்ச்சி கூடுகிறது என்கிறார்கள்.

அதெப்படி சரியாகும்? ஆசைக்கும் ஒரு எல்லை இருக்கிறது இல்லையா? பேராசை பெரும்

நஷ்டம் என்று பழமொழி இருக்கிறதே? பணப்பேயாக இருப்பது ஆபத்தல்லவா? என்று தான் உங்களைப் போலவே தேவனற்ற உலகத்தாரும் எடை போடுகிறார்கள். ஒருவன் பேராசைப்பட்டு பணத்தின் மேல் பணத்தை சம்பாதித்து சேர்த்து குவித்துக் கொண்டே போகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனை பண விஷயத்தில் திருப்தியாக்கும் ஒரு எல்லைக்கோடும் இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். உண்மையைச் சொல்லப்போனால்; அவன் அந்த எல்லைக்கோட்டைத் தொடும் அளவுக்கு எந்த நாடுமே செழுமையாக இல்லை! அதனால் அவன் அந்த எல்லைக்கோட்டைத் தாண்டி குதித்து செத்துவிடப் போகிறான் என்று யாருமே பயப்பட வேண்டிய அவசியமில்லை! உலக மகா ஐசுவரியவான்களிடம் ஆய்வு நடத்தியபோது; அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கும் உண்மையை கண்டுபிடித்துள்ளனர்.

பிரச்சனைகள் இல்லாத மனிதன் இல்லை. பணக்காரர்களும் பிரச்சனைகளைச் சந்திக்கிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் வருகிற எல்லாப் பிரச்சனைகளுக்கும் அவர்களிடமிருக்கிற பணம் மாத்திரமே காரணம் என்ற முடிவுக்கு வருவது மிகவும் தவறான ஒரு கணக்கீடாகும். பணம் மனிதனின் நிம்மதியை கெடுக்கிறது என்றால்; பணமில்லாத ஏழைகளும் மனதில் நிம்மதியில்லாமல் கஷ்டப்படுகிறார்களே! ***Cost of living*** என்ற மனிதனின் நிர்ப்பந்தங்களுக்கு பணம் தான் பதில் சொல்லுகிறது, நானில்லாவிட்டால் நீயில்லை என்று சவாலிடுகிறது. பணம் தேவன் வாக்குப்பண்ணியிருக்கும் வாக்குத்தத்தங்களில் ஒன்று தான்; ஆகவே முயற்சி ***claim*** செய்வோம், சொந்தமாக்கிக் கொள்ளுவோம், செலவழிப்போம்; அவருடைய திட்டங்களுக்காக!

## கர்த்தருக்குப் பயப்படுதல்:

தவறுதலாக புரிந்து கொள்ளப்படுகிற அநேகமான வேத வசனங்களின் வார்த்தைகளில் இதுவும் ஒன்று. கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால்? கணக்கு வாத்தியார் உள்ளே நுழையும் முன்னதாகவே கைகால்கள் உதறலெடுக்குமே! அதைச் சொல்லவில்லை. வீட்டுக்குள் பதுங்கியிருக்கும் திருடனைப் பார்த்ததும் வருகிற பயமும் அல்ல. தேவனுக்குப் பயப்படுகிற பயத்தை இப்படிப்பட்ட பிற்போக்கான ரீதியிலேயே சித்தரிக்க தேவ பிள்ளைகள் பழகிவிட்டார்கள்.

***“பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன். சங். 34:11”*** பயப்படுதல் என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் பார்ப்போம். ***Reverence, respect, devotion, deep love, dedication, spiritual feeling, enthusiasm, commitment , excited interest,*** இப்படி பலதரப்பட்ட அர்த்தங்களில் பயம் என்ற வார்த்தை தொனிக்கிறது. தேவனைக் குறித்த அறிவில் அதிகமாக தேர்ச்சியடைவதை இது குறிக்கிறது. தேவனுக்கு ஏற்ற மரியாதையையும், கனத்தையும் கொடுத்து; அவரைப் பற்றி அதிகமதிகமாக கேட்டு விசாரித்து, அல்லது படித்து ஆராய்ச்சி செய்து அவரை விளங்கிக் கொள்வதைக் குறிக்கிறது. தேவனுடைய அன்பின் அகல ஆழ உயர நீளங்களை ஆராய்வது, அவருடைய பிரசன்னத்தில் மூழ்கி ஜெபிப்பது, அந்நிய பாஷைகள் பேசுவது போன்றவற்றையும் சொல்லலாம். இருதயத்தை வேத வசனங்களால் நிரப்பி எப்போதும் அதைக் குறித்து சிந்தித்து, ஆவியானவரின் உதவியோடு புதுப்புது வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்டே இருப்பதையும் குறிக்கிறது.

இதையெல்லாம் விட்டுவிட்டு பூச்சாண்டி காட்டும் வேலை தான் பெரும்பான்மையான சபைக்குள் இருக்கிறது. பயம் என்ற வார்த்தைக்கு உலக ரீதியிலான பிற்போக்கான அர்த்தத்தை எடுத்துக் கொண்டு; அப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் தேவனைப் பார்த்தோமானால்... அவரோடு தொடர்பே வைத்துக் கொள்ள முடியாமல் போய்விடும். அநேக தேவபிள்ளைகளுக்கு வேதம் வாசிக்க, ஜெபிக்க விருப்பமில்லாமல் போவது; கடனே என்று அவற்றை செய்வது, இதெற்கெல்லாம் காரணமே இந்த பிற்போக்கான உலக ரீதியிலான பயம் தான் காரணம். தேவனை முற்போக்கான பயத்துடன் அணுக கற்றுக் கொள்வோம்; நன்றாக இருப்போம், செழித்திருப்போம், தேவனின் பூலோகத் திட்டத்தை வெற்றியாக முடிப்போம். நமக்குள்ளாக வசிக்கிற கர்த்தராகிய இயேசுவும், அவருடைய ஆவியானவரும் நமக்கு உதவி செய்வார்கள். பயந்தாங்கொள்ளிகளுக்கும், தொடை நடுங்கிகளுக்கும் தேவன் எதையும்

செய்ய முடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

## தேவனின் அழைப்பு Vs தேவனை அறிந்து கொள்ளுதல்!:

தேவன் என்னை ஊழியத்துக்கு அழைத்தார் என்று சொல்லிக் கொண்டு பலர் சுவிசேஷ ஊழியம் செய்வதை சபை வட்டாரத்தில் பார்க்கிறோம். பலர் தங்களுக்கு ஊழிய அழைப்பு இருப்பதாகச் சொல்லி வேலையை விட்டுவிடுவதைப் பார்த்து வருகிறோம். இப்படிச் செய்தவர்களில் ஒரு கூட்டத்தார் தங்களின் வாழ்வாதாரங்களைத் தொலைத்துவிட்டு நடுக்கடலில் தத்தளிக்கும் சோகக்காட்சிகளையும் பார்க்கிறோம். சரி, இருக்கட்டும்; தேவன் நம்மை அழைத்ததின் உண்மையான காரண காரியங்களைக் கொஞ்சம் பார்ப்போம்.

***"நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும் பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார். 2 தெச. 2:14."*** தேவன் நம்மை இரட்சிப்பதற்காக அதாவது விடுவிப்பதற்காக அழைக்கிறார் என்று பார்க்கிறோம். விடுதலை செய்வதற்காக தேவன் மனிதர்களை அழைக்கிறார் என்றால் ... ஏற்கெனவே அவன் எங்கேயோ சிக்கிக் கொண்டிருக்கிறான், மாட்டிக்கொண்டிருக்கிறான் ***(lock*** ஆகி இருக்கிறான்***)*** என்று அறியலாம். அந்த ***lock up*** ல் இருந்து அவனை விடுதலை செய்வதே தேவ அழைப்பின் பிரதான நோக்கமாகும். ஏனென்றால் சிறையிருப்பில் ***(Jail)*** இருப்பவனால் எதையும் செய்ய முடியாது; அவனைக் கொண்டு தேவனாலும் எதையும் செய்ய முடியாது.

அதனால் பாவத்தால் கட்டப்பட்டு சிறைவைக்கப்பட்டிருப்பவனை முதலில் விடுதலையாக்கி வெளியே கொண்டு வருவது தான் தேவனுடைய முதல் கட்ட வேலையாயிருக்கிறது. அதற்குப் பிறகு தான் அவனை உபயோகித்து தன்னுடைய திட்டத்தை இந்தப் பூமியின் மீது தேவன் நிறைவேற்ற ஆரம்பிக்கிறார். பாவத்திலிருந்து மாத்திரமல்ல, பாவத்தினால் பூமியின் மீது தோன்றின சகல சீர்கேடுகளிலுமிருந்தும் நாம் விடுதலையாகும்போது வெளியே வந்து விடுகிறோம். ***"கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. ரோமர். 8:2."***

கிறிஸ்துவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் அதுவரை நம்மை இயக்கிக் கொண்டிருந்த பாவம் மரணம் என்ற பிரமாணத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி விடுகிறது. அதாவது இதுவரை நம்மைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த பாவப் பிரமாணத்தை செயலிழக்க வைக்கிறது இந்த இரட்சிப்பு! இனிமேல் இந்த பாவப்பிரமாணம் நம்மை இழுக்கிற இழுப்புக்கெல்லாம் நாம் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை! பாவத்துக்கு நாம் வளைந்து கொடுக்க வேண்டிய அவசியமும் இல்லை! இந்த உண்மை விளங்காததினால் தான் தேவபிள்ளைகள் இரட்சிக்கப்பட்ட பிறகும் தொடர்ந்து தங்கள் பாவங்களிலேயே வாழ்கிறார்கள். கண்களின் இச்சைகளுக்கு இடம் கொடுத்து விட்டு; மனதைப் பாவ சிந்தனைகள் ஆளுவதற்கு வாசலைத் திறந்துவிட்டு, பரிசுத்தமாக வாழ முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். **"சிறைச்சாலையின் கதவை திறந்து விடுதலையாக்கி வெளியே விட்ட பிறகும்; போக மனதில்லாமல் மீண்டுமாக சிறைக்குள் போய் கதவைப் பூட்டிக் கொள்ளும் தேவபிள்ளைகள்!"**

என்ன விபரீதம் இது, இப்படிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளும்; அதன் மூலமாக அமுலுக்கு வந்த புதிய விடுதலைப் பிரமாணமும் வீணாகப் போயிற்றே! விடுதலை பிரமாணம் இயக்கத்தில் இருந்தும் சிறையிருப்பிலேயே இருக்கும் சபையினரின் பரிதாப நிலைமையைப் பார்க்கும்போது ... ***"தன்னுடைய இறக்கைகளை ஓங்கி கம்பிகளின் மீது மோதியடித்து வெளியேற துடிக்கும் கூண்டுப்பறவையின் ஞாபகம்தான் வருகிறது. கூண்டுக்கதவு பூட்டப்பட்டிருக்கவில்லை, பறவையின் மனதில் தான் பூட்டு தொங்குகிறது, என்ன செய்வது பழக்கதோஷம்!"***

*"ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; ... மத். 6:26."* என்றார் இயேசு. இந்த வசனம் வேறொரு சத்தியத்தை விளக்குவதற்காக சொல்லப்பட்டது என்றாலும்; இதன் மூலம் வேறொரு காரியத்தைப் புரிந்து கொள்ள முடியும். பறவைகள் பறக்கும்போது புவியீர்ப்பு விசையை மீறித்தான் மேலெழும்புகின்றன. ***aeroplane take off*** ஆகி உயர வானத்தில் பறப்பதைப் போல. நாமும் கூட புதிய பிரமாணத்தின்படி இப்படிப்பட்ட செயல்பாட்டுக்குத்தான் அழைக்கப்பட்டிருக்கிறோம். முன்பு நமக்கு பழக்கமாகியிருந்த பாவம் (பாவம் என்ற பிரமாணம்) நம்மைக் கீழே இழுத்தாலும்; அதற்கு நாம் இடம் கொடுத்து கீழே இறங்கக்கூடாது (அதாவது பாவம் செய்யக்கூடாது). கீழே இழுக்கும் பாவப்பிரமாணத்தை எதிர்த்து ***take off*** ஆகி மேலே எழும்பி, பாவம் செய்யாதபடி, பாவத்துக்கு ***No, never,*** சொல்லி விட வேண்டும்! பறந்து போய் விட வேண்டும்!

அது முடியுமா? சாத்தியமானது தானா? இயேசு பறவைகளைக் கவனித்துப் பார்க்கச் சொல்லும்போது; அந்த வசனத்தின் கடைசியில் இன்னொன்றையும் சொன்னார். கவனியுங்கள்: அவைகளைப் பார்க்கிலும் (ஆகாயத்தில் பறக்கும் பறவைகளைப் பார்க்கிலும்) நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? புரிகிறதா? ஒரு பறவையினால் மெலேழும்ப முடிகிறதென்றால், ஜெயிக்க முடிகிறதென்றால்; தேவனைப் போலவே உருவாக்கப்பட்டிருக்கும் நம்மால் ஏன் முடியாது? ஏரோப்பிளேனுக்கு முடிகிறதென்றால் அதை உருவாக்கிய மனிதனால் ஏன் முடியாது? **பாவங்களுக்கு நாம் negative response கொடுக்க ஆரம்பித்து விட்டோமானால் அவற்றால் நம்மை மேற்கொள்ள முடியாது.** பேசாமல் வாயை பொத்திக் கொண்டு கடந்து போய்விடும், துண்டைக்காணோம், துணியைக் காணோமென்று ஓடியும் போய்விடும்!

பாவத்தால் அழிந்து போய்க்கொண்டேயிருக்கிற மனிதர்களைப் பார்த்துக்கொண்டே, கடந்து போய்க்கொண்டிருக்கிறோம். **தேவபிள்ளைகள் அறிவில்லாமல்தான் சங்காரமாகிறார்களே தவிர, சாத்தானால் அல்ல!** தேவனைக் குறித்த அறிவு, இயேசுவின் மூலமாக அவர் சிலுவையில் மனிதனுக்கு கொடுத்த விடுதலைப் பிரமாணத்தை பற்றிய அறிவு இவைகள் தேவபிள்ளைகளுக்கு வருமானால்; அதற்குப் பிறகு தேவன் கொடுத்த இந்த விலைமதிக்க முடியாத வாழ்க்கையை பாவத்தால் அழித்துப் போடமாட்டார்கள். இந்த அறிவு சபையிலிருக்கிற ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் வருமானால்; அவர் பரிசுத்தராக இருப்பது போல் தாங்களும் பரிசுத்தமாக வாழ்ந்து காட்டுவார்கள். பிறகென்ன தேவனுடைய திட்டமும் வெற்றியாக நடக்க ஆரம்பிக்கும். பூமியும் ஒவ்வொரு கட்டமாக முன்னேறி முடிவில் ஏதேனாக செழிக்கும்.

*"காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, எபே. 1:9."* ஆரம்பத்தில் பரலோகத்தின் விரிவாக்கமாக ***(extension)*** இருந்த பூலோகம், முதல் மனிதனின் பாவத்தால் துண்டாடப்பட்டுப் போனது. அதாவது பரலோகத்தை விட்டு பிரிந்தது. ***"மனிதன் ஆசீர்வதிக்கப்பட்டு செழித்து தன்னுடைய பலனினால் இந்தப் பூமியை நிரப்பி; அதை முழுவதுமாக ஏதேனைப் போலாக்க வேண்டும்"*** என்பது தேவன் மனிதனுக்கு கொடுத்த திட்டங்களில் ஒன்று. ஆதாமினால் தோல்விக்குள்ளான அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கான காரியங்கள் (உபகரணங்கள் ***raw - unprocessed)*** சிலுவையின் மூலமாக நமக்கு கொடுக்கப்பட்டன. அவற்றை நாம் எடுத்து பதப்படுத்தி, விதை நேர்த்தி செய்து, நல்ல நிலத்தில் விதைத்து, அது தன் பலனால் பூமியை நிரப்பும்படி செய்ய வேண்டும். நாம் இழந்து போன ஏதேனின் செழிப்பு ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற பொட்டலத்துக்குள் ***(kit)*** வைக்கப்பட்டு; இயேசுவின் சிலுவை மூலமாக நமக்கு மீண்டுமாக வந்து விட்டது. நாம் இழந்துபோன அந்த ***(kit - set of parts for assembling)*** பரிசுப் பெட்டகம் மீட்கப்பட்டது. இந்தக் காரியங்களெல்லாம் உலகம் தோன்றும் முன்னதாகவே ஏற்படுத்தப்பட்டு, ஆவிக்குரிய ரீதியில் (வார்த்தைகளாக) உன்னதங்களில் வைக்கப்பட்டது.

சுமார் 1260 செழிப்பிற்கான வாக்குத்தத்த வசனங்கள் வேதத்தில் இருக்கின்றன. சிலுவையில்

கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நாம் அவற்றை எடுத்து மீண்டுமாக ஒரு ஏதேனை உருவாக்கம் ***(assemble)*** செய்ய வேண்டும்! ஆளுக்கொரு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் தேவ இராஜ்ஜிய கட்டுமானப் பணி, சுவிசேஷ ஊழியம், கடைசிகால அறுவடை, உயிர் மீட்சிக் கூட்டங்கள், சுகமளிக்கும் கூட்டம், செழிப்பின் உபதேசம் என்று பல பெயர்களில் ஊழியமாக சபை செய்து வருகிறது. பெரும்பான்மையினர் இவற்றின் அர்த்தம் புரியாமல், மிகச் சிறுபான்மையான கூட்டம் அர்த்தம் விளங்கி... எப்படியோ ஊழியம் செய்கிறார்கள்.

அர்த்தம் விளங்காமல் ஊழியம் செய்கிற ஊழியக்காரர்களுக்கு தேவனுடைய திட்டமும் அதன் காரணகாரியங்களும் புரியாதபடியினால் குட்டையை குழப்புபவர்களாக இருக்கிறார்கள். இவர்களைச் சொல்லி குற்றமில்லை, சத்தியம் விளங்காததினால் இப்படி நடக்கிறது. இப்படிப்பட்ட ஊழியங்களினால் உபயோகமில்லாவிட்டால் கூட பரவாயில்லை, விட்டுவிடலாம். உபத்திரவமாகிப் போனது தான் பிரச்சனை! **செழிப்பின் உபதேசம் தவறு என்று பிரசங்கித்து; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். நீதி. 28:25 என்ற வாக்குத்தத்த வசனத்தையே பொய்யாக்க முயற்சிக்கிறார்கள். அப்படியானால் அவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்? கர்த்தரை நம்புகிறவனோ தரித்திரமடைவான், நாசமடைவான், சாவான் என்றா?**

தேவன் நமக்கு செழிப்பை வாக்குப் பண்ணியிருக்கிறார். இந்த வார்த்தைக்கு ***excess, surplus, large, profitable, reward, rich, plentiful, fertile*** என்று பலதரப்பட்ட அர்த்தங்கள் வருகின்றன. பணத்தில் மட்டுமல்ல, ஆரோக்கியத்தில், சமாதானமான வாழ்க்கையில், சகல ரீதியிலும் பரிபூரணமான ஒரு வாழ்க்கையை இந்தச் செழிப்பு என்கிற வார்த்தை குறிக்கிறது. செழிப்பு என்றவுடன் செல்வச்செழிப்பை மட்டும் (பணத்தை) மனதுக்குள் கொண்டு வருவதற்கு காரணம்; பழக்க தோஷம் தான்! தவறான புரட்டு பிரசங்கங்களினால் அலைக்கழிக்கப்பட்டு; அதனால் தங்களுக்குத்தானே போட்டுக்கொண்ட மனப்பக்குவம் ***mindsettings (a set of beliefs)*** தான் இப்படிப்பட்ட தவறான புரிந்து கொள்ளுதலுக்கு காரணமாகிப் போனது!

நாம் காதால் கேட்கிற காரியங்களை, மூளையால் உள்வாங்கி; அவற்றை நம்முடைய ஏற்புத்திறனுக்கேற்ப (புரிந்து கொண்ட அளவின்படி) அவற்றை நம் நினைவு மண்டலத்தில் வைத்து ஒழுங்குபடுத்தி விடுகிறோம். பிறகு அதற்கேற்ற விதத்தில் தான் நம் சிந்தனையும், செய்கையும் இருக்கும். அதையே பேசவும் ஆரம்பிக்கிறோம்; நாம் பேசிய வார்த்தைகளின்படியே நடக்கவும் ஆரம்பிக்கிறது. அது எப்படியென்றால் நம் வார்த்தைகளின்படியே செய்ய நம் மனதையும் சரீரத்தையும் திசை திருப்பி விடுகிறோம். நமக்குள்ளாக இயல்பாகவே தேவனால் வைக்கப்பட்டிருக்கும் ஆற்றல் (அவரின் சாயலில் நாம் படைக்கப்பட்டிருப்பதால்) நாம் நினைத்ததையே செய்யும்படி நம்மைத் தூண்டி விடுகிறது, செயல்பட வைக்கிறது, அதை வெற்றியாக முடியவும் வைக்கிறது. நாம் நல்லது செய்தாலும் சரி, கெட்டதை செய்தாலும் சரி இப்படித்தான் செயல்படுகிறோம்.

## நில் – கவனி – செல்லாதே!:

நம்முடைய மனதை சரியான பிரசங்க வார்த்தைகளின் மூலம் ***set*** பண்ணுவது எவ்வளவு முக்கியம் என்று பாருங்கள்! எச்சொல் யார் யார் வாய் கேட்பினும் அச்சொல்லின் மெய்ப்பொருள் காண்பதறிது ... என்று சொல்லி தேவனையறியாதவர்கள்கூட கவனமாக ***(alert, clear-headed, watchful)*** இருக்கிறார்கள். ஆனால் இயேசு தான் மெய்யான தெய்வம், அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மேடைபோட்டு பிரசங்கம் பண்ணுகிற நாம்; நாம் பிரசங்கிக்கிற இயேசுவைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் எவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறோம்!

**மீன் நல்லது தான், மீன் குழம்பு ரொம்ப ரொம்ப ருசி *tasty!* பொரித்த மீன்? அதைவிட ருசி *tasty ...* அதற்காக அதற்காக அவசர அவசரமாக அள்ளிப்போட்டு முழுங்கினால்? அப்படித்தான் முழுங்குகிறார்கள்! மீனுக்குள் முள் இருக்குமே, அதை எடுத்து ஓரமாக வைத்துவிட்டு சாப்பிட வேண்டுமே என்று கூடத் தெரியாத அவசரமான சாப்பாட்டு ராமன்கள்!**

**கடைசியில் நடந்தது என்ன? முள் தொண்டையில் சிக்கிக் கொண்டது, தண்ணீரை மடமடவென்று குடித்ததும் உள்ளே போய் விட்டது; இது ஒரு நபருக்கு. இன்னொருவருக்கு தண்ணீரெல்லாம் கதைக்காகவில்லை, வாழைப் பழத்தை போட்டு விழுங்கினார். அடுத்தவர்? அதற்கெல்லாம் முள் மசியவில்லை, தொண்டைக்குள்ளேயே இருந்து சில நாட்களுக்கு விளையாட்டு காட்டியது, சிலருக்கு வாரக்கணக்கில், நாட்கணக்கில் இருந்து *septic* ஆகி டாக்டரிடம் போக வேண்டிய சூழ்நிலை! மீன் முள் தொண்டையில் எக்கச்சக்கமாக சிக்கியதால் இறந்து போன ஒரு மனிதரின் கதையை ஒருவர் சொல்லக் கேட்டபோது ... இருதயம் திக் திக் என்றது, தொண்டை சிக் சிக் என்றது!**

எதற்கு இத்தனை பிரச்சனைகள்? ஆவிக்குரிய சுவிசேஷ கூட்டங்களுக்கு போவது நல்லது தான். தாகத்தோடு பசியோடு அங்குமிங்குமாக தேடியலைவது நல்லது தான். யாரையும் குறை சொல்லவில்லை, தேடினால் தான் கண்டுபிடிக்க முடியும். நானும் தேடியதால் தான் கண்டுபிடித்தேன். தேடிப் போகும் போது எச்சரிக்கையாக இருங்கள் என்று தான் சொல்ல வருகிறேன். *"தேவ வசனத்தை உங்களுக்கு போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து* ***(considering the end of their conversation)****, அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுங்கள். எபி. 13:7"* அதாவது நமக்குச் சத்தியத்தை அறிவித்தவர்களின் பிரசங்க வாக்கியங்களை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் அவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர்கள் பிரசங்கத்தை எப்படி முடிக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். சோர்ந்து போன இருதயத்தை ஆற்றி, தேற்றி, விசுவாசத்தை தூண்டி விட்டு, நம்மை உற்சாகப்படுத்தி, புதிய நம்பிக்கையை நமக்குள் துளிர் விட வைக்கிறதா? நீங்கள் சரியான நபரை கண்டுபிடித்திருக்கிறீர்கள் என்று அர்த்தம். பிரசங்கத்தை கேட்டு முடித்து வெளியே வரும்போது; சோர்வு உங்களை ஆட்டிப்படைக்கிறதா? குடிகாரன் போல தள்ளாடிக்கொண்டு நடக்க வைக்கிறதா? நீங்க ரொம்ப பெரிய தப்பு செஞ்சிட்டீங்கன்னு அர்த்தம்! நீங்கள் வராமல் இருந்திருந்திருந்தால்... அது உங்களுக்கு நலமாக இருந்திருந்திருக்கும்; வீட்டில் வேறு ஏதாவது வேலையை உருப்படியாக செய்தாவது முடித்திருக்கலாம். இப்போ? அதுவும் போச்சு, இதுவும் போச்சு!

## தூசு தட்டப்பட்ட சத்தியம்:

தேவன் மனிதனை சகல ரீதியிலும் தன்னைப் போலவே சிருஷ்டித்து, தன்னைப் போலவே சகல ரீதியிலும் செயல்படும் ஆற்றலையும் கொடுத்திருக்கிறார் என்ற ஆச்சரியமான உண்மையை நாம் கற்றுக் கொண்டு வருகிறோம். தேவன் கொடுத்திருக்கும் இந்த அற்புதமான காரியங்களை புரிந்து கொள்ளாத மனிதன் தன்னைச் சுற்றி சிறுசிறு கோடுகளைப் போட்டு எல்லைகளை உருவாக்கிக் கொண்டான். உலக மனிதர்களாவது பரவாயில்லை; தேவபிள்ளைகளைப் பற்றி சொல்லவே வேண்டாம். தங்களை தூசு, குப்பை, புழு, மரவட்டை, மண்ணாங்கட்டி என்று சொல்லிக் கொள்கிறார்கள். தங்களைப் பற்றின இந்த கீழ்த்தரமான எண்ணங்களே தேவபிள்ளைகளை செழிப்படைய விடாமல் செய்கிறது, செழிப்பைப் பற்றின உபதேசங்களை தவறு என்று நினைக்கவும் வைக்கிறது.

தூசியும் குப்பையும் மண்ணாங்கட்டியும் தாங்கள் செழிப்படைய வேண்டும் என்று ஒரு நாளும் நினைப்பதில்லை, அதற்கான முயற்சிகளை எடுப்பதுமில்லை. அப்படியே முயற்சி எடுத்தாலும் அது நடக்காது! அப்படியே நடந்தாலும் அதனால் யாருக்கு என்ன பிரயோஜனம்?! நாம் யார்? என்ற அறிவு, அதைப்பற்றின விழிப்புணர்வு நம்மை செழிக்கத் தூண்டுகிறது; அதற்கேற்ற விதத்தில் ஜெபிக்கவும் தூண்டுகிறது. தேவனை அறியாத உலக ஜனங்கள் பொருளாதாரத்திலும், ஆரோக்கியத்திலும், ஞானத்திலும், மற்றும் பல காரியங்களில் தேவனை அறிந்த ஜனங்களைவிட செழித்தோங்கியிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஆரம்பக்காலத்தில் எனக்கு இதைப்பற்றி அநேகமாயிரம் கேள்விக்குறிகள் எழும்புவதுண்டு. நான் கேட்ட எந்த பிரசங்கமும் இதற்கான சரியான பதிலை எனக்குத் தரவில்லை. முடிவில் செழிப்பு என்பது உலக ஜனங்களுக்குத்தான் என்று முடிவு கட்டினேன். அதுமட்டுமல்ல, தரித்திரமும் வியாதியும் இன்னும் பூமியின் மீது காணப்படுகிற அநேகமாயிரம் உபத்திரவங்களும் தான் தேவபிள்ளைகளுக்கு நியமிக்கப்பட்டவை என்று தவறாக

முடிவெடுத்து; அதை எழுதி பரணின் மீது தூக்கிப் போட்டுவிட்டேன். இதனால் பரணிலிருந்த காகிதங்களின் மீது மட்டுமல்ல, என் வாழ்க்கையின் மீதும் பாவம், சாபம், தரித்திரம், வியாதி, தோல்வி, கவலை, கண்ணீர் இன்னும் மூச்சுத்திணற வைக்கும் பல காரியங்கள் வந்து தூசிபோல படிய ஆரம்பித்தன!

ஏசாயா 52:2–ன் படி நான் தூசியை உதறிவிட்டு எழுந்திருக்கும் வரை என் சிறையிருப்பு நீடித்தது. கழுத்தை நெறித்த கட்டுகளை (நியாயப்பிரமாண சடங்குகள், சம்பிரதாயங்கள்) அவிழ்க்கும் வரையிலும் மூச்சுத்திணறல் நீடித்தது! “தூசியை உதறிவிட்டு ***(shake)*** எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைபட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்து விடு ***(loose)***. ஏசா. 52:2” **இந்த தூசியை உதறும் வேலை, கட்டுகளை அவிழ்க்கும் வேலையையெல்லாம் நாம் தான் செய்தாக வேண்டும்; தேவன் வந்து நமக்காக அதையெல்லாம் செய்ய மாட்டார் என்பதைக் கவனியுங்கள்!**

## மனிதனை மறந்து போன மனிதன்!:

தேவன் படைத்த ஒரு அசல் ***original*** மனிதனைப் பார்க்க வேண்டுமா? வாருங்கள், நான் காட்டுகிறேன் அவனை! ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களில் அவனைப் பார்த்து விடுங்கள் சீக்கிரமாக! ஏனென்றால் அதற்குப் பிறகு வருபவர்களெல்லாம் அசல் அல்ல! **மனிதன் தன்னுடைய தனித்தன்மையை *originality-* ஐ இழக்காமல் இருந்திருந்தால் எப்படி இருப்பான் என்பதை உலகத்துக்கு காட்டவே இயேசு வந்தார்!** (அதாவது இயேசு பூமிக்கு வந்ததற்கான பல காரணங்களில் இதுவும் ஒன்று.)

***“எங்கே மனிதன் யாருமில்லையோ, அங்கே எனக்கோர் இடம் வேண்டும்”*** என்று மனிதனைப் பார்த்தே ஓடி ஒழியும் மனிதர்கள்! ***“மனிதன் இருக்கின்றானா?”*** என்று தேடும் மனிதர்கள்! இவர்கள் மத்தியில் ***“இவன் தான் மனிதன்”*** என்று தான் படைத்த மனிதனை ***demonstrate*** (நிரூபணம்) செய்து காட்டினார் மனிதனாக வந்த தேவன் இயேசு! மனிதன் யார்? என்பதற்கான சரியான விளக்கத்தை மனிதனால் கொடுக்க முடியவில்லை. ஏனென்றால் அவன் தான் யார் என்பதை யுகா யுகங்களாக, ஆண்டாண்டு காலங்களாக மறந்தே போனான். கடவுள் யார்? என்ற கேள்விக்கும் மனிதனால் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. ***“நமக்கு மேலே ஏதோ ஒரு சக்தி”*** என்கிறான் ஒருவன். ***“உனக்கு நீயே தான் கடவுள்”*** என்கிறான் இன்னொருவன். ***“இயற்கை”***யை கடவுள் என்கிறான். ***“பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன், அவனை புரிந்து கொண்டால் அவன் தான் இறைவன்”*** என்று பாடலும் பாடுகிறான். ***“ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்”*** என்கிறான். ***“கடவுள் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்”*** என்கிறான், சரி, அதெல்லாம் இருக்கட்டும். **கடவுள் யார் என்பதை மனிதனுக்கு விளக்க வேண்டுமானால்; நிச்சயமாக அது கடவுளால் தான் முடியும். தன்னையே யாரென்று விளங்கிக் கொள்ளாத மனிதனால் கடவுளை எப்படி விளங்கிக் கொள்ள முடியும்? அதனால் தான் தன்னையும் மனிதனுக்கு வெளிப்படுத்தி, மனிதனையும் அவனுக்கு யாரென்று வெளிப்படுத்த இயேசு வந்தார்!** ***“தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ரோமர். 1:19”***

தன்னையே தெரியாத மனிதனுக்கு நிச்சயமாக தேவனைத் தெரிய வாய்ப்பில்லை. தேவனைத் தெரிந்து கொள்ள அவன் முயற்சிகள் எடுத்தாலும் முடிவில் குழப்பம்தான் மிஞ்சுகிறது. தனக்கு ஒரு காரியம் விளங்காவிட்டால் உடனே ***“எனக்கென்ன தெரியும்; அது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!”*** என்று சொல்லுகிற மனிதர்களைப் பார்த்து வருகிறோம், ஏன் நாமே அப்படி சொல்லியும் வருகிறோம். அது மிக மிக உண்மையான வார்த்தை பாருங்கள்! **தன்னைப் பற்றி ஒரு சரியான தன்னிலை விளக்கம் *(explanation)* கொடுக்க முடியாத ஒரு மனிதனால் பூமியின் மேல் நடக்கிற காரியங்களைப் பற்றியும் சரியான விளக்கம் கொடுக்க முடியாது.**

மனிதனைப் பற்றிய பரிபூரணமான விளக்கவுரை ***(details, information, knowledge, awareness, specific vision, plan and potential)*** அவனை உருவாக்கின தேவனுக்குத் தான் தெரியும். அதைத் தேவன் தான் அவனுக்கு விளக்கமாகச் சொல்லி புரிய வைக்க வேண்டும்; வேறு வழியில்லை! அதனால் தேவன் முதலில் மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார் (புரிய வைக்கிறார்), பிறகு மனிதனும் தன்னைப் போலவே, தன்னுடைய சாயலில், தன்னுடைய சகல தெய்வத்துவ பரிபூரணத்துடன் இருக்கிறான் என்பதையும் புரிய வைக்கிறார். இதற்கு தேவன் பல வழிமுறைகளை ***(provisions)*** வைத்திருக்கிறார். ஆரம்பத்தில் தேவனுக்கு மனிதனுடன் நேரடித் தொடர்பு இருந்தது; அதனால் பிரச்சனையில்லாமல் உறவாடி, உரையாடி, உலாவி வந்தார்கள். மனிதனுக்கும் தேவனுக்கும் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டபிறகு இந்தத் தொடர்பு மிகக் கடினமான ஒன்றாகிப் போனது. என்றாலும் தேவன் மனிதனோடு தொடர்பு வைத்து; எப்படியாவது தன்னை வெளிப்படுத்திக் கொண்டேதான் இருந்தார், இருக்கிறார், இனியும் இருப்பார்! ***"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் திருவுளம் பற்றின தேவன் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார் ... (எபி. 1: 1, 2)"***

ஆதாம் ஏதேனுக்குள் இருந்த வரைக்கும் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் தொடர்பு இருந்தது. அவன் வெளியேற்றப்பட்டபிறகு அந்த தொடர்பு அறுந்து போனது. அதனால் தேவன் மனிதனுடன் தொடர்பு கொள்ள வேறு பல வழிகளை கையாள வேண்டியதாய் இருந்தது. என்றாலும் பூமியைக் குறித்த தன்னுடைய பரிபூரணமானத் திட்டத்தை மனிதனைக் கொண்டு நிறைவேற்றுவதில் முழு தீவிர சித்தத்துடன் இருந்தார் தேவன். அதனால் அவர் தொடர்ச்சியாக மனிதனுடன் தொடர்பு கொண்டு தன்னை வெளிப்படுத்த தவறவேயில்லை. ஆரம்பத்தில் தீர்க்கதரிசிகள் மூலமாய் பேசினார். அந்தத் தீர்க்கதரிசிகள் மேல் தற்காலிகமாக பரிசுத்தாவியானவர் இறங்கி; தேவனுடைய வார்த்தைகளை அறிவிப்பார்.

***"... கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்கு தரிசனத்திலே உண்டாகி, அவர்: ... ஆதி. 15:1."*** ஆபிரகாமுக்கு பிறகு கர்த்தருடைய வார்த்தை தொடர்ச்சியாக மல்கியா வரையிலும் உள்ள சகல தீர்க்கதரிசிகளுக்கும் உண்டானது. இப்போது நம் ஒவ்வொருவருடைய கைகளிலும் வேதபுத்தகம் (கர்த்தருடைய வார்த்தை) இருப்பதைப் போல பழைய ஏற்பாட்டின் காலகட்டங்களில் இல்லை. நியாயப்பிரமாண புத்தகமும், தீர்க்கதரிசன ஆகமங்களும் கூட தேவாலயத்தில் மட்டும் தான் இருக்கும். புதிய ஏற்பாட்டிலும் இயேசுவின் சிலுவை மரணம் – உயிர்த்தெழுதல் காலகட்டம் வரையிலும் அப்படித்தான் இருந்தது. அப்போஸ்தலர்களின் காலங்களில் தான் புதிய உடன்படிக்கையின் சத்தியங்கள் வெளிப்பாடாகக் கிடைத்தது. அதற்குப் பிறகு பழைய முறைகளை தேவன் மாற்றியமைத்தார்; தன்னுடைய வார்த்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ***"... சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர். சங். 138:2" "அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நலமாயிருக்கும். 2 பேது. 1:19"***

இப்போது... நாம் வாழும் இந்தக் காலக்கட்டத்திற்கு ஏற்றது தேவனுடைய வார்த்தைகள் தான். நாம் தேவனை அறிந்து கொள்வதற்கும், நம்மையே அறிந்து கொள்வதற்கும் எல்லாவிதத்திலும் அவருடைய வார்த்தைகள் நமக்கு வெளிப்பாட்டைக் கொடுத்து உதவுகின்றன. வேத வசனங்களை ஒழுங்கும் கிரமமுமாக வாசித்து, ஆராய்ச்சி செய்தாலே போதும்; தேவனைப் பற்றின காரியங்கள் ஒவ்வொன்றாக நமக்கு விளங்க ஆரம்பிக்கும். **தேவனை விளங்கிக் கொண்டாலே போதும்; போக போக நாம் யார் என்பதும் நமக்குப் புரிய ஆரம்பித்துவிடும், ஏனென்றால் நாம் அவரைப்போலிருக்கிறோமே!**

தேவனைக் குறித்த அறிவு நம்மை செழிப்பிற்குள் நடத்தும், எந்த குறைவுமில்லாத ஒரு பரிபூரணமான வாழ்க்கை வாழ நம்மைத் தூண்டிவிடும். ***"தம்முடைய மகிமையினாலும்***

*காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,... 2 பேதுரு. 1:3."* நாம் யார் என்று விளங்க ஆரம்பித்தவுடன் நம் வாழ்க்கையும் மாற ஆரம்பிக்கும். ராஜாவின் மகன் (இளவரசன்) தெருவோர சிறுவர்களுடன் மணல் வீடு கட்டி விளையாடிக்கொண்டிருக்க மாட்டான்; அரண்மனையை விட்டு வெளியேறி தெருவில் கால் வைத்தாலே கால் அழுக்காகி விடுமே என்று யோசிப்பானே! நம்மை ராஜாக்கள் என்று வேதம் சொல்லுகிறது. *"... தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு...வெளி.1:6"*

## காணப்படுகிறவைகள்*(Vs)*காணப்படாதவைகள்(அநித்தியமானவைகள்*(Vs)*நித்தியமானவைகள்:)

*"... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் (temporal - measured time), காணப்படாதவைகளோ நித்தியமானவைகள் (eternal - everlasting) 2 கொரி. 4:18."* நம் கண்களால் காணக்கூடிய இந்த இயற்கை உலகமும், அதிலுள்ள எதுவானாலும் சரி; அது நம்முடைய கால்களுக்குக் கீழ் தான் இருக்கிறது. ஏனென்றால் நாம் ஆவிக்குரியவர்கள் – நித்தியமானவர்கள். இந்தப் பூமியும் அதன் நிறைவும் ஆவிக்குரியதல்ல, அவை பூமிக்குரியவை – அநித்தியமானவைகள். அநித்தியமான பூமியின் காரியங்களை நித்தியமான பரலோக காரியங்கள் ஆளுகை செய்து வருகிறது. ஆவிக்குரியவர்களான நம்முடைய விசுவாசமும், வார்த்தைகளும்கூட ஆவிக்குரியவைகள்தான். ***"தேவன் மனிதனை உண்டாக்கி பூமியின் மீதான ஆளுகையை அவனிடம் கொடுத்ததற்கு காரணம் இது தான். ஆவிக்குரிய மனிதன் தான் பூமிக்குரியவைகளை ஆள வேண்டும். ஆவிக்குரிய – கண்களால் பார்க்க முடியாத மனிதன் தான் கண்களால் காணக்கூடிய பூமியை ஆளுகை செய்ய முடியும். அதாவது நித்தியமான மனிதன் தான் அநித்தியமான பூமியை ஆளுகை செய்தாக வேண்டும். அதுதான் தேவனுடைய நியமம்; அது அப்படித்தான் இயங்கியாக வேண்டும், வேறு வழியில்லை!"***

நித்தியமான காரியங்கள் அநித்தியமான பூமிக்குரிய காரியங்களின் மீது ஆளுகை செய்து அவற்றில் மாற்றங்களைச் செய்கின்றன. உதாரணமாக வியாதி ஒரு அநித்தியமான பூமிக்குரிய காரியம். சுகம் என்பது ஒரு நித்தியமான ஆவிக்குரிய காரியம். நித்திய காரியமான சுகம் அநித்தியமான வியாதியின் மீது ஆளுகை செய்து; அதை அகற்றிப் போடுகிறது. அநித்தியமான காரியங்கள் மாறக்கூடியது; நித்தியமான காரியங்கள் மாறாதது. அதாவது வியாதி மாறக்கூடியது; சுகம் மாறாதது. தரித்திரம் மாறக்கூடியது; ஐசுவரியம் மாறாதது. சாபம் மாறக்கூடியது; ஆசீர்வாதம் மாறாதது. பாவம் மாறக்கூடியது; பரிசுத்தம் மாறாதது. தோல்விகள் மாறும்; வெற்றி மாறாது ... ***and so on ...*** ஒரே வார்த்தையில் சொல்வதாயிருந்தால் பூமியில் காணப்படுகிற நல்லவைகளெல்லாம் நித்தியமானவைகள், மாறாதவைகள். பூமியின் மீது காணப்படுகிற கெட்ட காரியங்களெல்லாம் அநித்தியமானவைகள், அவைகள் மாறிப்போகும்! இந்த கெட்ட பூமியை நல்ல பூமியாக மாற்ற முடியும்; அதற்கான காரியங்கள் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் நம்மை வெறுங்கையாக இந்தப் பூமிக்கு அனுப்பி வைக்கவில்லை. தாய்வீட்டு சீதனமான தன்னுடைய சகல தெய்வத்துவங்களையும் நமக்குள் பதித்து வைத்துத்தான் அனுப்பியிருக்கிறார்.

அதாவது பரலோகம் என்ற ஆவிக்குரிய உலகத்திலிருந்து தோன்றின ஆசீர்வாதம், சுகம், ஐசுவரியம், பரிசுத்தம், சந்தோஷம், சமாதானம் இப்படிப்பட்ட எதுவுமே மாறுவதில்லை, அவைகள் நித்தியமானவைகள் – அழியாத தன்மையுடையவை. ஆவிக்குரிய மனிதர்களாகிய நாம் ஆவிக்குரிய இந்த பரலோக காரியங்களை கையிலெடுத்துக் கொள்ள வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசுவாசம், வார்த்தைகள் என்ற ஆவிக்குரிய சக்திகளைப் பிரயோஜனப்படுத்தி அந்தக் காரியங்களை பூமிக்குரிய அநித்தியமான வியாதி, தரித்திரம், கவலை, கண்ணீர், துக்கம், தோல்விகள், பயங்களின் மீது அனுப்பி ஆளுகை செய்ய வேண்டும். அப்போது ஆவிக்குரிய நித்தியமான காரியங்கள் பூமிக்குரிய அநித்தியமான காரியங்களைக் கொன்று அழித்துப் போடுகின்றன!

ஆவிக்குரிய காரியங்கள் (சுகம், ஐசுவரியம்...) அழியாத தன்மையைப் பெற்றிருப்பதற்கு காரணம்;

அவைகள் அழியாத நித்தியமான பரலோகத்திலிருந்து தோன்றின காரியங்கள். அதனால் அவைகள் பரலோகத்தின் தன்மைகளை தனக்குள் பெற்றிருக்கிறது. பூமிக்குரிய காரியங்கள் (வியாதி, தரித்திரம் ...) அழியும் தன்மையுடையவைகளாக இருப்பதற்கு காரணம்; அவைகள் அழியும் அநித்தியமான பூலோகத்திலிருந்து தோன்றின காரியங்கள். அதனால் அவைகள் சாபம் இயங்கிக்கொண்டிருக்கும் பூலோகத்தின் தன்மைகளை இயற்கையாகவே தனக்குள் பெற்றிருக்கிறது.

உண்மை இப்படியாயிருக்க, நாம் அநித்தியமான பூமியின் சாப காரியங்களைப் பார்த்து நாம் கலங்கி கண்ணீர் விட்டு பதறி தவிக்க வேண்டிய அவசியமென்ன? தேவபிள்ளைகளின் அறியாமை சாபம் என்ற புதைமணலுக்குள் அவர்களை மூழ்கடித்துக்கொண்டே இருக்கிறது. அநித்தியமான உலகத்தின் பிரச்சனைகளை மாற்றக்கூடிய, அழிக்கக்கூடிய ஆவிக்குரிய போராயுதங்களை கையில் வைத்துக்கொண்டே அவற்றை உபயோகிக்கத் தெரியாமல் மூழ்கடிக்கப்பட்டுப் போகிறோமே!

நம்முடைய கவனம் *(concentration - focus of mind)* எப்போதும் நித்தியமான காரியங்கள் மேலேயே இருக்க வேண்டும். மாறக்கூடிய, அழியக்கூடிய பூமிக்குரிய காரியங்களுக்குள்ளும், பிரச்சனைகளுக்குள்ளும் அவற்றை ஆளுகை செய்ய விட வேண்டும். நாம் எந்த நித்தியமான ஆவிக்குரிய காரியத்தை கவனிக்க வேண்டும்? அழிவில்லாத, நித்தியமான, ஆவிக்குரிய சக்தியான தேவனுடைய வார்த்தைகளைத் தான். தேவனுடைய வார்த்தைகள் – அதாவது வேதத்தில் உள்ள நல்ல, வாக்குத்தத்த வசனங்களைத் தெரிந்தெடுத்து அவைகளை மாத்திரம் பேச வேண்டும். நம்மைச் சூழ்ந்திருக்கிற, அநித்தியமான (மாறக்கூடிய) உலகப் பிரச்சனைகளைப் பார்த்து பேச வேண்டும்.

ஒரு முறை மட்டும் பேசிவிட்டு நிறுத்திவிட்டால் போதாது; திரும்பத்திரும்ப பலமுறை விடாமல் பேசிக்கொண்டே இருக்க வேண்டும். *"... அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை (good profession) பண்ணுகிறவனுமாயிருக்கிறாய். 1 தீமோத். 6:12." "... நாம் பண்ணிய அறிக்கையை உறுதியாகப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். எபி. 4:14." "... நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; (Let us hold fast the profession of our faith without wavering) வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. எபி. 10:23."* நல்ல வார்த்தைகளை மாத்திரம் தான் எடுத்துப் பேச வேண்டும். பைபிளில்தானே இருக்கிறது என்று எல்லா வார்த்தைகளையும் எடுத்துப் பேசக்கூடாது.

*"மிகுந்த விதையை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும். திராட்சத்தோட்டங்களை நாட்டிப் பயிரிடுவாய், ஆனாலும் நீ திராட்சரசம் குடிப்பதும் இல்லை, ... பூச்சி அதைத் தின்றுபோடும். ... உன் ஒலிவமரத்தின் பிஞ்சுகள் உதிர்ந்துபோம். உபா. 28: 38 – 40."* இந்த வசனங்களெல்லாம் கூட வேதத்தில் தான் இருக்கிறது, உஷ்! தப்பித் தவறிக்கூட இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசாமல் வாயை மூடிக்கொள்ளுங்கள்!

*[ Mr. A என்பவர் கோபத்தில் வாய்க்கு வந்தபடி கண்டகண்ட வார்த்தைகளையும் யோசிக்காமல் பேசிக்கொண்டே போகிறார். எதிரில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த Mr. B என்பவருக்கு கோபத்தில் கண்கள் சிவந்து, புருவம் வளைந்து, மீசை துடிக்கிறது! என்றாலும் தன்னை அடக்கிக் கொண்டு ஒரே ஒரு வார்த்தை மட்டும் சொல்லுகிறார். அது: "Shut up!" என்று. இதில் Mr. B எனக்கு ரொம்பவும் பிடிச்சிப்போச்சு! அவரும் கோபத்தில் தான் பேசுகிறார்; என்றாலும் புத்திசா–த்தனமாக பேசினார் பாருங்க! ]*

*"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது, ... 2 தீமோத். 3:16."* ஆனால் பைபிளில் உள்ள எல்லா வார்த்தைகளும் தேவன் பேசியது அல்ல. உலகத் தோற்றமுதல் உள்ள மனிதர்களால், தேவ ஜனங்களால், பலதரப்பட்ட சூழ்நிலைகளுக்கு மத்தியில் பேசப்பட்ட வார்த்தைகளெல்லாம் இதில் எழுதப்பட்டிருக்கிறது. தேவனைக் குறித்த அறிவில்லாதபடி அவரைப்பற்றி தாறுமாறாக பேசப்பட்ட வார்த்தைகளும் இதில் இருக்கிறது. சரியான அறிவோடு

பேசப்பட்ட வார்த்தைகளும் உண்டு. தேவனை அறியாத உலக மனிதர்களின் வார்த்தைகளும் உண்டு. சாத்தான் பேசிய வார்த்தைகளும் இதில் உண்டு. ஆனால் எல்லாவற்றையும் ஆவியானவர் தொகுத்து நமக்குத் தந்திருக்கிறார் அவ்வளவுதான். ***"... தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் (excellent), எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும் (profitable for doctrine), கடிந்துகொள்ளுதலுக்கும் ( reproof), சீர்திருத்தலுக்கும் (alteration), நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2 தீமோத். 3:17"***

வேத வசனங்களெல்லாம் நாம் நன்றாக இருப்பதற்கும்; தேவனுடைய திட்டத்தைப் பூமியில் நிறைவேற்றுவதற்குத் தேவையான காரியங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நல்ல வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து; அதை வாய்விட்டு சத்தமாக, தொடர்ச்சியாக, விசுவாசத்தோடு அறிக்கை செய்யும்போது அவற்றை நாம் பெற்றுக் கொள்வதற்கேதுவான சூழ்நிலைகள் உருவாகின்றன. ***"... உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார் இயேசு. மத். 9:29."*** எப்படி? நமக்கு விசுவாசம் இருக்குமானால் நிச்சயமாக நாம் விசுவாசிப்பதை பேசியே தீருவோம்; அது நடந்தே தீரும்! ***"விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; ... சங். 116:10"***

***"கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற ... அவருடைய தூதர்களே, ... சங். 103:20.*** கர்த்தருடைய வார்த்தை நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிறபோது; அதைச் செய்ய தேவதூதர்களும் புறப்பட்டு விடுகிறார்கள்! நாம் எதை விசுவாசித்து அறிக்கை செய்து வருகிறோமோ அதையே செய்ய நம்முடைய மனமும், சரீரமும் திருப்பப்படுகிறது. நம்முடைய பெயரே "விசுவாசிகள்"தான்! அதாவது சரீரக்கண்களால் பார்க்க முடியாத நித்தியமான ஆவிக்குரிய காரியங்களை நம்புகிறவர்கள் என்று அர்த்தம். ஆனால் எத்தனை % விசுவாசிகள் சபையில் அப்படி இருக்கிறோம்? ***"... அவருடைய (இயேசுவினுடைய) கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்தில் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். (தோமா) யோவான் 20:25."*** இன்றைக்கும் இப்படிப்பட்ட விசுவாசிகளைத் தான் பெருமளவில் சபையில் பார்க்க முடிகிறது. ஆனால் இயேசு இதை விசுவாசமாகவே ஏற்றுக்கொள்ளவில்லை. ***"... அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். யோ. 20:27." "... நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். யோ. 20:29."***

தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டுமானால்; அதற்கு ஒரே ஒரு வழிதான்: கண்களால் காணப்படாமலிருக்கிற நித்தியமான காரியங்களை தேவனுடைய வார்த்தைகளினடிப்படையில் நம்ப வேண்டும். கண்களால் காணமுடியாத ஆவிக்குரிய உலகில் (பரலோகத்தில்) செயல்படுகிற ஒரு விசேஷித்த சக்தி தான் விசுவாசம். கண்களால் காணக்கூடிய பூலோகத்தில் அதே ஆவிக்குரிய சக்தியை நாம் இயக்கும்படி நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அந்த மகத்தான சக்தி ஆவிக்குரிய உலகத்தில் செயல்படும் விதிமுறைகளை அறிந்து கொண்டு; அதே போல் அதை இந்தப் பூமியின் மீது நடத்திக் காட்டுவோமானால் பாக்கியவான்களாயிருப்போம். அதாவது சகல ஆசீர்வாதங்களையும் (செழிப்பை) பெற்று அனுபவிக்கிறவர்களாக இருப்போம். அதுமட்டுமல்ல பூமியைக் குறித்ததான தேவனுடைய பரிபூரணமான திட்டத்தை பூமியின் மீது செய்து முடிப்பதில் நம்முடைய பங்களிப்பை வெற்றியாக செய்து முடிப்பவர்களாகவும் காணப்படுவோம்.

**ஒருநாள் காலை சிந்தனையாளர் டால்ஸ்டாய் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு இளைஞனைப் பார்த்தார். உடனே ஓடிப்போய் அவனைத் தடுத்து நிறுத்தி; எதற்காக இப்படி செய்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன்: ஐயா, எனக்கு சாவதில் விருப்பமில்லை தான்; ஏதாவது தொழில்**

**செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று முயற்சி எடுத்தேன். மூலதனமாக என்னிடம் எதுவுமே இல்லை, வறுமை வாட்டுகிறது, தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேற வழி இல்லை என்றான்.**

**உடனே டால்ஸ்டாய், நான் உனக்கு நூறு ரூபிள் *(ruble)* தருகிறேன்; அதற்குப் பதிலாக உன்னுடைய ஒரு விரலை மட்டும் தா என்று கேட்டார். இளைஞன் ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன் அது முடியாது என்றான். அதற்கு டால்ஸ்டாய், அப்படியானால் ஒரு கண்ணை மட்டுமாவது தா என்றார்!. இளைஞனின் குழப்பம் அதிகரித்தது; கோபத்துடன் முடியாது என்றான். உடனே அவர் சரி ஆயிரம் ரூபிள் தருகிறேன்; ஒரு காலை மட்டுமாவது தா என்றார். உடனே இளைஞன் உங்களுக்கென்ன பைத்தியமா? என்று கத்தி விட்டு; இடத்தை விட்டு நகர்ந்தான்.**

**டால்ஸ்டாய் சிரித்துக் கொண்டே சொன்னார்: தம்பி... நான் பணம் தருகிறேன் என்று சொல்லியும், நீ கொடுக்க மறுக்கும் அளவுக்கு விலைமதிப்புள்ள விரல்களும், கண்களும், கால்களும் உன்னிடம் இருக்கின்றதே! நான் கொடுப்பதாகச் சொன்ன பணத்திற்கு அவற்றை கொடுக்க முடியாத அளவுக்கு அவை விலையேறப்பெற்றவை என்பதால் தானே அதனைக் கொடுக்க மறுத்தாய்? தொழில் செய்ய மூலதனம் எதுவுமில்லை என்று ஏன் பொய் சொன்னாய்? நான் கொடுப்பதாகச் சொன்ன 100, 1000 *ruble* ஐ விட அதிக விலையுள்ள உபகரணங்கள் உன் உடம்பிலேயே இருக்கிறதே! அதை நன்றாகப் பராமரித்து பயன்படுத்து, சீக்கிரத்தில் பணக்காரனாகிவிடுவாய் என்றார்! இளைஞனின் கண்களில் ஒரு நம்பிக்கையின் ஒளிக்கீற்று தெரிந்தது.**

இந்த சம்பவத்தை வாசித்தபோது; என் கண்களிலும் ஒரு புதிய ஒளிக்கீற்று! அது: டால்ஸ்டாய் சொன்ன காரியங்கள் இந்த பூமிக்குரியது தான். சரீரத்தின் உறுப்புக்களை பயன்படுத்தி; உழைத்தால் வெற்றி பெறலாம் என்பது அவருடைய எண்ணமாக இருந்தது. ஆனால் தேவன் நம்முடைய வெற்றி வாழ்வுக்கு தந்திருக்கும் உபகரணங்கள் எல்லாமே ஆவிக்குரிய ரீதியிலானது, அவைகள் பரலோக சக்திகள்! நம்மிடம் வியாபாரத்தில் முதலீடு செய்ய பணமில்லாமல் இருக்கலாம். ஆனால் தேவன் நமக்குள்ளாகவே பதித்து வைத்திருக்கிற ஆவிக்குரிய சக்திகளான விசுவாசம் இருக்கிறது; அதை வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகள் இருக்கிறது. நம் விசுவாசத்தை துவக்கி வைத்து, வளர்க்க இயேசு இருக்கிறார். எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேச வேண்டும் என்று சொல்லித்தர பரிசுத்தாவியானவர் இருக்கிறார் இவற்றை மூலதனமாகப் போட்டாலே போதும்; செழிப்பு நம்மைத் தேடி வரும். படிக்கவில்லையே, ஞானம் இல்லையே, சரீர சுகம் இல்லையே, அது இல்லையே, இது இல்லையே என்று புலம்பிக் கொண்டிருக்கும் தேவப் பிள்ளைகள் யோசித்துப் பார்ப்பதற்காகவே இந்த சம்பவம்!

## ஏன் இந்த பயம்?:

கண்களினால் காணக்கூடிய அநித்தியமான காரியங்களையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்போமானால் முதலில் நம் மனதில் தோன்றுவது பயம் தான்! பயம் என்பதும் ஒருவகையான விசுவாசம் தான்; அதாவது விசுவாசத்தைப் போலவே செயல்படுகிற ஒரு எதிர்மறையான சக்தி இது. விசுவாசம் எப்படியெல்லாம் வேலை செய்கிறதோ அப்படியே இதுவும் ஆனால் எதிர்மறையாக செயல்படுகிறது. ஆனால் இந்த எதிர்மறை விசுவாசத்தை (பயத்தை) பிரயோஜனப்படுத்தி, நாம் நல்லது எதையுமே செய்ய முடியாது; மாறாக கெட்ட காரியங்களைத் தான் நடப்பிக்க முடியும். இதைப் பற்றி முன்பே பார்த்தோம்; என்றாலும் இன்னும் இருக்கிறது.

பயமும் ஒரு ஆவிக்குரிய சக்தி தான்; அதாவது விசுவாசத்திற்கு எதிரிடையாக ***(negative side)*** செயல்படுகிற, அவிசுவாசத்தை ஊக்குவிக்கிற ஒரு சக்தி. தேவப்பிள்ளைகளாகிய நமக்கு விசுவாசிகள் என்ற ஒரு பெயரும் உண்டு. கண்களால் காணக்கூடாத காரியங்களை காண்பதாகவே

நம்பி, ஏற்றுக் கொண்டு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு! இப்படியொரு கடினமான காரியத்தை தேவன் நமக்கு நியமித்து விட்டாரே என்று வருத்தம் தான் அநேகருக்கு வருகிறது. ஏனென்றால் விசுவாசிக்கத் திராணியில்லை, விசுவாசத்தைப் பற்றின சரியான அறிவும் இல்லை, அப்படியென்றால் என்னவென்றே பலருக்குத் தெரிவதுமில்லை. இப்படி இயலாமைக்குள் சிக்கித் தவிக்கிற தேவபிள்ளைகளுக்குள் இருக்கிற விசுவாசம் ***reverse order-*** ல் திரும்பி ஓட ஆரம்பிக்கிறது; அதைத்தான் பயம் என்கிறோம்!

பூமியின் மீது நடக்கிற காரியங்களையே பார்த்துக் கொண்டிருப்போமானால் பயந்து கொண்டேயிருக்க வேண்டியது தான். உலகம் இப்படித்தான் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறது. காண்கிற காரியங்களைத் தாண்டி கண்களால் காணமுடியாத காரியங்கள் இருக்கின்றன என்பதையும், அவற்றைப் பார்க்கக்கூடிய ரீதியில் ஆவிக்குரிய கண்கள் உண்டு என்பதையும் அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். ஆனால் நாம் அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு காரண காரியங்கள் என்னவென்று விளங்கி விட்டது. அதனால் எத்தனை தீமைகள் நம்மை சூழ்ந்து வந்தாலும் சரி; பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் நாம் நம்முடைய பார்வையை அவற்றின் மீது வைக்காமல்; அவற்றை நீக்கும் வல்லமையுடைய தேவனுடைய வார்த்தையின் மீது வைக்கிறோம். காண்கிறவைகளையல்ல காணப்படாதவைகளைப் பார்க்கிறோம்; அநித்தியமானதையல்ல நித்தியமானவை பார்க்கிறோம்.

***"... காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமாக நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 2 கொரி. 4:17."*** தேவனுடைய வார்த்தை காணப்படாத நன்மைகளை நமக்கு அறிவிக்கிறது. நம்முடைய சூழ்நிலையே நேர் எதிரிடையாக இருக்கிறது. **(வசனத்தின்படி நம் வாழ்க்கையில் நடப்பதற்கான சந்தர்ப்பமே இல்லை. விசுவாச வார்த்தைகளைப் பேச முடியாமல் நாக்கு தடுமாறுகிறது. சுற்றியிருப்பவர்களின் கிண்டலான பேச்சுக்கள் நம்மை தடுமாற வைக்கிறது. சூழ்நிலை பூதாகாரமானதாக உருமாறி நம்மை நோக்கி நடந்து வர, கண்களும் தடுமாறுகின்றன. கடைசியில் கால்களும் தள்ளாடுகின்றன, வாழ்க்கையும் தள்ளாடிப் போகின்றது. கைத்தடி ஊன்றியபடி தள்ளாடி நடக்கும் தேவபிள்ளைகள்! மாம்சீகத்தில் ஒரே ஒரு வார்த்தை தான், வாய் தவறி உளறிவிட்டேன்; எல்லாமே போச்சு பிரதர்! என்று புலம்புபவர்களை வழிநெடுக பார்க்க முடிகிறது.)**

ஆனால் மேலே உள்ளபடி நாம் செய்யாமல் அதற்கு எதிரிடையாக செயல்பட அழைக்கப்படுகிறோம். நாம் உபத்திரவ வேளைகளில் தேவனுடைய வார்த்தைகளைப் பார்ப்போமானால்; காணப்படாத அந்த ஆவிக்குரிய நித்திய சக்தி காணக்கூடிய நம்முடைய உபத்திரவத்தை இலேசானதான நமக்குக் காட்டுகிறது, நமக்கு தைரியத்தை ஊட்டுகிறது. காரணம், கண்களால் காண்கிற தீமையான அனைத்து காரியங்களும் அநித்தியமானவைகளே! அவைகள் என்றென்றும் இருக்கப் போவதில்லை. ஆனால் தேவனுடைய வார்த்தைகள் மாறாதவைகள், நித்தியமானவைகள்! நித்தியமான காரியங்களுக்கு அநித்தியமான காரியங்களை மேற்கொண்டு அழிக்கும் ஆற்றல் உண்டு என்பதை நாம் மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நேரங்களில் மறக்காமல் இந்தக் காரியத்தை நினைவுக்கு கொண்டு வாருங்கள்.

**"இந்த பிரச்சனை என்னை எதுவும் செய்யாது; செய்யவும் முடியாது. இவற்றை அழிக்கக்கூடிய ஆவிக்குரிய சக்தி என்னிடத்தில் உள்ளது. அது தேவனுடைய வார்த்தை தான். வேதம் முழுக்க அவற்றை எழுதி என் கைகளில் கொடுத்திருக்கிறார். பிரச்சனைக்கேற்ற வார்த்தைகளை எடுத்து சூழ்நிலைக்குள்ளாக அதை பேசி; அவற்றை அழித்து விட என்னால் முடியும்"** என்று சொல்லி உங்களை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு சமயத்துக்கேற்ற வார்த்தைகளை எடுத்து அறிக்கை செய்ய ஆரம்பியுங்கள். உடனே பெரிய மாற்றங்கள் எதுவும் தெரியாவிட்டாலும் **"உங்கள் கண்முன்னால் உங்கள் பிரச்சனைகள் தடுமாறி நிற்பதை நீங்கள் காண்பீர்கள். உங்கள் துன்பங்களுக்கு கேடுகாலம் ஆரம்பித்துவிட்டது**

**என்று நீங்கள் நிச்சயமாக நம்பலாம். அவைகள் நிச்சயம் செத்துப் போகும். பயப்படாதிருங்கள்!"**

## சவாலைச் சமாளி! (Declare War against Satan!)

சாபத்தால் அடிவாங்கிப் போன பூமியெங்கும் பிரச்சனைகள் நிறைந்து கிடப்பதைப் பார்க்கிறோம். பிரச்சனைகள் நம்மிடம் பிரச்சனை பண்ணாமல் அதுபாட்டுக்கு அடங்கி ஒரு மூலையில் கிடந்தால் நமக்கு பிரச்சனையில்லை! ஆனால் அவை அப்படி அடங்கிக் கிடப்பதில்லை; எழும்பி நின்று நம்மைப் பார்த்து சவாலிடுகின்றன. பிரச்சனைகளை கண்டுக்காமல் நாம் பாட்டுக்கு போயிட்டேயிருந்தால் அவைகள் தானாக போய்விடும் என்று பெரும்பான்மையான தேவபிள்ளைகள் தப்புக்கணக்குப் போட்டு வாழ்ந்து வருவதைப் பார்க்கிறோம். என்ன நடந்தாலும் சரி, பல்லைக்கடித்து சகித்துக்கொண்டு கண்ணீரோடு வாழ்க்கையை ஓட்டும் தேவபிள்ளைகளின் அணுகுமுறைகளைப் பார்த்து அது தான் சரி என்று நானும் கூட நினைத்திருந்தேன். என் மனதை நோகடித்து, சாறாய் பிழிந்தெடுத்த சாத்தானை நான் எதிர்த்து நிற்கவில்லை, அவன் தானாகப் போய்விடுவான் என்று நினைத்திருந்தேன். ஆனால் நான் நினைத்தது நடக்கவேயில்லை.

**"நல்ல காரியங்களை நாம் வரவேற்க வேண்டும்; இல்லாவிட்டால் அவைகள் நம்மை விட்டு கடந்து போய்விடும். கெட்ட காரியங்களை நாம் புறக்கணிக்க (எதிர்க்க) வேண்டும்; இல்லாவிட்டால் அவைகள் உள்ளே நுழைந்துவிடும்."** நல்லது தானாக நடப்பதுமில்லை; கெட்டது தானாக போவதுமில்லை. இந்த சத்தியத்தை நான் அறிந்து கொள்ளும் வரை என் குழப்பங்கள் நீடித்தன. பழைய ஏற்பாட்டில் வரும் ஏலா பள்ளத்தாக்கில் தாவீதுக்கும் கோலியாத்துக்கும் இடையில் நடந்த சண்டையின் மூலமாக ஆவியானவர் இந்தக் காரியத்தை நமக்கு விளக்க வருகிறார் கவனியுங்கள்: 1 சாமுவேல் 17–ம் அதிகாரத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

நம் முன்பாக நிற்கும் பிரச்சனை தான் கோலியாத்! அவன் வியாதி, தரித்திரம், தோல்வி, பயம், குழப்பம், கவலை, அதிர்ச்சி, விரக்தி... எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் வருவான். பிரச்சனைகள் சும்மா வருவதில்லை, ஒரு யுத்த வீரனைப் போல போராயுதங்கள் தரித்து வருகின்றன. ஏலா பள்ளத்தாக்கில் கோலியாத் இஸ்ரவேல் படையைப் பார்த்து சவாலிடுகிறான். ஒரு நாள், இரண்டு நாளல்ல தொடர்ச்சியாக நாற்பது நாட்களாக தினமும் வந்து நின்று சவாலிடுகிறான். தன்னுடன் மோத இஸ்ரவேல் படையின் சார்பாக யாராவது ஒருவர் மட்டும் வரவேண்டும் என்கிறான்.

ஆனால் சவுலுக்கும் அவனுடைய போர்ப்படையில் உள்ளவர்களுக்கும் பிரச்சனையை எதிர்கொள்ள வேண்டும் என்று தோன்றவேயில்லை பாருங்கள்! பிரச்சனைகளை எதிர்க்காவிட்டால் அவைகள் நம்மை மேற்கொண்டுவிடும்; எதிர்த்துப் போனால் நாம் அவற்றை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களாவது கிடைக்கின்றன. இந்த விஷயம் புரியாத காரணத்தினால்; கண்டுக்காமல் விட்டுவிட்டால் தானாகப் போய்விடும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல; சவுல் கோலியாத்தின் சவாலுக்குப் பயந்து அவனை எதிர்த்துப் போகாததினால்; அந்தக் கோலியாத் திரும்பத் திரும்ப பாளையத்தின் முன்னணிக்கு தினமும் வந்துக்கொண்டிருந்தான்.

சவுலும் அவன் படையினரும் கோலியாத்தை வெறும் மாம்சக் கண்களினால் மாத்திரம் தான் பார்த்தார்கள். ஆனால் தாவீது தன்னுடைய ஆவிக்குரிய கண்களை பிரயோஜனப்படுத்தினான். தன்னுடைய வாழ்க்கையில் தேவன் செய்த ஒரு சில அற்புதமான காரியங்களை தன் மனத்திரையில் ஓடவிடுகிறான். பிறகு அவற்றை வார்த்தைகளாக வெளியே கொண்டு வருகிறான். தாவீது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது வந்த சிங்கத்தையும், கரடியையும் அவன் கொன்ற விதத்தை விவரிக்கிறான்.

பிரச்சனைகள் கோலியாத் போல எழும்பி சவாலிடும் நேரங்களில் நாம் கவனிக்க வேண்டியது தேவனுடைய வார்த்தைகளைத் தான். கஷ்டங்களைச் சொல்லி புலம்புவதும், என்னவாகுமோ என்று பயப்படுவதும், அழுது அங்கலாய்ப்பதும் சாதாரணமாக நாம் செய்யும் காரியங்கள். ஆனால் இதனால்

எந்த பிரயோஜனமும் இருக்கப்போவதில்லை என்பது தெரிந்தும் இதையே தான் செய்து வருகிறோம். டாக்டரிடம் போய் சரீரத்தில் இருக்கிற வியாதியைச் சொல்கிறோம். உடனே அவர் பரிசோதித்து விட்டு; அந்த வியாதி நீங்குவதற்கான மருந்துகளை எழுதிக் ***(prescription)*** கொடுக்கிறார். அதன்படி மருந்துக்கடையில் வாங்கி மாத்திரைகளை வாயில் போட்டு விழுங்குகிறோம். அதெப்படி இத்துனூண்டு மாத்திரையை வாயில் போட்டு விழுங்கினால் வியாதி எப்படி சுகமாகும்? என்று யாரும் டாக்டரிடம் கேட்பதில்லை! இந்த மாத்திரையைக் கண்டுபிடித்தது யார்? இதில் என்னவெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறது? இந்த மாத்திரையைச் சாப்பிட்டு இதுவரை எத்தனைபேருக்கு குணமாகியிருக்கிறது என்றெல்லாம் டாக்டரிடம் கேட்டுவிட்டுத்தான் சாப்பிடுவீர்களா? (அப்படி கேட்டால் நடப்பதே வேறு!). ஆனால் வியாதியிலிருந்து விடுதலை பெற தேவனுடைய வழிகளைத் தெரிவு செய்து; ஆவிக்குரிய ரீதியில் முயற்சிகள் எடுக்கும் போது மட்டும் ஆயிரம் கேள்விகள் எழும்புகின்றன, ஆயிரத்தெட்டு சந்தேகங்கள் முளைக்கின்றன. கண்களால் காணக்கூடிய காரியங்கள் அந்த அளவுக்கு நம்மை உருட்டி மிரட்டி வைத்திருக்கின்றன. கண்களால் காணக்கூடிய பூமிக்குரிய காரியங்களை ஆளுகை செய்யக்கூடிய கண்காணாத உலகம் ஒன்று உள்ளது என்பதைப் பற்றிய அறிவில்லாத காரணத்தினால் கோலியாத் எழும்பி வரும்போது தேவபிள்ளைகள் அலறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்!

தாவீது அப்படி பயந்து ஓடவில்லை. அவன் தேவனை அறிந்திருந்தான், கண் காணாத தேவனுடைய நித்தியமான காரியங்களைக் குறித்த அறிவு அவனுக்குள் இருந்தது. தேவனுடைய வார்த்தைகளின் உலகமான பரலோகத்திலிருந்து வரும் தேவனுடைய வார்த்தைகளை தன்னுடைய போராயுதமாக எடுத்துக் கொள்கிறான். தாவீது கோலியாத்தை ஜெயித்தது கூழாங்கற்களினால் அல்ல, தேவனுடைய வார்த்தையினால் தான்! தாவீதின் விசுவாச அறிக்கையை கவனியுங்கள்:

***"ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நித்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் … இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; … நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன் … என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. அந்த சிங்கத்தையும் அந்தக் கரடியையும் … நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; … என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் …"***

தாவீது கோலியாத்தை பார்தது சவாலிட்டுச் சொன்னது: ***"… நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் (இயேசுவின்) நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். … கர்த்தர் உன்னை (கோலியாத்தை) என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றைய தினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன்; இதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்வார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்"*** என்றான். தாவீது செய்ததை விட அவன் பேசியது அதிகம்; அந்த அதிகப்படியான பேச்சு தான் அவன் ஜெயிப்பதற்கு காரணமாக அமைந்தது.

தாவீது கோலியாத்தை எதிர்த்து சண்டையிடப் போவதற்கு யோசித்துக் கொண்டு நிற்கவில்லை. அப்படி அவன் யோசித்துக் கொண்டு நின்றிருந்திருப்பானானால் கோலியாத் தாவீதை கொன்று போட்டிருப்பான். பிரச்சனைகள் வரும்போது யோசித்துக் கொண்டு நிற்பதினால் தருணங்களை இழந்து விடுகிறோம். தேவப்பிள்ளைகளின் வாழ்க்கையில் இது மிகப் பெரிய பின்னடைவு

***drawback!*** ஏலா பள்ளத்தாக்குக்கு வருகிறார்கள் தான், யுத்தத்திற்கு அணிவகுத்து ஆரவாரமும் செய்கிறார்கள்; எல்லாம் சரி தான். ஆனால் பிரச்சனைகளை எதிர்ப்பதுமில்லை, அதை அழிப்பதுமில்லை. பேசாமல் (கண்டுக்காமல்) விட்டு விட்டால் கால ஓட்டத்தில் அது தானாகவே போய்விடும் என்று கணக்குப் போட்டுவிடுகிறார்கள். ஆனால் அது தப்புக் கணக்கு என்பதை கண்டிப்பாக தெரிந்து கொள்ளுங்கள். சவுல் கண்டுக்காமல் விட்டுவிட்டதால் கோலியாத் போய்விடவில்லை, திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தான்; நாற்பது நாட்களாக வந்து கொண்டேயிருந்தான். நாற்பதாவது நாளில் தாவீது கோலியாத்தின் கதையை முடித்ததால் மட்டுமே பிரச்சனை நாற்பது நாளோடு முடிந்தது. இல்லாவிட்டால் திரும்பவும் வந்து வந்து முற்றுப் பெறாத தொடர்கதையை எழுதிக் கொண்டேயிருந்திருப்பான் கோலியாத்!

தேவபிள்ளைகள் வியாதியிலும், வேதனையிலும், கண்ணீரிலும், தத்தளிப்பிலும், தரித்திரத்திலும் சாபத்திலும், பாவத்திலும் சிக்கிக்கொண்டு அவற்றின் கிடுக்கிப்பிடியிலிருந்து தப்பிக்க முடியாமல் தப்பிக்க வழி தெரியாமல்; அவற்றோடு ஒத்துப் போக ஆரம்பித்துவிடுகிறார்கள். நாளடைவில் அது அவர்களுக்கு பழகிப் போய்விடுகிறது. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்; வாசல் தோறும் வேதனை இருக்கும்; காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று சப்பைக் கட்டு கட்டுகிறார்கள். இவர்களுடைய இந்த தேவையில்லாத சகிப்புத்தன்மையால் யாருக்கு என்ன பிரயோஜனம்?

இவர்களும் வாழாமல் அடுத்தவரையும் வாழ விடாமல் சோகத்தில் சுகம் காணப் பழகிவிடுகிறார்கள். போகப் போக இது தான் இவர்களுக்கு பிடித்துப் போகிறது பாருங்கள்! அடுத்தவீடு அண்டைவீடுகளில் தங்களுடைய சோகக்கதையை சொல்லி புலம்புவது, கண்ணீர் விடுவதில் இவர்களுக்கு ஒரு அலாதி இன்பம்! ஒரு காரியத்தை அடிக்கடி செய்கிறார்கள் என்றால் அது அவர்களுக்கு பிடிக்கிறது என்று தான் அர்த்தம். பிடிக்காத காரியத்தை யாரும் அடிக்கடி வேண்டுமென்றே மெனக்கெட்டு செய்வதில்லை. இவர்களுக்கு புலம்புவது பிடிக்கிறது, அழுவது பிடிக்கிறது, அதனால் மனதுக்குள் ஒரு சோகத் திரையை தொங்கவிடுவது பிடிக்கிறது, அதை அடிக்கடி விலக்கி சோக நாடகம் நடத்திக் காட்டுவதும் பிடிக்கிறது! சோகத்தில் சுகம் காணும் சாபத்தின் பிள்ளைகள்!

அந்த நாட்களில் ... **“கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்”** என்ற காதல் தோல்விகளால் நிறைந்த ஒரு கவிதைப் புத்தகம் ஆயிரக்கணக்கில் விற்றுத்தீர்ந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டிருக்கிறேன். என்னவொரு விபரீத மனப்போக்கு! நாம் அப்படி இருக்கவே கூடாது; வெற்றியில் சுகம் காண வேண்டும், தேவனுடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் சுகம் காண வேண்டும். கண்காணாத தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிப்பதில் சுகம் காண வேண்டும்; அந்த விசுவாசத்திற்கேற்ற கிரியைகளை நடப்பிப்பதில் சுகம் காண வேண்டும். உலகதோற்றத்திற்கு முன்னதாக நமக்காக தேவன் ஏற்படுத்தினவற்றை பார்ப்பதில் சுகம் காணுங்கள். ஏதேனை வட்டணிப்பதில் சுகம் காணுங்கள். ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை ***claim*** பண்ணுவதில் இருக்கும் சுகமே தனி! இவையெல்லாம் சிலுவையின் மூலம் வெளிப்படுவதை பார்க்கும் போது சுகமோ சுகம்! இப்படி ஆயிரம் விஷயங்கள் இருக்கு!

கோலியாத்தை கீழே சாய்த்தது தாவீதின் கவணிலிருந்து புறப்பட்ட கூழாங்கற்கள் தான் என்று மேலோட்டமாக பார்த்தால் தெரிகிறது. ஆனால் உண்மை அதுவல்ல, அவனுடைய வாயிலிருந்து சீறிப்பாய்ந்த வார்த்தைகள் தான் என்பதை சற்று உற்றுப்பார்த்தால் புரியும். தாவீது தேவனை விசுவாசித்தான்; அதனால் பேசினான், தன்னுடைய வார்த்தைகளின்படி நிச்சயம் நடக்கும் என்று விசுவாசித்தான், **அந்த விசுவாசத்திற்கு அடையாளமாகத்தான் கவணிலிருந்து கூழாங்கற்கள் புறப்பட்டு கோலியாத்தின் நெற்றிக்குள் பதிந்தது. (விசுவாசம் பூரணமாகும்போது கிரியையாக தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.)** பிரச்சனைகளை அழிக்கும் அளவில் நம் வார்த்தைகள் இருக்க வேண்டும். பிரச்சனைக்குத் தகுந்த வாக்குத்தத்தங்களை சேகரித்து ***collect*** செய்து; அந்த வாக்குத்தத்தங்களுக்கேற்ற வார்த்தைகளைப் பேச வேண்டும். அப்போது அந்த வார்த்தைகள் பறந்து

சென்று கோலியாத்துக்களை வீழ்த்தும். தாவீது அப்படித்தான் பேசினான்; அவனுடைய வார்த்தைகள் தேவன் வாக்குப்பண்ணின வார்த்தைகளுக்கு ஒத்திருந்தன. ***(bracket*** க்குள் வரும் வசனங்களை தாவீது ***refer*** பண்ணுவதை கவனியுங்கள்)

*"ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் ... (1 யோவான் 4:4) இவனிமித்தம் ஒருவனுடைய இருதயமும் கலங்க வேண்டியதில்லை; ... நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன் ... (யாக். 4:7) என் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. அந்த சிங்கத்தையும் அந்தக் கரடியையும் ... நான் கொன்றேன்; விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்; ... என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் ..."(1 பேதுரு 5:8, யோபு 35:10, யூதா 1:10)*

*"... நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் (இயேசுவின்) நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். ... (கொலோ. 3:17) கர்த்தர் உன்னை (கோலியாத்தை) என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னைவிட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றைய தினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன்; இதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்வார்கள். (பிலி. 2:17) கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல (2 கொரி. 10:4) என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; (யாத். 14:14) அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக் கொடுப்பார்" (ஆதி. 14:20)"*

நாமும் கூட இப்படித்தான் தேவன் வாக்குப் பண்ணியிருக்கும் வார்த்தைகளைக் கையிலெடுத்து எதிர்த்து நிற்கும் பிரச்சனைகளின் முன்பாக அறிவிக்க ***(declare)*** வேண்டும். தாவீது சவுலினுடைய யுத்த உடைகளை உடுத்திப் பார்க்கிறான்; அது அவனுக்கு ஒத்து வரவில்லை. அவனுக்கு ஆவிக்குரிய போராயுதங்கள் தேவையாக இருந்தது! அவன் உபயோகப்படுத்தின ஆவிக்குரிய போராயுதங்கள் தேவனுடைய வார்த்தைகள் தான் என்று பார்க்கிறோம். தேவனுடைய யுத்தங்கள் உலக ரீதியில் இருப்பதில்லை, அவர் உபயோகிக்கும் போராயுதங்களும் அப்படியே! தேவனுடைய போர்முறையே வேறு, அது அசத்தலானது! தாவீது கூழாங்கற்களை எடுத்து பைக்குள் போட்டுக் கொண்டு கவணை சுழற்றியபடி வருவதைப் பார்த்தது நிச்சயமாக எல்லோரும் கிண்டலடித்திருப்பார்கள். ஆனால் தாவீது அசரவில்லை, தன்னுடைய வெற்றியை அவன் நிச்சயித்திருந்தான். கண்களால் காணக்கூடிய அநித்தியமான காரியங்களை முறியடிக்கக்கூடிய ஆவியுலக போராயுதங்களை அவன் முதலிலேயே அனுப்பி விட்டான். கண்களால் காணமுடியாத நித்தியமான ஆவியான தேவனுடைய வார்த்தைகள் தான் அது! கூழாங்கற்களுக்கு பதிலாக சில களிமண் உருண்டைகளை எடுத்துக் கொண்டு போயிருந்தாலும் அவன் தான் ஜெயித்திருப்பான்! ஏனென்றால் இங்கே செயல்பட்டது ***(process)*** வார்த்தைகள் தானேயன்றி கூழாங்கற்களல்ல!

கோலியாத்தின் ரூபத்தில் பிரச்சனைகள் எழும்பி வரும்போது; தேவனுடைய வார்த்தைகளை எடுத்து தாமதிக்காமல் சீக்கிரமாக கவணுக்குள் வைத்து அனுப்பி அடித்து நொறுக்கி தூள் கிளப்புங்கள்! பொருளாதார பிரச்சனை முன்னால் நிற்கிறதா? வேதத்தில் இருந்து செழிப்பு, ஐசுவரியம், பணம், பொன், பெருக்கம் போன்ற வார்த்தைகளின் அடிப்படையில் வரும் வாக்குத்தத்த வசனங்களை சேகரிக்க வேண்டும். ஒத்துவாக்கிய வேதாகமம், அல்லது ***computer bible*** மூலம் சூழ்நிலைக்கேற்ற வசனங்களை ***collect*** பண்ண முடியும். செழிப்பு என்ற வார்த்தை வரும் வசனங்கள் எல்லா சூழ்நிலைக்குமே பொருந்தும். ஏனென்றால் செழிப்பு என்பது பணத்தை குறிக்கும் சொல் அல்ல, நாம் எல்லா விதத்திலும் நன்றாக இருக்க வேண்டும், பரிபூரணப்பட்டிருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்தும் சொல் அது.

முதலில் ஒரு நூறு வசனங்களை எழுதி வைத்து அறிக்கை செய்ய வேண்டும். சத்தமாக

அடிக்கடி தினமும் அறிக்கை செய்வதன் மூலம் நம் விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும். நாம் அறிக்கை செய்வது நம் காதுகளுக்குக் கேட்டாக வேண்டும். ஏனென்றால் விசுவாசம் கேள்வியினால் வரும்! நம்முடைய வார்த்தையின் உச்சரிப்புகள் நம் காதிலேயே வந்து விழும் போது; அது நெருப்பை விசிறி விட்டதைப் போலாகிறது, நம்முடைய விசுவாசம் அனல் மூண்டு எழும்புகிறது. அக்கினி நாக்குகள் போல விசுவாசம் பற்றியெறிந்து பொருளாதார நெருக்கடியை – தரித்திரத்தை கொஞ்சம் கொஞ்சமாக பட்சிக்க ஆரம்பிக்கிறது. வசனங்கள் மனப்பாடமாக மனதில் பதிய ஆரம்பிக்கும். பிறகு வசனங்களுக்கு பொருத்தமான, சம்மந்தப்பட்ட வார்த்தைகளை பேச ஆரம்பிக்க வேண்டும். நாளாக ஆக நம்முடைய உரையாடல்களிலேயே இந்த விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும். நம் பேச்சு, மூச்சு, சிந்தனை, செயல் எல்லாவற்றிலேயும் இது வெளிப்பட வேண்டும்.

தாவீது யோசித்துக் கொண்டு நிற்கவில்லை, பயந்து கொண்டு நிற்கவில்லை, அவன் தாமதிக்கவுமில்லை. ... தாவீது தீவிரமாக ***(hasted - great speed))*** ... பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, ... தன் கையை அடைப்பத்திலே ***(bag)*** போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்து சுழற்றி ***-(slang)***, பெலிஸ்தனுடைய நெற்றியில் ***(forehead)*** பட எறிந்தான்; அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து ***(sunk)*** போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான். நம் கஷ்டத்தை பார்த்துக் கொண்டு ஸ்தம்பித்துப் போய் நிற்கக்கூடாது, அழுது புரளுவதாலும் எதுவும் நடக்கப் போவதில்லை. பொருளாதார பிரச்சனையில் இருந்து வெளியே வர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆவிக்குரிய ரீதியில். உலக வழக்கத்தின்படியான முயற்சிகள் காரியத்துக்குதவாதவைகள்.

தாவீது சவுலின் போர் உடைகளைப் போட்டுக் கொண்டு கோலியாத்துடன் சண்டை போட போயிருப்பானானால் **... ?** அது அவனுக்கு அப்பியாசமில்லாதபடியினால் கால் தடுமாறி கீழே விழுந்திருப்பான், அல்லது நடையின் வேகம் குறைந்திருக்கும். இந்த நேரத்தில் கோலியாத் தாவீதை மேற்கொண்டு கொன்று போட்டிருக்கக்கூடிய அபாயக்கட்டம் கூட ஏற்பட்டிருக்க முடியும். நம்முடைய சூழ்நிலையை பார்த்துக் கொண்டிருப்பதாலும், கையில் பணம் இல்லையே என்று புலம்புவதாலும் பிரச்சனை நம்மை மேற்கொள்ள சாதகமான சூழ்நிலையை நாமே ஏற்படுத்திக் கொடுக்கிறோம். ஏழ்மையிலிருந்து வெளியேற தேவன் எத்தனையோ அணுகுமுறைகளை வேத வசனங்களுக்குள் புகுத்தி வைத்திருக்கும் போது; அவற்றை எடுக்காமல் உலக முயற்சிகளை எடுக்கும் போது; நம் கஷ்டத்தை அதிகமாக்கிக் கொள்கிறோம். அதுமட்டுமல்ல ஆபத்திலும் சிக்கிக் கொள்கிறோம்.

தேவனுடைய வார்த்தைகளை நம் வாழ்க்கைக்குள் வரவிடுவோம், பழக்கப்படுத்துவோம், அதை பிரச்சனைகளுக்குள் அனுப்ப ஆரம்பிப்போம், கோலியாத்துகள் வீழ்வது நிச்சயம். தாவீது அனுப்பிய கூழாங்கல் கோலியாத்தின் நெற்றிப்பொட்டுக்கள் மீது பதிந்து போனது. நம்முடைய விசுவாச வார்த்தைகள் பிரச்சனைகளுக்குள் (தரித்திரத்திற்குள் – வியாதிகளுக்குள்) போய் பதிய வேண்டும். முகங்குப்புற விழுந்து கிடக்கும் கோலியாத்தை கண்முன் கொண்டு வருவோம். நவீன கால ***(up - to - the - minute)*** துப்பாக்கிகளிலும் இதே தொழில் நுட்பம் தான் கையாளப்படுகிறது. துப்பாக்கியை இயக்கும் போது, உள்ளேயிருக்கும் குண்டு குழாயின் வழியாக வேகமாக வெளியேறுகிறது. குறி வைக்கப்பட்ட இலக்கை நோக்கி அது செல்கிறது. இலக்கில் இருக்கும் மிருகத்தைக் கொல்வதற்கேற்ற அளவீட்டின் படியான குண்டு செல்கிறது. மிருகத்தின் உடலுக்குள் அது பதிந்து போகிறது; மிருகம் சுருண்டு விழுந்து செத்துப் போகிறது.

பிரச்சனையை நோக்கி குறிவைக்கும் நம் விசுவாசமாகிய ***gun*** துப்பாக்கிக்குள் இருந்து; பிரச்சனையை தாக்கி அழிப்பதற்கேதுவான தேவனுடைய வார்த்தைகள் புறப்பட்டுச் செல்கிறது. தேவனுடைய வார்த்தைகள் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றிவிட்டுத்தான் திரும்பும் என்று பார்க்கிறோம். வார்த்தையை பெற்றுக் கொண்ட தேவதூதர்கள் அதன் நோக்கத்தை நிறைவேற்ற விரைகிறார்கள். அதே நேரத்தில் நம்முடைய மனதும் சரீரமும் அதற்கேற்ற விதத்தில் திருப்பப்படுகிறது. வல்லமையான தேவ வார்த்தைகள் பிரச்சனைகளுக்குள் பாய்ந்து செல்லுகிறது. கோலியாத்தின் நெற்றிக்குள் கூழாங்கல் புதைந்து போனது போல வார்த்தைகள் போய் புதைகிறது. முடிவில்

பிரச்சனைக்கு முடிவு வருகிறது, கோலியாத் செத்து விழுகிறான்.

யுத்தம் கர்த்தருடையது தான் என்றாலும்; அவர் அதை நேரிடையாகச் செய்யாமல் நம் மூலமாகச் செய்கிறார். தன்னுடைய வார்த்தையை அனுப்பி; அதாவது நம் மூலமாக அனுப்பி காரியங்களை செயல்படுத்துகிறார். அவர் அனுப்புகிற ஆவிக்குரிய சக்தி வாய்ந்த வார்த்தைகள் நம்முடைய இருதயத்திற்குள் இறங்கி நம் வாய் மூலமாக வெளிப்படும் போது ***(release)*** அவை செயல்பட ஆரம்பிக்கின்றன, அனுப்பப்பட்ட நோக்கமும் நிறைவேறுகிறது. தாவீது அடைப்பையிலிருந்து கூழாங்கற்களை எடுத்து கவணில் வைக்குமுன்னதாகவே அவன் அனுப்பின வார்த்தைகள் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. வார்த்தைகளினால் தாக்கப்பட்ட கோலியாத் சில நொடிகள் ***Shock*** ஆகி ஸ்தம்பித்து நின்ற நேரத்தில் தாவீது வேகமாக செயல்படுகிறான். தாவீதின் வாயிலிருந்து புறப்பட்ட அந்த ஆவிக்குரிய சக்தி (வார்த்தைகள்) அவன் செயல்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது. பிரச்சனைகள் அதிர்ச்சியடைந்து வாய் பொத்தி நிற்குமளவிற்கு நம் செயல்பாடு ***reaction*** இருக்க வேண்டும்.

தாவீதின் உருவத்தைப் பார்த்து கோலியாத் அவனை அசட்டை பண்ணுவதைப் பார்க்கிறோம். அவன் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை; தாவீது இந்த அளவுக்கு ***react*** பண்ணுவான் என்று! நாம் தேவனுடைய யுத்தத்தில் இருக்கும் போது; நம்முடைய நிலைமையை பார்க்கும்போது மற்றவர்களுக்கு அது அசட்டையாக, கேலியாக, கிண்டலாக, அவமாகத்தான் இருக்கும்! பாவம் நம் தேவன் வார்த்தைகளை தன்னுடைய யுத்த ஆயுதமாக பயன்படுத்துகிறார் என்பது அவர்களுக்கு புரிவதில்லை; கோலியாத் செத்து விழும்வரை அவர்களுக்கு எதுவும் புரிவதில்லை! கர்த்தருடைய யுத்தத்திற்கு நாங்க தயார் ***ready,*** அப்போ நீங்க?

## விசுவாசம்... தொடர்ச்சியாக...:

விசுவாசத்தைப் பற்றி நிறைய நிறைய கற்றுக் கொண்டு வருகிறோம். தேவன் மனிதனை விசுவாசித்துப் பிழைத்துக் கொள்ளும் ரீதியில் தான் உருவாக்கியிருக்கிறார். விசுவாசம் என்பது ஒரு ஆவிக்குரிய (ஆவி ரீதியிலான) சக்தி. மனிதன் ஒரு ஆவி என்று பார்த்தோம். ஆவி – ஆத்மா – சரீரம் என்ற முப்பரிமாணமுள்ளவன் மனிதன். இதில் ஆவி தான் உண்மையான மனிதன். இவனை வேதம் ஆவி, உள்ளான மனிதன், இருதயம் என்று பல பெயரிட்டு அழைக்கிறது.

*"... தான் சொன்னபடியே நடக்கும் என்று தன்* ***இருதயத்தில்*** *சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் ... மாற். 11:23."* விசுவாசம் என்ற ஆவிக்குரிய சக்தி இருதயத்தில் (உள்ளான மனிதன் – ***inner man)*** உருவாகிற – நடக்கிற – வளர்கிற காரியம் என்பதை வசனத்தில் பார்க்கிறோம். நம்முடைய உள்ளான மனிதன் தான் விசுவாசிக்கிறான் என்பதைத் தெளிவாக புரிந்து கொள்வோம். நம்முடைய பூமிக்குரிய கூடாரமாகிய சரீரமோ, உள்ளான மனிதனுடைய சிந்தனைப் பகுதியான மனதோ விசுவாசிப்பதில்லை என்பதையும் புரிந்து கொள்வோம். உள்ளான மனிதனைப் பற்றி எதுவுமே தெரியாத ஒருவனுக்கும் விசுவாசத்துக்கும் சம்பந்தமில்லை! அப்படிப்பட்ட ஒருவன் தன்னை விசுவாசி என்று அழைத்துக் கொண்டாலும் அவனுடைய விசுவாசம் ஒரு குழப்ப நிலையில் தான் இருக்கிறது. அவனால் எதையும் கண்ணால் பார்த்தால் தான் விசுவாசிக்க முடியும். கண்காணாத ஒன்றை விசுவாசிக்க அவனால் முடிவதில்லை. கண்களால் காண முடியாத ஒன்றை விசுவாசிக்கும் செயல் திட்டம் ***(Program Software)*** நம் உள்ளான மனிதனில் தான் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆவிக்குரிய உள்ளான மனிதனின் கண்கள் திறக்கப்படாத ஒரு மனிதன்; (நியாயப்பிரமாணம் சார்ந்த மனிதன்) சத்தியத்தை அறிந்து கொள்ளும் நாள் வரையில் ஒரு குழப்படியான விசுவாசத்தினடிப்படையில் தான் செயல்படுகிறார் என்பதை அறிந்து கொள்ளலாம். சரீரத்திற்குள் இருக்கிற உள்ளான மனிதன் தான் (ஆவி) உண்மையில் மனிதன் என்பதைப் பற்றிய வெளிப்பாடு இல்லாத ஒருவனுக்கு விசுவாசத்தைப் பற்றிய வெளிப்பாடும் இருக்காது. இதனால் இப்படிப்பட்டவர்கள் விசுவாசத்திற்கு தவறான அர்த்தங்களை கற்பித்துக் கொண்டு; அதை நடைமுறைப்படுத்தி,

திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள்.

வியாதி வந்தால் மருத்துவம் எதுவும் பார்க்காமல் விசுவாசத்தினாலேயே சுகமாக முயற்சிக்கும் கூட்டத்தார் சபை வட்டாரத்தில் இருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். அது மிகவும் நல்ல முயற்சி தான்; விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று தான் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ... இப்படிப்பட்ட விபரீத முயற்சியில் தோல்வியடைந்த ஒரு சகோதரனின் கதையைக் கேளுங்கள். மூல வியாதியினால் பாதிக்கப்பட்ட அவர் வீட்டிலுள்ளவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் மருத்துவம் எதுவும் பார்க்கவில்லை, ஜெபித்துக் கொண்டே இருந்தார். கொஞ்ச காலத்தில் வியாதி முற்றியது; மயக்க நிலையில் அவரை மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். மருத்துவம் பலனளிக்காமல் சில நாட்களில் அவர் இறந்து போனார். அந்த சகோதரனுடைய மகள் என்னுடைய தோழி; தன்னுடைய அப்பா விசுவாசத்தினால் இறந்து போனதாக என்னிடம் சொன்னாள்! இப்போது அதை நினைத்துப் பார்க்கும் போது எவ்வளவாய் நான் அதிர்ச்சியடைகிறேன். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று தானே இருக்கிறது. உள்ளான மனிதனை பற்றி, அவனிலிருந்து உருவாகும் விசுவாசத்தைப் பற்றி எதுவும் தெரியாமல், குழப்படியான விசுவாசத்தில் பிழைப்பவர்களின் நிலைமை எப்படியிருக்கிறது பாருங்கள்!

ஆஸ்பத்திரிக்குக் கூட கொண்டு போகாமல் சாகும் வரையிலும் வீட்டிலேயே வைத்திருந்து; தன்னுடைய பெண் குழந்தையை சாகக் கொடுத்த ஒரு விசுவாச சகோதரியும் இதே ரீதியில் தான் பேசினார்கள். விசுவாசத்தினால் என் குழந்தை இறந்தாள் என்று சொன்னபோது அழுவதா சிரிப்பதா என்றே எனக்குத் தெரியவில்லை. நாம் பிழைத்துக் கொள்வதற்காகத்தான் விசுவாசம் என்ற ஆவிக்குரிய சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர சாவதற்காக அல்ல!

நம்முடைய ஆவியில் தான் விசுவாசிக்கிறோம் என்ற உண்மையை அறியாதவர்கள் அந்த விசுவாசத்தை சரீரத்தில் வெளிப்படுத்த முயற்சிக்கிறார்கள். வெள்ளை நிற உடை அணிவது, தங்க நகைகள் போடாமலிருப்பது, பூ வைக்காமலிருப்பது, தலையை பின்னாமல் முடிந்து கொள்வது, செருப்பு போடாமலிருப்பது, பவுடர், சோப், மற்றும் வாசனை திரவியங்கள் பூசாமலிருப்பது (இது போல இன்னும் சில ஆயிரம் காரியங்கள்) போன்ற காரியங்களை தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தினடிப்படையில் செய்வதாக சொல்கிறார்கள். (நானும் முன்னாட்களில் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன்).

*தன் **இருதயத்தில்** சந்தேகப்படாமல் விசுவாசித்தால்,* என்று தெளிவாக வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய விசுவாசம் செயல்படும் பகுதி நம்முடைய இருதயம் (அதாவது உள்ளான மனிதன் – ஆவி) என்று சொல்லப்பட்டிருக்க, அதை சரீரத்தில் முயற்சிப்பது வீண் முயற்சியாக, முட்டாள்தனமாக இருக்குமல்லவா? ஆனால் சபையில் பெரும்பான்மையாக இந்தக் கூத்து தான் இன்றைய வரைக்கும் நடந்து கொண்டிருக்கிறது.

*"மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: **தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே** என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. கொலோ. 2: 21, 22, **23**"* சரீரத்தில் – உடையலங்காரங்களில் சில மாற்றங்களைச் செய்து கொள்வதற்கும் விசுவாசத்திற்கும் சம்பந்தமில்லை என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொள்ளுவோம். இன்னும் மோசமான செய்தி என்னவென்றால்; இப்படியெல்லாம் செய்வதின் மூலமாக இருக்கிற கொஞ்ச விசுவாசமும் ஒரே போக்காகப் போய் விடுகிறது. பிறகு மிஞ்சியிருப்பது பஞ்சப்பரதேசி கோலம் மட்டும் தான். இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தார் தனக்கும் பிரயோஜனமில்லாமல், சபைக்கும் பிரயோஜனமில்லாமல், உலகத்துக்கும் பிரயோஜனமில்லாமல் சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களிடம் ஜாக்கிரதையாயிருங்கள். நான் உங்களுக்கு

சொல்ல விரும்புவது இது தான்: ***“மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். கொலோ. 2:19.”***

விசுவாசத்தினால் நீதிமான் செழிப்பான், எல்லா ரீதியிலும் நன்றாக இருப்பான் என்று வேதம் சொல்லியிருக்க, பஞ்சப்பரதேசி, ஆண்டிப்பண்டாரம் கோலத்தில் போய் சுவிசேஷம் சொன்னால் ... ? நான் இதைப் பற்றி முன்னதாகவே நிறையச் சொல்லியிருக்கிறேன். இருப்பதையும் உரிந்துக் கொண்டு பஞ்சபரதேசியாக ஒரு மனிதனை மாற்றுகிற இயேசு நிச்சயமாக அவர்களுக்கு வேண்டவே வேண்டாம்! அப்படிப்பட்ட ஒரு இயேசுவை நீங்கள் யாருக்கும் பிரசங்கிக்கவும் வேண்டாம்; உங்களுக்கு புண்ணியமாகப் போகட்டும்! ஒரு மனிதனை அடித்து உதைத்து, அவனை வியாதிக்குள்ளாகத் தள்ளி விடுகிற இயேசு நிச்சயமாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவாக இருக்கவே முடியாது. ஏனென்றால் அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் என்று வசனம் சொல்லுகிறதே! சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தவிர வேறே ஒரு இயேசுவை பிரசங்கிக்கக் கூடாது என்று வேதம் கட்டளையிடுகிறது. ***“இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, ... 1 கொரி.”*** 2:2. சாபம், துன்பம், துயரம், தொல்லைகள், கவலை, கண்ணீர், பாரங்கள், வருத்தங்கள், தோல்விகள், வியாதிகள், தரித்திரம் போன்றவைகள் தேவனால் தான் வருகிறது என்று பிரசங்கிப்பவர்கள் சிலுவையில் அறையப்படாத இயேசுவை பிரசங்கிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இவர்கள் பிரசங்கிப்பது பவுல் பிரசங்கித்த இயேசு அல்ல! அப்படியானால் வேறே இயேசுவை பிரசங்கிக்க முடியுமா? முடியும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்! ***“... உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், ... 2 கொரி. 11:4”***

நீங்கள் கேட்கிற பிரசங்கம் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும், பிரமிக்க வைக்க வேண்டும், நம்பிக்கை தளிர்களை துளிர்க்க வைக்க வேண்டும், விசுவாசத்தை உங்களில் துவக்குவதாக – பன்மடங்காக்குவதாக ***motivate*** பண்ணுவதாக இருக்க வேண்டும். அப்படி இருக்குமானால் அந்த பிரசங்கியார் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத்தான் பிரசங்கித்திருக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, உங்களை கண்ணீர் விட்டு கதறி அழ வைத்து, அரட்டி, உருட்டி, உருண்டு புரள வைத்து, பயத்தையும், திகிலையும் பிரசங்கிப்பாரானால்... அது சிலுவையில் அறையப்படாத வேறொரு இயேசுவைப் பற்றின பிரசங்கம் என்பதை திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். அந்த இடத்தை விட்டு துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடியே போய்விடுங்கள்; அந்த பிரசங்கியாரின் சபை இருக்கிற திசை பக்கம் தலை வைத்துக் கூட படுக்காதிருங்கள்!

***Colorful*** ஆக வண்ணமயமாக உடுத்திக் கொள்ளுங்கள். வண்ண மயமான ஆடைகள் மனதுக்கு புத்துணர்ச்சியையும் ஒரு எதிர்பார்ப்பையும் உண்டாக்குகிறது. காஞ்சிபுரம் பட்டுச் சேலை கட்டலாமா, கூடாதா? என்று கேள்வி கேட்டுக் கொண்டு நிற்க வேண்டாம்; *“ராஜ குமாரத்தி உள்ளாக பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது **(wrought gold - decorative)** சங். 45:13.”*

தேவனுடைய பிள்ளைகள் தங்க நகை போட்டுக்கலாமா? கூடாதா? என்று நீண்ட காலமாக பட்டிமன்றமே நடந்து கொண்டிருக்கிறதே... என்று யோசனையா? இனி மேல் யோசிக்க வேண்டாம். பட்டிமன்ற விவாதத்திற்கு ஒரு நல்ல முடிவு வந்துவிட்டது; யோசிக்காமல் போட்டுக் கொள்ளுங்கள். *“... ராஜஸ்திரீ ஒப்பீரின் தங்கம் அணிந்தவளாய் **(wearing ornaments of finest - luxury gold)** உமது வலது பாரிசத்தில் நிற்கிறாள். சங். 45:9”*

சரீரத்தில் பண்டார பரதேசி கோலம் போட்டு தேவனுடைய கவனத்தைக் கவர முடியும் என்று நினைப்பீர்களானால் உங்கள் நினைப்பு 100% வீண் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தேவன்

உங்களுடைய சட்டையையும் சொட்டையையும் பார்ப்பதில்லை. உங்களுடைய உடையலங்காரத்தையும், சிகையலங்காரத்தையும் பார்த்து மார்க் போடுவதுமில்லை. அவர் உங்களுடைய இருதயத்தை மாத்திரம் தான் பார்க்கிறார், அதாவது ஆவியை, அதாவது உள்ளான மனிதனை மட்டும் தான் பார்க்கிறார். அந்த உள்ளான மனிதனின் (அவன் தான் நிஜ மனிதன்) நடையுடை பாவனைகளைக் கவனிக்கிறார். ***"... மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். 1 சாமு. 16:7"***

இவர்கள் சொல்லுகிறபடி நடையுடை பாவனைகளில் சில மாற்றங்களை செய்து கொள்வதன் மூலமாக விசுவாசத்தில் வல்லவர்களாக முடியும் என்றால், அதிக பரிசுத்தவான்களாக ஆக முடியும் என்றால்... வெள்ளையுடை தரித்து, காலில் செருப்பில்லாமல், தலையை முடிந்து கொள்ளாமல், சாப்பிடாமல் பல நாட்கள் விரதமிருந்து, பல நோன்புகளிருந்து, பல பரிகாரபலிகளைச் செலுத்தி, பக்தி பரவசத்துடன் நடக்கும் தேவனை அறியாத புறமதஸ்தர் இவர்களைவிட சூப்பர் பரிசுத்தவான்களாகி விடுவார்களே! (யோசிப்பதற்கு சில நிமிடங்கள் தருகிறேன்! யோசித்துக் கொள்ளுங்கள்.)

**மிக நேர்த்தியாக உங்களை ஒப்பனை செய்து கொள்ளுங்கள். மனிதன் முகத்தைப் பார்க்கிறான்! பார்த்தால் பார்த்து விட்டுப் போகட்டும்; தேவன் இருதயத்தைத் தானே பார்க்கிறார்? அதனால் நான் பஞ்சபரட்டை மாதிரி தான் இருப்பேன் என்று இருக்கக் கூடாது. நாம் மனிதர்கள் நிறைந்த உலகத்திலிருக்கிறோம்; நம்மைச் சுற்றிலும் மனிதர்கள் இருக்கிறார்கள், மனிதர்களோடு தான் நாம் தொடர்பு கொண்டு எல்லா காரியங்களையும் பூமியின் மீது நடப்பிக்கிறோம். மனிதர்கள் முக்கியம்; எந்தவொரு மனிதனும் தேவசாயலாக, தேவதிட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துடன் தான் பூமியின் மீது பிறப்பிக்கப்படுகிறான். அதனால் மனிதனை இளப்பமாக cheap ஆக நினைக்கக்கூடாது. மனிதர்கள் நம்மைப் பார்த்து, முகத்தைச் சுளிக்கும் அளவிலோ, அருவெறுப்படையும் விதத்திலோ, பக்கத்தில் வந்து பேசுவதற்கு யோசிக்கும் அளவிலோ நம்முடைய தோற்றம் இருக்கக்கூடாது! Take care! Be alert! Mind it!**

உள்ளான மனிதனைச் சரியாகப் பராமரித்தாலே போதும்; அவன் வெளியான மனிதனைச் (சரீரத்தை) சரியாகக் கவனித்துக் கொள்ளுவான். ஏனென்றால், முன்பே நாம் அறிந்திருக்கிறபடி ஆவிரீதியிலான உள்ளான மனிதன்தான் மாம்ச ரீதியிலான வெளி மனிதனை (சரீரம்) ஆளுகை செய்கிறான்.

## விசுவாசமும் வெளிப்பாடும்:

விசுவாசத்தைப் பற்றி சரியாக அறிந்து கொள்வதற்கும் வெளிப்பாடு அவசியம். நமக்குள் இருக்கிற ஆவி தான் உள்ளான மனிதன் என்பதையும் அவன் தேவனைப் போலிருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ள வெளிப்பாடு தேவையாயிருக்கிறது. அந்த உள்ளான மனிதன் தான் விசுவாசிக்கிறான். விசுவாசித்துப் பிழைத்துக் கொள்ளும் ரீதியில் தான் உள்ளான மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான், வடிவமைக்கப்பட்டிருக்கிறான். ஏனென்றால் அவன் தேவனைப்போலிருக்கிறான். நம் தேவன் ஒரு விசுவாச தேவன். எந்தக் காரியமானாலும் சரி முதலில் அது நடக்கும் என்று விசுவாசித்து; பிறகு விசுவாசித்ததை வார்த்தைகளாகப் பேசி, உருவாக்கும் தேவன் அவர்! ஆதியாகமம் 1 ஆம் அதிகாரம் முழுவதிலும் இதைப் பார்க்க முடியும். பேசிப்பேசியே பூமியையும் அதன் நிறைவையும், அண்ட சராசரத்தையும் அதில் சுற்றியோடும் இராசிகளையும் உருவாக்குகிறார். அவர் அப்படித்தான்! அவரை வார்த்தையின் தேவன் என்றும் சொல்லலாம்.

ஆகவே ***So,*** நாமும் கூட அப்படித்தான்! அவருடைய சாயல் + ரூபம் நம்மில் பதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அவருடைய விசுவாசம் + வார்த்தை நமக்குள் பதிக்கப்பட்டிருக்கிறது. ... அவர் இருக்கிற பிரகாரமாகவே நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.***(...because as he is, so are we in this world.)*** 1 யோவான் 4:17. அவர் எப்படி பரலோகத்தில் இருக்கிறாரோ அப்படியே நாம்

இந்தப் பூலோகத்தில் இருக்கிறோம். அதாவது அவர் பரலோகத்தில் ஆவியாக இருப்பது போல நாம் இந்தப் பூலோகத்தில் ஆவியாக இருக்கிறோம். பரலோகம் ஆவியுலகம்; அது கண்களால் காணக்கூடியதல்ல. அதனால் அங்கேயிருக்கிற ஆவியான தேவனுக்கு பரலோகத்தில் இருந்தபடி செயல்பட முடியும். ஆனால் நாம் வாழும் பூலோகம் ஆவியுலகமல்ல; கண்களால் காணக்கூடிய ரீதியில் படைக்கப்பட்டிருக்கும் உலகம். அதனால் நாம் இந்த பூமியில் ஒரு ஆவியாக உலாவி வர முடியாது, வாழ முடியாது. ஏனென்றால் நம்முடைய ஆவியான சரீரத்தால் பூமியில் தொடர்பு கொண்டு எதையும் செய்ய முடியாது.

நம்முடைய ஆவி பூலோகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால்; அதற்கேற்ற ஒரு தொடர்பு சாதனம் ***(mediator - transferring something to one place to another)*** தேவையாயிருக்கிறது. அது தான் நம்முடைய சரீரம்! இந்த சரீரமாகிய கூடாரத்துக்குள் ***(shelter - house)*** இருந்தபடி தான் நம்முடைய உள்ளான ஆவிக்குரிய மனிதன் இந்த பூலோகத்துடன் தொடர்பு கொண்டு இயங்குகிறான். நம்முடைய ஆவியுடன் இணைக்கப்பட்டிருக்கிற ஆத்துமா என்ற சிந்தனை மண்டலம் இதற்கு உதவி செய்கிறது. நம்முடைய ஆவி மனிதன் வெளிப்படுத்தும் காரியங்களை ***(output - production - yield)*** ஆத்துமா பெற்றுக் கொண்டு, சிந்தனையின் மூலமாக அதைச் சரீரத்திற்கு கடத்துகிறது. சரீரத்தில் இருக்கிற மூளை அதன்படி சரீரத்தை இயங்க வைக்கிறது. நம்முடைய உள்ளான மனிதன் விசுவாசிக்கும்போது; அதற்கேற்றபடியான விசுவாசக் கிரியைகளை சரீரம் நடப்பிக்கிறது. நம்முடைய ஆவியில் அவிசுவாசம், பயம், சந்தேகம் போன்ற காரியங்கள் தோன்றும் போது; அவைகள் ஆத்துமாவில் ***display*** ஆகிறது; அதையே சரீரமும் வெளிப்படுத்துகிறது. அதாவது பதறிப் போய் காரியங்களை நடப்பித்து, பல தவறுகளையும், குழப்பங்களையும், பாவங்களையும் செய்கிறது.

நாம் நம்முடைய இருதயத்தில் (ஆவி – உள்ளான மனிதன்) விசுவாசித்து, பிழைக்க கற்றுக் கொள்ள வேண்டும். அதற்குத்தான் இந்த வெளிப்பாடுகள்! எனக்கு வெளிப்படுத்தியவைகளை உங்களுக்குள் பதிய வைத்திருக்கிறேன். பரிசுத்தாவியானவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுத்து சத்தியத்திற்குள் நடத்துவாராக. ஆமென்!

நம் தேவன் ஒரு விசுவாச தேவன், விசுவாசத்தினால் இயங்குகிற தேவன் என்று பார்த்தோம். நாம் அவருடைய விசுவாசப்பிள்ளைகள்; அவரைப் போலவேயிருக்கிறோம் சகல ரீதியிலும்! அதனால் அவரைப் போலவே விசுவாசித்துத் தான் இயங்க வேண்டும்; பிழைக்க வேண்டும் என்பதையும் பார்த்தோம். இந்த மகத்தான ஆவிக்குரிய சக்தியான விசுவாசத்தை விட ஒரு மாபெரும் சக்தியும் இயங்கி வருகிற இரகசியம் உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் அதைப் பற்றியும் கொஞ்சம் பார்ப்போம்.

## விசுவாசம் Vs அன்பு.:

*"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில்* ***அன்பே பெரியது.*** *1 கொரி. 13:13."* ***(... the greatest of these is love)*** வேதத்தில் விசுவாசம் ஒரு பெரிய தலைப்பு ***topic*** என்றால்; அதை விட பெரிய ***topic*** தான் அன்பு! இன்னொரு வேத மொழிபெயர்ப்பில் அன்பு என்ற வார்த்தைக்கு ***Charity*** என்ற அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ***(... the greatest of these is charity)*** இது ***aid, contributions, gifts, donations, help, assistance, offerings, handouts, aims*** என்று பல அர்த்தங்களில் தொனிக்கிறது.

அதாவது அன்பு என்றாலே கொடுப்பது தான் என்று வேதம் வலியுறுத்துகிறது. ஒருவர் நம் மேல் அன்பு காட்டுகிறார் என்பதை எப்படி அறிந்து கொள்கிறோம்? அவர் ஏதாவது ஒரு நன்மையானதை நமக்கு செய்திருக்கிறார்; அதனடிப்படையில் தான் அவர் நம்மேல் அன்பாக இருப்பதைப் புரிந்து கொள்கிறோம். பிரச்சனை நேரத்தில் ஆறுதலாக சில வார்த்தைகள், ஆபத்து நேரத்தில் ஒரு உதவி, நெருக்கடியான நேரத்தில் சில ஆலோசனைகள், தேவையானால் பண உதவி இப்படி ஏதாவது ஒன்றை

கொடுப்பதை வைத்துத்தான் அவருடைய அன்பை புரிந்து கொள்ள முடிகிறது. எதையுமே கொடுக்காவிட்டால் அவர் அன்பாக இருக்கிறார் என்பதை நாம் தெரிந்து கொள்ளவே முடியாதே!

கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருப்பதைப் போலவே, எதையுமே கொடுக்காத அன்பும் செத்தது தான். விசுவாசத்தை கிரியையின் மூலமாகத்தான் வெளிப்படுத்துகிறோம். அதைப்போலவே அன்பை வெளிப்படுத்த, எதையாவது கொடுப்பதன் மூலமாகத் தான் வெளிப்படுத்த முடியும். *"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் **அன்பாகவே** இருக்கிறார். தேவன் நம் மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் **அன்பாகவே** இருக்கிறார்; ... 1 யோவான். 4: 8, 16."* தேவனுடைய அன்பு கூட அவர் கொடுப்பதினடிப்படையில் தான் சொல்லப்பட்டிருக்கிறது. உலகத் தோற்றத்திற்கு முன்னதாவே தேவன் நமக்கு என்னென்ன தேவையோ எல்லாவற்றையும் ஆயத்தம் செய்து; ஏதேனில் அவற்றையெல்லாம் தான் உருவாக்கின முதல் மனிதனாகிய ஆதாமுக்குக் கொடுக்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட அந்த மகிமையான வாழ்க்கையைப் பார்த்து ஆதாம் தேவனுடைய அன்பை புரிந்து கொண்டான். அவன் அந்த மகிமையை இழந்து போன போது; தேவன் தோல் உடையை அவனுக்குக் கொடுத்து தன் அன்பை வெளிப்படுத்துகிறார். அவனை ஏதேனை விட்டு வெளியேற்ற வேண்டிய நிர்பந்தத்திற்கு தேவன் ஆளான போது கூட தொடர்ந்து அவனுக்குத் தேவையான உதவிகளை, பாதுகாப்பை, பொறுப்பை, வேலைகளை, வாழ்க்கையைக் கொடுக்கிறார்.

தேவனுடைய அன்பை நாம் இந்த ரீதியில் தான் புரிந்து கொள்ள முடியும். நான் அன்பாக இருக்கிறேன் என்று சொல்லியும்; எதையுமே நமக்காக செய்யாவிட்டால் ... எந்த நன்மையும் செய்யாவிட்டால் ... ? அவர் அன்பாக இருக்கிறார் என்று எப்படி சொல்ல முடியும்? அது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு அர்த்தமற்ற காரியமாக இருக்குமல்லவா? ***"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத். 7:11."*** தேவன் அன்பாக இருக்கிறார் என்றால்; அவர் நன்மையானதைக் கொடுக்கிறவராக இருக்கிறார் என்று தான் அர்த்தம். நமக்குத் தேவையான பூலோக ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் தந்து தன் அன்பை வெளிப்படுத்துகிறார். அவர் எதையுமே தராமலிருந்தால்; அவருடைய அன்பு அந்தரங்கத்தில் பூட்டிவைக்கப்பட்ட ஒன்றாக, புரிந்து கொள்ளப்படாத ஒன்றாக, அர்த்தம் விளங்காத ஒன்றாகத்தான் இருந்திருக்கும், அப்படிப்பட்ட அன்பால் எந்தவித பிரயோஜனமும் நமக்கு இருந்திருக்காது, மனுக்குலமும் இல்லாமல் அழிக்கப்பட்டுப் போயிருக்கும்.

சகலவிதத்திலும் மனிதனுக்கு சுயாதீனத்தை ***(ability to act freely)*** கொடுத்திருந்தார். தன்னைப் போலொத்த மனிதன் சகல ரீதியிலும் தன்னைப் போலவே இயங்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். ***(A state in which somebody is able to act as he or she chooses, without being subject to any undue restrictions)*** மனிதனுக்கு பூமியின் மீது முழுச் சுதந்திரத்தையும் கொடுத்தார். தனக்குரிய எல்லாவற்றையுமே மனிதனுக்குக் கொடுத்து; அவர் பரலோகத்தில் சுதந்திரமாக இயங்குவதைப் போலவே மனிதன் பூலோகத்தின் மீது முழுச்சுதந்திரத்துடன் இயங்க வைத்தார். அதுமட்டுமா? தன்னைப் போலவே சகல ரீதியிலும் உருவாக்கப்பட்ட மனிதன் ஒருவேளை தன்னுடைய பிரமாணங்களை மீற வேண்டிய சூழ்நிலைக்குள்ளாகலாம் என்பதையும் தேவன் முன்னதாகவே யோசித்திருந்தார். அப்படி ஏதாவது நடந்தால் அதைச் சரிசெய்வதற்கு ஏதுவாக தன்னுடைய ஒரே மகனான இயேசுவை உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே கொடுத்தும் விட்டார் (அதாவது விதையாக விதைத்து விட்டார். சற்று திகைப்பாகக் கூட இருக்கலாம். வெளி. 13:8)

*"... அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். கலா. 5:6"* என்று சொல்லப்பட்டிருக்கிறது. ***(...faith which worked by love).*** அதாவது கொடுப்பதன் மூலமாக நம்முடைய விசுவாசத்தை நிலைநிறுத்துகிறோம். அதாவது அன்பினால் நிலை நிற்கிறது நம்முடைய விசுவாசம்!

கொடுக்கிற நன்மையான எந்த காரியமானாலும் சரி; அது விதையைப் போல செயல்படுகிறது. தேவன் அன்பை விதைப்பவராகவே (அன்பாகவே) இருக்கிறார் என்று பார்க்கிறோம்! நாம் அவரைப் போலவே இருக்கிறோம் என்பது தெரியும். அவரைப்போலவே இருக்கிறோம் என்றால்; அவரைப் போலவே செயல்படும் பொறுப்பையும் பெற்றிருக்கிறோம். "அன்பு – நன்மையானதைக் கொடுப்பது – விதைப்பு" – இது ஒரு வேதத்தின் ஒரு முக்கியமான அம்சமாக ***(subject)*** ஆக வருகிறது.

அதாவது நம்முடைய முக்கியமான ஆவிக்குரிய போராயுதமான விசுவாசம்; அன்பினால் (நன்மையானவற்றை கொடுப்பதால் – விதைப்பதால்) இயக்க ஆற்றலைப் பெற்றுக் கொள்கிறது. நம்முடைய தேவன் ஒரு விசுவாச தேவன், வார்த்தையின் தேவன். தேவன் எதையுமே திடீரென்று உருவாக்கிவிடவில்லை. உருவாக வேண்டும் என்று அவர் விருப்பப்பட்ட எல்லாவற்றையும் குறித்து மனதில் நினைத்தார், திட்டம் பண்ணினார், கற்பனை செய்தார், விசுவாசித்தார்; பிறகு அவற்றை வார்த்தையின் ரூபத்தில் அனுப்பி எல்லாவற்றையும் உண்டாக்கினார். அண்ட சராசரங்களையும், பூமியையும் அதன் மேல் நாம் காணும் எல்லாவற்றையும் தேவன் இவ்விதமாகத்தான் உண்டாக்கினார். ஆதி. 1ம் அதிகாரத்தில் தேவன் இவ்விதமாக எல்லாவற்றையும் உருவாக்குவதைப் பார்க்கிறோம். மனதில் இருப்பது தான் வாய் வழியாக வெளியே வரும். மனதில் எதுவுமே தோன்றாவிட்டால் வாய் மௌனமாகவே இருக்கும்.

தேவன் சகல விதத்திலும் தன்னைப் போலவே தான் மனிதனை உருவாக்கியிருக்கிறார். வார்த்தைகளைப் பேசிப்பேசி எதையும் உருவாக்கும் ஆற்றலையும் நமக்குள்ளாகவே வைத்திருக்கிறார். தேவன் வார்த்தைகளை பேசும் போது; அவைகள் விதைகளாக செயல்படுவதைப் போலவே நம்முடைய வார்த்தைகளும் செயல்படுகிறது. *"மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படி செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்கு திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஏசா. 55:10,11."*

தேவனுடைய குணமே நன்மையான எதையாகிலும் நமக்கு கொடுத்துக் கொண்டேயிருப்பது தான். நமக்கு என்னென்ன தேவையோ எல்லாமே பரலோகத்தில் இருக்கிறது; ஆனால் எல்லாமே வார்த்தையின் உருவத்தில் தான் இருக்கிறது. அதனால் தேவன் நமக்காக எதை அனுப்பினாலும் அதை வார்த்தையின் ரூபத்தில் தான் அனுப்புகிறார். அது விதை போல நமக்குள் இறங்குகிறது. நம்முடைய இருதயத்தில் (உள்ளான ஆவி மனிதனின் சிந்தனை பகுதியில்) அது விதையாக ஊன்றப்படுகிறது. வேத வசனங்களை ஆராயும் போது; அல்லது ஒரு பிரசங்கம் கேட்கும் போது இது நடக்கிறது. அந்த வார்த்தைகளை நாம் ஏற்றுக் கொண்டு, விசவாசித்து அதையே பேசும் போது; அது நடக்க ஆரம்பிக்கிறது. விதை முளைக்க ஆரம்பிக்கிறது. தொடர்ச்சியாக நாம் செய்த அறிக்கையை மாற்றாமல் அதில் உறுதியாக இருக்கும் போது; நாம் விரும்பியதைச் செய்ய நம்முடைய மனமும் தொடர்ந்து நம்முடைய சரீரமும் திருப்பப்படுகிறது. முடிவாக, நம்முடைய முயற்சிகள் கை கூடி வருகிறது, வெற்றியும் கிடைக்கிறது. நாம் விரும்பியது நம் கையில் வந்து கிடைக்கிறது, அல்லேலூயா!

பரலோகத்தில் ஆவிக்குரிய காரியங்கள் மட்டுமே இருக்கின்றன, அவற்றில் வார்த்தையும் ஒன்று. அதனால் தேவன் வார்த்தையை மாத்திரம் விதைக்கிறார். ஆனால் நாம் காணும் பூலோகத்தில் அந்த வார்த்தைகளால் உருவாக்கப்பட்ட எல்லா காரியங்களும் நிறைந்து, இறைந்து கிடக்கின்றன. சொல்லிமுடியாத ஆஸ்திகளும், ஐசுவரியங்களும், விலையுயர்ந்த வஸ்துக்களும், பொன்னும், இரத்தினங்களும் ... நம்முடைய செழிப்பிற்கான எல்லா காரியங்களும் புதையுண்டு போய்க் கிடக்கின்றன. பூமிக்குள்ளும், சாத்தானுடைய ஆளுகைக்குட்பட்டவர்களின் எல்லைகளுக்குள்ளும் அவைகள் சிக்குண்டுப் போய் கிடக்கின்றன. தேவனுடைய இராஜ்ஜிய பணிக்கு எந்த விதத்திலும்

பிரயோஜனப்படாமல் அவைகள் விழலுக்கு இறைத்த நீராக வீணாகிக் கொண்டிருக்கின்றன. தேவனை அறியாத உலக மக்கள் தேவபிள்ளைகளைப் பார்க்கிலும் தங்களுடைய சன்மார்க்க நெறிமுறைகளின்படி நல்லவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய ஐசுவரியங்களை பெரும்பாலும் நல்ல காரியங்களுக்காகத்தான் செலவழிக்கின்றனர். என்ற போதிலும் அவர்கள் தேவனை அறிந்திராதபடியினால் அவருடைய திட்டத்தைப் பற்றியும் எதுவும் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதை கீழ்ப்படுத்தி ஆண்டு கொண்டு, பண்படுத்தி காத்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். மனிதனிடம் இந்தப் பொறுப்பைத்தான் தேவன் கொடுத்திருந்தார்.

ஆதாமைப் போலவே எல்லோரும், தேவனை அறிந்திருக்கிற தேவபிள்ளைகள் கூட இன்றளவும் தேவனுடைய திட்டத்தை புரிந்துக் கொள்ளாதவர்களாக, அதை கோட்டைவிட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். அதனால் தேவனை அறியாத உலக மக்களின் ஆளுகைக்குள் உலகம் போய்விட்டது. அதாவது தலை நசுக்கப்பட்ட பிறகும் தனக்கு வல்லமையிருப்பதாக உலகமக்களை ஏமாற்றி தன்னுடைய கட்டுக்குள் வைத்திருக்கும் சாத்தானின் எல்லைக்குள் அவைகள் முடங்கிக் கிடக்கின்றன. அதனால் 90% உலக மக்கள் செழிப்பாக வாழ்கிறார்கள். ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் அடங்கிய பொதிவு ***Suitcase*** அவர்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. அவர்கள் அதைக் கொண்டு நல்ல காரியங்கள் செய்கிறார்கள், தானதர்மங்கள் செய்கிறார்கள், ஏழைகளுக்கு இரங்கிக் கொடுக்கிறார்கள், வாரியிறைக்கிறார்கள். மனிதர்களுக்கு மட்டுமல்ல மற்ற மிருக ஜீவன்களுக்காகவும் பல நல்ல காரியங்களைச் செய்கிறார்கள், காட்டு விலங்குகளைக் காப்பாற்ற பல முயற்சிகள் எடுக்கிறார்கள். காடுகள், மரங்கள் அழிந்து போகாமல் பாதுகாப்பு முயற்சிகள் நடத்துகிறார்கள். நிலம், நீர், காற்று எல்லாவற்றையுமே மாசு படாமல் பாதுகாக்க முயற்சிக்கிறார்கள்.

நல்லது தான், என்றாலும் உலகம் தோன்றி இன்றளவும் அவருடைய திட்டம் இந்தப் பூமியின் மீது நிறைவேறியிருக்கிறதா என்றால்; நிச்சயமாக இல்லவேயில்லை! சொல்லமுடியாத அளவுக்கு, நினைத்தாலே மனசு வெறுத்துப் போகும் அளவுக்கு உலகத்தின் நிலமை மோசமாகிக்கொண்டே போகிறது. தலைநசுக்கப்பட்ட ***coma stage (unconciousness)*** ல் இருக்கும் சாத்தான் பலுகிப் பெருகி தன் பலனினால் பூமியை நிரப்பி வைத்திருக்கிறான். ***Power failure*** ஆக அவன் ஜனங்களை தனக்கு கீழ்ப்படுத்தி ஆண்டுவருகிறான். பண்படுத்தாமல் விட்டுவிடப்பட்ட பூமி முள்ளையும் குறுக்கையும் முளைக்க வைக்கிறது.

இந்த பயங்கரமான பிரச்சனைகளை மாற்ற நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் இப்போதைய கேள்வி? மிக முக்கியமாக, அவசரமாக பதிலெழுதப்பட வேண்டிய கேள்வி! ... *"யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். ஏசா. 6:8."* ஆண்டவருடைய கேள்வியும் அது தான். நம்முடைய பதிலும் இதுவாகவே இருக்கட்டும். நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உண்டு, கடமை நம் தலை மேல் இருக்கிறது. நாம் தான் (நீயும் நானும்) போயாக வேண்டும், வேறு வழி கிடையாது. ஏனென்றால் இந்தப் பூமியில் நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும், ஆசீர்வதிக்கப்பட்டு எப்படி செழித்தோங்க வேண்டும் என்பதையும், ஐசுவரியங்களை தேவனுடைய திட்டத்திற்காக கொடுத்து (விதைத்து) அதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதையும் பற்றிய செயல் விளக்கத்தை ***(manual - guide - instructions) (demonstration )*** தேவன் நம்மிடம் மட்டும் தான் கொடுத்திருக்கிறார்.

அந்த ***manual*** தான் வேதாகமம் ***(Bible)!*** நம்முடைய தேவன் பிரமாணத்தின்படி செயல்படுகிற வர். பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் அதினதின் பிரமாணத்தின்படி இயங்கும்படியாகவே வைத்திருக்கிறார். விதைப்பு என்பதும் அந்த பிரமாணத்தில் ஒன்று. பூமியின் மீது தேவன் எல்லா ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிறார். ஆனால் அதை நாம் சும்மா எடுத்து விட முடியாது. விதைப்பு என்ற பிரமாணத்தை அந்த ஆசீர்வாதத்தின் மீது செயல்படுத்தித்;தான் அறுப்பு உன்ற ஒன்றை எடுக்க

முடியும். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் ... லூக். 6:38 என்பது தான் நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கான விதி முறை ***(principle - rule).*** ஆனால் இந்த வசனம் பெரும்பான்மையான தேவ ஜனங்களுக்கு புரியாத புதிராகவே இருக்கிறது. அண்ட சராசரங்களையும் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கிய தேவனுக்கு நாம் எதற்காக கொடுக்க வேண்டும்? நமக்கே அவர் தானே எல்லாவற்றையும் கொடுத்து வருகிறார். பூமியிலுள்ள எல்லாம் அவருக்கு சொந்தமானது தானே? அப்படியிருக்க நாம் கொடுத்து அவருக்கு என்ன ஆகப்போகிறது? என்பது போன்ற நியாயமான கேள்விகள் மனதில் தொடர்ந்து எழுந்த வண்ணம் இருக்கின்றன.

கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்... என்றால்; விதையுங்கள், அப்பொழுது அந்த விதைப்பின் பலன் அறுவடையாக உங்களுக்கு கிடைக்கும் என்பது தான். தேவன் நமக்காகத் தான் விதைக்கவேச் சொல்லுகிறார். அவருக்கு நாம் கொடுக்கும் எதுவுமே தேவையில்லை தான், பூமியிலுள்ள எல்லாம் அவருடையது! சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள். வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள். நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே. சங். 50: 11, 12, 13. இதுக்கென்ன சொல்றீங்க! நம்முடைய தசமபாகம், காணிக்கை, மற்றும் நான் செய்கிற நல்ல காரியங்கள், ஊழியங்கள், அது, இது எல்லாமே நமக்காகத் தானே தவிர அவருக்காக அல்ல! நான் எருதுகளின் மாம்சம் புசித்து, ஆட்டுக்கடாக்களின் இரத்தம் குடிப்பேனோ? சங். 50:14! (சிரிப்பு தான் வருகிறது). கறிக்குழம்பு வாசனை மூக்கைத் துளைக்குது; பரலோகத்திலல்ல நம்ப வீட்டுக் கிச்சனில் தான்!

நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் விதைக்கச் சொல்கிறார் என்ற சத்தியம் இந்த மரமண்டையில் ஏறுவதற்கு இத்தனைக் காலம் பிடித்தது! தேவன் வைத்திருக்கிற சகல வாழ்வாதாரங்களும், இம்மைக்குரிய ஆசீர்வாதங்களும், பணமும், பொன்னும், காரும், பங்களாவும் ... இன்னும் எதுவானாலும் நமக்கு இலவசமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய இராஜ்ஜியத்தில் பொருளாதாரம் கிடையாது. அதனால் அவரால் எதன் மேலும் விலையை எழுதி வைக்க முடியாது. ஆனால் தேவன் நமக்காக இலவசமாக வைத்திருக்கும் ஐசுவரியங்களை, செழிப்பைப் பெற்றுக் கொள்ள நாம் ஒரு விதிமுறையை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிறது. அதாவது நாம் விதைத்துத் தான் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; வேறு வழி கிடையாது.

விதைத்து, விளைய வைத்து, அறுத்து எடுப்பது தான் தேவனுடைய பிரமாணம் ***(theory, concept).*** பூமிக்கு எதையும் விளைவிக்கக்கூடிய தன்மை இயற்கையாகவே இருக்கிறது. ஆனால் நாம் அதற்குள் ஒரு தக்காளி விதையையோ, கத்தரி விதையையோ புதைத்து வைத்தால் தான் அது முளைத்து நமக்குப் பலனைத் தருகிறது. விதைத்தது ஒரு கம்பப்புல் விதை ஆனால் விளைந்ததோ பல ஆயிரம் கம்பப்புல்கள். விதைத்தது ஒரு கத்திரிக்காய் விதை, ஆனால் பலனாக கிலோ கணக்கில் கத்தரிக்காய்கள்! விவசாயி எல்லா கத்தரிக்காய்களையும் பறித்து விடுவதில்லை. ஒன்றிரண்டை செடியிலேயே போட்டு பழுக்க வைக்கிறான். பிறகு அதை எடுத்து, காயவைத்து விதைகளைப் பிரித்தெடுத்து; அடுத்த விதைப்பிற்காக அதை பத்திரப்படுத்தியும் வைக்கிறான். ஆசீர்வாத பிரமாணம் இப்படித்தான் வேலை செய்கிறது. நம்முடைய தேவன் மகா பெரிய தேவன் தான். இந்த பிரமாண்டமான உலகத்தில் டன் கணக்கில் ஐசுவரியங்களை வைத்திருக்கிறார் தான். என்றாலும் சும்மா அதை எடுத்துவிட முடியாது; விதைத்துத் தான் எடுக்க வேண்டும் என்ற விதிமுறையையும் (பிரமாணம்) கூடவே வைத்து விட்டார்.

பூமியின் மீது காணப்படுகிற இயற்கையான பிரமாணங்கள் எதையுமே நாம் மாற்ற முடியாது. அதுபோலவே இந்த விதைப்பும் அறுப்பும் என்ற பிரமாணத்தையும் மாற்ற முடியாது. அதனால் பிரமாணத்தை மாற்ற வீண் முயற்சிகளை எடுக்காமல்; அதோடு ஒத்திசைவாக செயல்பட்டு செழிப்படைய முயற்சிக்க வேண்டும். பிரமாணத்தின்படி நாம் விதைக்கும் போது நிச்சயமாக நாம்

ஆசீர்வதிக்கப்பட்டே தீருவோம்; ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் நமக்கு வந்து பலிக்கும், நாம் செழிப்படைய ஆரம்பிப்போம். செழிப்பு என்பது பணத்தை மட்டுமல்ல, நம்முடைய வெற்றி வாழ்வுக்கான சகல காரியத்தையும் குறிக்கிறது. நாம் இந்தப் பூமியின் மீது வெற்றியாக வாழ பணம் மட்டும் இருந்தால் போதாது. சுகம், பெலன், சமாதானம், சந்தோஷம், நிறைவு, பரிசுத்தம், ஞானம், அறிவு இப்படி பல காரியங்கள் தேவைப்படுகிறது. பொருளாதார ஆசீர்வாதமும் இதில் கூடவே வருகிறது.

இந்த பொருளாதார ஆசீர்வாதத்தை நாம் நிறைவாகப் பெற்றுக் கொண்டால் தான்; பூமியின் மீது தேவ திட்டத்தை நிறைவேற்ற முடியும். வெறுங்கையினால் முழம் போட முடியாது. அதனால் தான் தேவன் பொருளாதார ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் அதிக கவனமுள்ளவராக இருக்கிறார். அதற்கான வழிமுறைகளை நமக்குக் கற்றுக் கொடுத்து, அதைச் செய்யச் சொல்லி நம்மை உற்சாகப்படுத்துகிறார். நாம் விதைத்து தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பிரமாணத்தை, விளைவின் முதற்பலன், தசமபாகம், காணிக்கை முறைகளில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். இந்த மூன்றையும் தசமபாகம் என்ற ஒரே முறைமைக்குள் அடக்கி விடலாம். நம்முடைய சம்பாத்தியத்தின் முதற்பாகம் (10%) முதற்பலன் ஆகும். இதைத் தான் தசமபாகம் என்று வேதம் அழைக்கிறது. இதை காணிக்கை என்றும் சொல்லலாம். இந்த தசமபாகத்தைக் குறித்த தீர்க்கதரிசன வசனங்களை சற்று கவனிப்போம்:

நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப் போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும் என்கிறீர்கள். மல். 3:7 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாத்தை வருஷிக்கமாட்டேனோவென்று இதினால் என்னை சோதித்துப் பாருங்கள்... பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை... அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத் தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனே தசமபாகத்தைப் பற்றி சொல்லிய இந்த வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் காணப்பட்டாலும்; புதிய ஏற்பாட்டின் பிள்ளைகளாகிய நமக்காக தீர்க்கத்தரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது. நாம் செழித்தோங்கி; அதன் மூலமாக இந்தப் பூமியையும் செழிக்கச் செய்வதற்காக நம்மை ஊக்கப்படுத்தி, எழுப்பி விடுகிற வார்த்தைகளாக இவை கடந்து வருகின்றன. தசமபாகத்தைப் பற்றி பெரும்பாலும் சபையில் சரியான விழிப்புணர்ச்சி இல்லை. இதைக் குறித்த பிரசங்கங்கள் பெருமளவில் சொதப்பல்களாகவே இருக்கின்றன. சரியானபடி தன்னிலை விளக்கம் ***(presentation)*** இதற்குக் கொடுக்கப்படாத காரணத்தினால்; வேதத்தின் மிக முக்கியமான சத்தியம் ஒன்று மண் மூடிப் போனது! உலகளவிலான தேவ சபையில் சுமார் 20% தேவபிள்ளைகள் தான் தசமபாகம் செலுத்துகிறார்கள் என்று ஒரு கணக்கெடுப்பு சொல்லுகிறது.

ஆனால் அவர்களும் அதைக் குறித்த, சரியான வெளிப்பாட்டின்படி கொடுக்கவில்லை. நியாயப்பிரமாணத்தின்படி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கிறார்கள். பாஸ்டர் பாவம் கஷ்டப்படுகிறாரே என்று சிலர் கொடுக்கிறார்கள்! தேவாலய பராமரிப்பு நிதிக்காக சிலர் கொடுக்கிறார்கள். கொடுக்காவிட்டால் ஆண்டவர் தண்டிச்சிருவார் என்ற பயத்தினால் சிலர்! சுவிசேஷ ஊழியச் செலவுகளுக்கு பயன்பட்டுமே என்று சிலர் கொடுக்கிறார்கள். இன்னும் அநேக காரணங்கள் உண்டு. ஆனால் இவைகளில் எதுவுமே சரியானது கிடையாது. இவர்களின் விதைப்புக்கு பலன்

கிடைக்கிறது; இவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் தான். என்றாலும் இவர்களுடைய ஐசுவரியத்தினால் தேவனுடைய திட்டம் இந்தப் பூமியில் நிறைவேறுவதில்லை.

ஏனென்றால் இப்படிப்பட்டவர்கள் தசமபாகத்தைப் பற்றின சரியான வெளிப்பாடு இல்லாமல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டவர்கள். ஆதனால் தங்களுடைய ஆஸ்தியை தேவ இராஜ்ஜியத்தின் வேலைக்காக கொடுக்க நிறையவே யோசிக்கிறார்கள், தயங்குகிறார்கள். கொடுக்கிறார்கள், ஆனால் மிகவும் ***limited*** ஆக இருக்கிறார்கள். வாரியிறைக்க யோசிக்கிறார்கள்; ஏனென்றால் கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய ஐசுவரியம் குறைந்து தங்களுக்கும் பற்றாக்குறை வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். சிலர் வேண்டா வெறுப்பாகக் கொடுக்கிறார்கள், சிலர் எதுவுமே கொடுப்பதில்லை. அது மட்டுமல்லாமல் இவர்கள் விதைப்பிற்கு நூறு மடங்கான பலனையும் பெற்றுக் கொள்வதில்லை. தசமபாகத்தைப் பற்றிய சரியான விளக்கவுரையில்லாமல் இவர்கள் கொடுப்பதால்; மிகவும் குறைந்த சதவிகிதத்தில்தான் ***(ratio)*** இவர்களுடைய வருமானம் உயருகிறது.

தசமபாகமாக கொடுக்கிற பணத்திற்கு நூறு மடங்கு ஆசீர்வாதத்தை இவர்களால் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. அப்படி பெற்றிருந்தால் இந்நேரம் சபையின் தேவபிள்ளைகள் உலக ஐசுவரியவான்கள் பட்டியலில் உள்ளவர்களை நிச்சயம் முந்திச் சென்றிருப்பார்கள் ***(overtake).*** உலகப்பணக்காரர்கள் பட்டியலில் தேவபிள்ளைகளின் பெயர் முதலில் இடம் பிடித்திருக்கும். ஒரு சிலருக்கு இன்னொரு சந்தேகம்: தேவபிள்ளைகள் உலக பணக்காரர்களாக வேண்டுமென்ற நினைப்பது மிகவும் பேராசையில்லையா, இது கொஞ்சம் அதிகப்படியாகத் ***(too much)*** தெரியவில்லையா? உங்களுக்கு என்பது தான் அந்த சந்தேகம். நம்முடைய தேவன் எல்ஷடாய்; தேவைக்கும் அதிகமாகத் தருகிற தேவன், நாம் வேண்டிக்கொள்கிறதை விட அதிகமாகத் தருகிறவர், நிரம்பி வழியும்படி செய்பவர்.

ஏதேனில் இருந்த இரண்டேயிரண்டு மனிதர்களுக்காக நான்கு நதிகள் புறப்பட்டன. ஒரு கிணறு வெட்டிக் கொடுத்திருந்தாலே அவர்களுக்கு போதுமானதாயிருந்திருக்கும்! முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பேர், அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். அவ்விடத்திலே **பொன் விளையும்**.ஆதி. 2:11 எலியாவைப் போஷித்த, சாறிபாத் விதவையின் பாத்திரங்களில் எண்ணெய் வழிந்தோடிக் கொண்டேயிருந்தது! கானாவூர் கல்யாணவீட்டில் கற்சாடிகளில் ரசம் தேவைக்கும் அதிகமாக ஊற்றெடுத்தது! மீன்கள் அதிகமானதினால் பேதுருவின் வலை கிழிந்தது! ஐந்தாயிரம் பேர் சாப்பிட்ட பிறகும் அப்பமும் மீனும் மீதியாகி பல கூடைகளை நிரப்பின! இது தான் தேவனுடைய நெறிமுறை ***method!*** தேவனுடைய பிள்ளைகள் உலக பணக்காரர்களை முந்திச் சென்று முதலிடம் பிடிக்க வேண்டும் என்பது தான் தேவனுடைய சித்தம்! (?). இதில் எந்த விதமான சந்தேகமும் தேவையில்லை. அப்படி நடந்தால் தான் பூமியின் சகல ஐசுவரியங்களும் நம் ஆளுகைக்குள்ளாக வரும். அப்படி வந்தால் தான் தேவனுடைய திட்டம் ***(assignment)*** இப்பூமியில் வெற்றியடையும்.

பொருளாதாரம் இல்லாமல் உலக முழுவதுமாக பூரண சுவிசேஷத்தை அறிவிக்க முடியாது. ஜனங்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்தினால் மட்டும் போதாது; அவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்ளவும், விடுதலையாகவும் வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். உலக ஐசுவரியம் நம் வசப்பட்டால் தான் இவைகளெல்லாம் சாத்தியமாகும். நம் பலனால் பூமியை நிரப்ப வேண்டுமானால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும். பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய வேண்டுமானால் நாம் செழித்திருக்க வேண்டும். பண்படுத்தி காத்துக் கொள்ள ஆபிரகாமின் ஆசீர்வாதத்தில் நாம் வாழ வேண்டும். பணத்துக்கும் ஊழியத்துக்கும் சம்பந்தமில்லை என்று யார் சொன்னாலும்; அதை ஒரு காதில் வாங்கி இன்னொரு காது வழியாக விட்டு விடுங்கள்!

பிரகாசமுள்ள மனக்கண்களை பெற்றுக் கொண்டு, சத்தியத்தை அறிந்து, வெளிப்பாடுகளைப் பெற்றிருக்கும் புதிய உடன்படிக்கையின் விசுவாசிகளாகிய நாம் உலக ஐசுவரியவான்களின் பட்டியலில் மாத்திரமல்ல, சகல ரீதியிலும் எல்லாவற்றிலும் முன்னணியில் இருப்பது மிக மிக அவசியம் ***(world-***

***wide, world-class, world-famous).*** நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் இது நிச்சயம் சாத்தியமான ஒன்று தான்! தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை; அவரைப் போலிருக்கும் நம்மால் கூடாத காரியமும் ஒன்றுமில்லை. நம்மால் மட்டும் தான் பூமியின் மீது தேவனுடையத் திட்டத்தை வெற்றியாக செய்து முடிக்க முடியும். நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட தேவபிள்ளைகள்? அவர்கள் பரலோகம் போக மட்டும் தான் லாயக்கு! பரலோகம் போவது அவசியம் தான்; அது நல்லது தான். ஆனால் புகுந்த வீட்டைப் பற்றி எந்த கவலையும் இல்லாமல், அதற்கு எதுவுமே செய்யாமல், பொறுப்பில்லாமல் வெறும் சூட்கேசுடன் பிறந்த வீட்டுக்குத் (பரலோகம்) திரும்பும் சுயநலம் நிறைந்த, பல சீயோன் குமாரத்திகளைப் பற்றி தேவன் என்ன நினைப்பார்?

உலக ஐசுவரியங்களைத் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருக்கும் லட்சக்கணக்கான உலக ஐசுவரியவான்கள் தேவனுடைய திட்டத்தை பூமியின் மீது செய்யவில்லை. அவர்கள் நல்ல காரியங்களுக்காக விதைத்தாலும், தான தர்மங்கள் செய்தாலும், அவை தேவனுடைய நியமத்தின்படி கொடுக்கப்படாததினால்; அதனால் தேவனுடைய மனவிருப்பங்கள் நிறைவேறாமல் போனது. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்ட தேவபிள்ளைகள் மற்றும் பாரம்பரிய கிறிஸ்தவர்களின் கைகளிலிருக்கும் ஐசுவரியங்கள் சுவிசேஷம் பரவ ஓரளவுக்கு உதவியாயிருக்கிறது என்றாலும் பூரண சுவிசேஷம் பரவ அவை உதவியாயிருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தேவ ஜனங்கள் செழித்திருப்பதே தவறு என்று சொல்லும் சாபத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். (ஆனால் அவர்கள் ஓரளவுக்கு செழிப்புடன் தான் இருக்கிறார்கள்; ஆனால் மற்றவர்கள் பிச்சாண்டிகளாகவே இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்! ***(hypocritical act, two-faced)*** இந்தக் கூட்டத்தாரும் தேவனுடைய திட்டத்தில் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. தேவனுடைய வேலையைச் செய்ய இப்போது நம்மைத் தவிர வேறு ஆளில்லை. அதாவது வேதத்தைக்குறித்த இந்த அறிவு பெற்ற நாம் நல்லவர்கள், பெரீரீய்ய்யவர்கள் என்பதினால் அல்ல, நமக்கு தேவனுடைய ஜீவ ஆவியின் பிரமாணத்தின் வெளிச்சம் கிடைத்திருக்கிறது, நியாயப்பிரமாணத்தின் சாப இருளிலிருந்து வெளியே வந்து விட்டோம். நம்மால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும். அந்த அளவுக்கு தேவனுடைய பரிபூரணம், ஆளுமை, வல்லமை, மகிமை, பராக்கிரமம் எல்லாம் நமக்குள் கடந்து வந்திருக்கிறது.

அதனால் தான் இக்காலங்களில் நாம் செழிப்படைவதற்கான வழிமுறைகளை பரிசுத்தாவியானவர் மிகுந்த அக்கரையுடன் நமக்குக் கற்றுத் தருகிறார். தசமபாகம் – காணிக்கை – கொடுப்பது – விதைப்பது போன்றவை தான் அந்தப் பெரிய செழிப்பின் அறையை திறக்கும் மிகச்சிறிய சாவி! இது சாதாரண சாவியல்ல, விசுவாசத்தினால் இயங்குகிற சாவி! தேவனுடைய நியமத்தை நம்பி விதைக்கிறோம். நாம் விதைப்பதினால் அல்ல, தேவன் நம் மேல் வைத்த அன்பினால் இலவசமாக வைத்திருக்கும் எல்லாவற்றையும் எடுக்கும் வழிமுறைதான் இது என்று அறிந்து கொடுக்கிறோம்.

தசமபாகத்தை புதிய ஜீவ ஆவியின் பிரமாணத்தின்படி கொடுக்க வேண்டும். இதைக் குறித்த சரியான அறிவில்லாதபடி கொடுப்பதைவிட கொடுக்காமலிருப்பது நல்லது. ஏனென்றால் இப்படிப்பட்ட விதைப்புகளுக்கு சரியானத் தீர்வு ***result*** கிடைக்காது, மோசமான பலாபலன்கள் ***effects*** உருவாகவும் வாய்ப்புண்டு, நிறைவான முன்னேற்றம் ***outcome*** திருப்தியாக இருக்காது. புதிய பிரமாணத்தின்படி எப்படி கொடுப்பது? *“2 கொரி. 9:7–ன் படி கொடுக்கலாம். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். **(Each one should give, then as he has decided, not with regret or out of a sense of duty; for God loves the one who gives gladly.”*** இது தர்மகாரியங்களைக் குறித்து சொல்லப்பட்ட வசனம் என்றாலும்; எல்லாவிதமான விதைப்புகளுக்கும் இது பொருந்தும். நாம் செழித்திருக்க தேவன் நியமித்திருக்கும் தசமபாகம் என்ற பிரமாணத்தின் காரண காரியங்களை சரியானபடி ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் நிதானித்தறிந்து கொடுக்க வேண்டும். அந்தப் பிரசங்கியார் அப்படிச் சொன்னார், இந்த ஊழியக்காரர் இப்படிச் சொன்னார், எங்க பாஸ்டர் வேறெதையோ சொல்கிறார்... இப்படியெல்லாம் விஷயத்தைப் போட்டு குழப்பிக்கொண்டு

கொடுக்கக்கூடாது. சரியாகப் புரிந்து கொண்டோமானால், கொடுக்க யோசிக்க மாட்டோம்.

அரைகுறையாக புரிந்து கொண்ட விஷயத்தில் சந்தேகம் இருந்து கொண்டேயிருக்கும். சந்தேகம் என்றால் "இரு மனம்"***(double minded)*** என்று அர்த்தமாகிறது ***(Doubt - Double).*** இருமனமுள்ளவன் தேவனிடத்திலிருந்து எதையும் பெற்றுக் கொள்ளவே முடியாது. சந்தேகம் அவிசுவாசத்தை ஊக்குவிக்கிறது. விதைப்பு விசுவாசத்தின் அடிப்படையில் தான் செயல்படுகிறது. தசமபாகம் கொடுப்பது சரியானது தானா? அது நியாயப்பிரமாணமா? கிறிஸ்துவின் பிரமாணமா? கொடுத்தால் சாபம் வந்துவிட்டால் என்ன பண்றது? ஒரு வேளை அது சரியாக இருந்து; கொடுக்காமலிருந்தால் ஆசீர்வாதம் தப்பிப்போய் ***miss*** ஆகி விடுமே? எது சரி? ஒரே தலைவலியாக இருக்கே என்று புலம்பிக் கொண்டே கொடுத்தால்; விதை அசைய ஆரம்பிக்கிறது, விதை அசைந்தால் துளிர்விடாது. அப்படியே துளிர்விட்டாலும் தொடர்ந்து அது சந்தேகத்தினால் அசைந்து கொண்டேயிருப்பதால் கருகிப்போகிறது. பிறகென்ன பலன் ஒன்றுமில்லாமல் ***zero (nothing)*** ஆகிப்போகிறது. சந்தேகத்தினால் கொடுக்காமல் இருந்தாலும் அதே தீர்வு ***result*** தான்! காரணம் விதைக்கப்படவேயில்லை, பலன்? ***zero (nothing)*** ஒன்றுமில்லைதான்!

ஒரு எடுத்துக்காட்டாக ஒரு மூத்த போதகர் சொன்ன உதாரணத்தைக் கொண்டுவருகிறேன். ஒரு வறண்ட பாலைவனம் போன்ற ஒரு பகுதியில் ஒரு வழிப்பிரயாணி நடந்து போய்க் கொண்டிருந்தார். உச்சிவெயில் சுட்டெரித்தது, தாகத்தால் நாவறண்டது. ஓரிடத்தில், ஒரு அடித்து தண்ணீரை வரவழைக்கும் அடிபம்ப் ஒன்று காணப்பட்டது. அதற்கு பக்கத்தில் ஒரு பாட்டிலில் தண்ணீர் வைக்கப்பட்டிருந்தது. தண்ணீரை எடுத்துக் குடிப்பதற்காக வேகமாக வந்த வழிப்பிரயாணி கையை நீட்டிய போது அருகில் இருந்த ஒரு பலகையில் ஏதோ எழுதியிருப்பதைக் கவனித்தார். அதில்: **"இந்த பாட்டிலில் இருக்கிற தண்ணீரை பம்புக்குள் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். தண்ணீர் மட்டம் மிகவும் கீழாகப் போய்விட்டதால்; தண்ணீரை வரவழைக்க இப்படித்தான் செய்தாக வேண்டும். தேவையான அளவு தண்ணீரை அடித்து எடுத்த பிறகு மீண்டுமாக அந்த பாட்டிலில் தண்ணீரை நிரப்பி அதே இடத்தில் வைத்து விடுங்கள். அடுத்ததாக வருகிற பயணிக்கு அது மிகவும் தேவையாயிருக்கும்"** என்று எழுதப்பட்டிருந்தது.

காரியம் என்னவென்றால் தண்ணீர் பூமிக்கு கீழே காலன் கணக்கில் இருக்கிறது. அதற்கு எந்த விலையும் இல்லை, இலவசமாக சுரந்து கொண்டிருக்கிறது. ஆனால் அதை பைப் வழியாக வெளியே கொண்டு வர ஒரு பாட்டில் தண்ணீரை உள்ளே ஊற்ற வேண்டியதாயிருக்கிறது. அப்படி ஊற்றாவிட்டால் உள்ளே இருக்கிற தண்ணீர் மேலேறி வெளியே வராது. தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். உலகம் உருவாகும் முன்னதாகவே, நாம் பிறப்பதற்கு முன்னதாகவே நமக்கான ஆசீர்வாதத்தை இலவசமாக வைத்திருக்கிறார். ஆனால் அதை எடுத்துக் கொள்ளும் பொறுப்பை நம் கையில் விட்டிருக்கிறார். எப்படி எடுக்க வேண்டும் என்பதற்கான வழியையும் ***(formula)*** நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார். விதைப்பு என்ற பிரமாணத்தின் மூலமாக பூமியின் ஐசுவரியங்களை நாம் பெற்று அனுபவிக்க வழிவகைகளை ஆயத்தம் செய்திருக்கிறார். தசமபாகம் மூலமாக அந்த பிரமாணம் செயலாக்கம் ***(stimulate)*** பெறுகிறது.

விதைப்பும் அறுப்பும் என்ற பிரமாணத்தை மனிதன் தான் இயக்க வேண்டும்; தேவன் வந்து அதைச் செய்ய மாட்டார். பூமியின் மீது எத்தனையோ பிரமாணங்கள் இயங்கி வருகின்றன. பிரமாணங்களின் அடிப்படையில் தான் பூமியும், அதிலுள்ள சகல காரியங்களும் இயங்கி வருகின்றன. அதை மாற்ற முடியாது; அது அப்படித் தான்! எல்லாவற்றையும் சிருஷ்டித்த நம் தேவன் அவ்விதமாக நியமித்து வைத்து விட்டார். ஏன்? எதற்கு? என்ற கேள்வியெல்லாம் கேட்டுக் கொண்டு நிற்கக்கூடாது. பூமியின் மீது புவியீர்ப்பு பிரமாணம் இயங்கி வருகிறது; அதனால் மரத்திலிருந்து ஆலம்பழம் கீழே விழுகிறது. அது ஏன்? அது மேலே போனால் என்ன? என்று யாரும் கேள்வி கேட்பதில்லையே. அது போல் தான் இதுவும். தேவன் பூமியை நம் பொறுப்பில் விட்டிருக்கிறார். நம் பலனால் பூமியை நாம் தான் நிரப்ப வேண்டும். பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய வேண்டும், பண்படுத்தி

காத்துக் கொள்ள வேண்டும். கவனியுங்கள்: இதில் எல்லாமே நம் பகுதி தான்! ***(segment).*** இலவசமாக தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நாம் விதைக்காமல் சும்மா ஏன் எடுத்துக் கொள்ள முடிவதில்லை என்று இப்போது புரிந்திருக்கும்.

நாம் கொடுக்கிற தசமபாகம், காணிக்கைகள், தர்ம காரியங்கள், நல்ல காரியங்கள் எல்லாம் தேவன் வைத்திருக்கும் ஆசீர்வாத ஐசுவரியங்களுக்குள் போய் விதையாக விழுகிறது. அந்த விதை ஆசீர்வாதத்திலிருக்கும் சத்துக்களை இழுத்துக் கொண்டு முளைவிட்டு, துளிர்விட்டு வளர ஆரம்பிக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் பலனை நாம் பெற்றுக் கொள்கிறோம். ஒரு விதை போடப்படுகிறது; ஆனால் விளையும் போது அதில் 100, 1000, 10000 ***onward*** விதைகள் வெளிப்படுகின்றன. ஆசீர்வாத பிரமாணமும் இப்படித்தான் செயல்படுகிறது; இப்படித்தான் நாமும் செயல்பட்டாக வேண்டும்.

தேவனுடைய திட்டத்தை பூமியின் மீது நிறைவேற்றி முடிக்க வேண்டிய பொறுப்பிலிருக்கிற நாம் இன்னமும் விதைப்புக்கு எதிராக, தசமபாகத்துக்கு எதிராக வழக்காடு மன்றம், பட்டிமன்றம் ***(argument)*** நடத்திக் கொண்டேயிருப்போமானால் நம் செழிப்பு கைதவறிப் ***(miss)*** போய்விடும். அதனால் சுவிசேஷ வேலைக்குப் பணமில்லாமல் போய்விடும்; தேவனுடைய திட்டத்தில் சரிவு, தோல்விகள், பிரச்சனைகள் ***(flop)*** வந்து விடும். ***No! Not at all!*** இப்படியெல்லாம் ஆக விடக்கூடாது. அதனால் தேவனுடைய வார்த்தைகளுக்கு மரியாதை கொடுப்போம், நம் பங்கை ***portion*** செயல்படுத்துவோம், தசம பாகம் செலுத்துவோம், விசுவாச சாவியை எடுப்போம், பூட்டைத் திறப்போம், உள்ளே போவோம், அள்ளிக் கொண்டு வருவோம்! எப்படி அள்ளிக் கொண்டு வருவது என்பதை அவங்க இவங்களுக்கெல்லாம் சொல்லித் தருவோம்! அல்லேலூயா! ஆமென்!

*"... உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ... அப். 13:41*

***Take care, then, so that what the prophets said may not happen to you: ... for what I am doing today is something that you will not believe, even when someone explains it to you!"***

தொடர்ந்து வரும் ...